www.padippakam.com



பிள்ளையார் ஊர்வலம்:

## பார்ப்பனக் கும்பலின் இரட்டை நாக்கு!



இராமநாதபுரம் கலவரம்:

## தேவர் சாதி வெறியர்களின் அட்டூழியமும், குளிர் காயும் ஜெயா கும்பலும்

# புதிய ஜனநாயகம்

16 - 31 அக்டோபர் '98 □ ரூ. 4.00




## பா.ஜ.க.வின் 'சுதேசி'க்கு மக்கள் பலிகடா

படிப்பகம்

படிப்பகம்

# தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் வெட்டு!
## பா.ஜ.க.வின் சதித்தனம்

தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டுச் சலுகையை வெட்டிக் குறுக்கியுள்ளது பார்ப்பன பாசிச பாரதீய ஜனதா அரசாங்கம். புதிதாக வேலைக்குச் சேரும் போதும் பதவி உயர்வுக்குப் போட்டியிடும் போதும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வயது, பணிக் காலம், மதிப்பெண்கள், தனி நேர்முகத் தேர்வு எனச்சில சலுகைகள் இருந்தன. இட ஒதுக்கீட்டில் நிறைவு நிலை அடையும் வரை இச்சலுகைகள் வழங்கப்படவேண்டும். இதை மைய அரசு நீக்கி விட்டது.

ஏற்கனவே, தாழ்த்தப்பட்ட / மலைச்சாதிப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு நிரப்பப்படுவதில்லை. குறிப்பாக வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றிலும் மத்திய, மாநில அரசுப் பணிகளிலும் தகுதியான நபர்கள் இல்லை எனக் கூறி, பார்ப்பன, மேல்சாதிப் பிரிவினர் ஆயிரக்கணக்கான இந்த வேலை வாய்ப்புகளை அபகரித்தே வந்துள்ளனர். தாழ்த்தப்பட்டோர் விரோத நடவடிக்கைகளில் முதலிடம் வகிக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் இதை உடனே நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

தாராளமயம் - தனியார்மயம் - உலகமயக் கொள்கையில் எந்த இடஒதுக்கீடும் அர்த்தமற்றுப் போகும் என்பதே உண்மை. ஆயுள் காப்பீட்டுத் துறையை தனியாருக்கு பா.ஜ.க. அரசு தாரை வார்க்க உள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இயங்கும் தாழ்த்தப்பட்டோர் நலச் சங்கம் தாராளமயத்தையும் எதிர்த்துப் போராடாமல், இட ஒதுக்கீடு - சாதி நலன் என்கிற குறுகிய வட்டத்திற்குள் மட்டுமே நிற்கிறது. சி.பி.எம் சார்புடைய தொழிற்சங்கம் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு வெட்டப்படுவதை எதிர்த்து பெயரளவிற்கு சில நிமிடங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியது. எல்.ஐ.சி. ஊழியர் சங்கம், தாழ்த்தப்பட்டோர் விடுதலை என்பது 'உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழைப்பவனுக்கே அதிகாரம்' என்கிற புதிய ஜனநாயகப் புரட்சியில் தான் உண்மையாகும் எனப் பிரச்சாரம் செய்து, 3.9.98 அன்று மதிய உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இதில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் இணைச் செயலர் தோழர். தங்கவேலு, முன்னணியாளர் தோழர் இளங்கோ சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர். பார்ப்பன மதவெறி பா.ஜ.க. அரசு 'மனு தர்மத்தை' நிலைநாட்டுவதை அம்பலப்படுத்தி முறியடிக்க அறைகூவினர்.

— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.

# சமத்துவபுரமா? சமாதிகளா?

தமிழகம் முழுவதும் சமத்துவபுரங்களை நிறுவுவது என முதல்வர் கருணாநிதி முனைப்போடு உள்ளார். ஆனால், உடன்பிறப்புகளும் அதிகார வர்க்கக் கும்பலும் கூட்டுச் சேர்ந்து, இதில் அடிக்கும் கொள்ளைகளுக்கும் முறைகேடுகளுக்கும் கணக்கே இல்லை. முதல்வரோ இவற்றைக் கண்டு கொள்வதில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ஒரு செய்தி.

தேனி மாவட்டம் - போடி வட்டம், இராசிங்காபுரம் கிராமத்தில் சமத்துவபுரம் உருவாக்கி, 100 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டது. ஒரு வீட்டுக்கு ரூ. 35,000/- என 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இராசிங்காபுரம், மல்லிங்காபுரம், போடி என மூன்று ஊர்களிலிருந்து 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். ரூ. 35,000/-க்குள் தரமான வீடு கட்டுவது சாத்தியமில்லை என்பதால், தெரிவு செய்த பயனாளிகளை வைத்துக் கட்டிட வேலைகள் செய்தனர்.

கட்டிட ஒப்பந்தக்காரர் கட்டுமானப் பணிகளில் மோசடி செய்ததை பயனாளிகள் எதிர்த்தனர். காற்று அதிகமாக வீசும் இப்பகுதியில், சராசரிக்கும் நான்கைந்து மடங்கு அதிகமாக மணலைக் கலந்து கட்டுவதால் வீடு இடிந்து விழுவது உறுதி. இந்த முறைகேட்டை வட்டாட்சியரிடம் கூறினால் சரியாகும் என பயனாளிகள் முறையிட, வட்டாட்சியர் பரமசிவம் பயனாளிகளைப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டார்.

புதிதாக ஒரு பட்டியல் தயாரிக்கும் பரமசிவம், ரூ. 3,700/- கட்டினால்தான், பயனாளிகள், பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என வசூல் வேட்டையும் நடத்தி வருகிறார். ஏற்கனவே 100 பேரைப் பயனாளிகள் எனக் கூறி, இலவசமாக உழைப்பைத் திருடிக் கொண்டு, இப்படி இலஞ்ச-ஊழல் மோசடி செய்வது போடி வட்டாட்சியர் மட்டுமின்றி, தேனி மாவட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர், உதவிச் செயற் பொறியாளர், மாவட்ட வருவாய் அதிகாரி, ஒப்பந்தக்காரர்களும்தான்.

இதை அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரம் வெளியிட்டு, சுவரொட்டி மூலம் மக்களை அணிதிரட்டி வருகிறது வி.வி.மு. வட்டாட்சியரின் தரகனாகச் செயல்படும் 'பச்சோந்தி குமரேசன்', வீடு கட்டுவதில் கலவை 1:20 என்பது உண்மையே' என போடி வி.வி.மு தோழர் மாசானத்திடம் ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளார்.

— விவசாயிகள் விடுதலை முன்னணி, போடி.

# மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சிலின் மாநிலக் கருத்தரங்கம்

அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க மக்களிடமும் சமூகப் பற்றுள்ளவர்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்த, மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சில், 29.8.98 அன்று திருச்சியில் மனித உரிமைகள் பற்றிய மாநிலக் கருத்தரங்கமொன்றை நடத்தியது.

மனித உரிமைப் பாதுகாப்பு கவுன்சில் தலைவர், வழக்கறிஞர் ம.கி. சோழர் தலைமையில் கருத்தரங்கு நடந்தது. ம.உ.பா.க.வின் செயலாளர் வழக்கறிஞர் போஜகுமாரும் வழக்கறிஞர் சிவக்குமாரும் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

பொது சிவில் சட்டம் என்ற பெயரில் 'மனு தர்மத்'தையே சட்டமாக்க உள்ள பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகளை முறியடிக்க அறை கூவினார் வழக்கறிஞரும் ம.க.இ.க செயல் வீரருமான கதிரவன் அவர்கள்.

தடா கொடுமையை அனுபவித்த வழக்கறிஞர் மருதநாயகம், தமிழக 'பொடா', தடாவைவிடக் கொடியது என்பதை திரை கிழித்தார். இன்றுள்ள தொழிற்சங்க, தொழிலாளர் நலச் சட்டங்கள் எப்படி தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகளுக்குச் சேவை செய்கின்றன என்பதை புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலர் தோழர் சுப. தங்கராசு அம்பலப்படுத்தினார்.

காவல்துறை அப்பாவி மக்களைக் கைது செய்யும் போது, அதை எப்படி எதிர் கொள்வது என வழக்கறிஞர் பொன். சேகர் எளிமையாக விளக்கினார். மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சிலின் துணைத் தலைவர் எச். சையத் மதானி, மனித உரிமை மீறலின் போது படித்தவர்களின் கடமைகளை வலியுறுத்தினார்.

வழக்கறிஞர் திரு. கங்கைச் செல்வன் போலீசு கொடுமை பற்றி வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடத்தினார். ம.க.இ.க.வின் மையக் கலைக்குழு எழுச்சிமிகு கலை நிகழ்ச்சி நடத்தியது.


www.padippakam.com

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 13

இதழ்: 21 - 23

16 செப்.'98 - 31 அக்.'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# பீகார் ஆட்சிக் கலைப்பு விவகாரம்: பா.ஜ.க.வின் பதவி வெறிக் கூத்தும்! லல்லுவின் 'தியாகி' நாடகமும்!!

இந்து வெறியர்கள் இரட்டை நாக்குப் பேர்வழிகள். அரசியல் சட்டப் பிரிவு 356-ஐ ஏவி, எந்தவொரு மாநில அரசையும் கலைக்க மாட்டோம் என்று நாடாளுமன்றத்திலேயே பலமுறை வாக்குறுதி கொடுத்த இந்து வெறியர்கள், கடந்த மாத மத்தியில் எதிர்க்கட்சி ஆளும் பீகார் மாநில அரசைக் கலைக்க அரசுத் தலைவரிடம் பரிந்துரை செய்து, தமது யோக்கியதையைப் பறைசாற்றியுள்ளார்கள். ஆளுநர் ஆட்சியைப் பிரகடனம் செய்யக் கோரும் இப்பரிந்துரையை மறுபரிசீலனை செய்யுமாறு அரசுத் தலைவர் நாராயணன் திருப்பி அனுப்பியதும், இப்போது இஞ்சி தின்ற குரங்காக நிற்கிறார்கள். பீகார் அரசைக் கலைக்க இந்துவெறிக் கூட்டணியிலேயே ஆதரவற்ற நிலையும் புதிய பேரங்களும் ஏற்பட்டதாலும், எதிர்க்கட்சிகள் கூட்டாக ஆட்சிக் கலைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் இறங்கியதாலும், தனது பாசிச நோக்கத்தை தற்காலிகமாக தள்ளி வைத்து விட்டு, இப்பரிந்துரையை அரசுத் தலைவரிடம் மீண்டும் வலியுறுத்த மாட்டோம் என்று பாரதீய ஜனதா மாய்மாலம் செய்கிறது. ஒருபுறம் கட்சித் தலைவர் குஷாபாகு தாக்கரே மூலம் பீகார் அரசைக் கலைத்தே தீருவோம் என்று அச்சுறுத்திக் கொண்டே, மறுபுறம் அரசியல் சட்டப் பிரிவு 356-ஐ ஏவுவதைப் பற்றி தேசிய விவாதம் நடத்தலாம் என்று பாரதீய ஜனதா பசப்புகிறது.

ஆட்சிக் கலைப்பு விவகாரத்தில் பாரதீய ஜனதா மட்டுமல்ல; தனது மனைவியை பினாமி முதல்வராகக் கொண்டு பீகாரை ஆளும் ராஷ்டீரிய ஜனதா தளத் தலைவர் லல்லு பிரசாத் யாதவ், தனது ஊழல் - கிரிமினல் குற்றங்களை மறைக்க நடத்திய பிழைப்புவாத அரசியல் சூதாட்டமும் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

லல்லுவின் ஆட்சியை மட்டும் கலைத்துவிட்டு, பீகார் சட்டமன்றத்தை முடக்கி, கட்சிகளை உடைத்து, குதிரை வியாபாரம் நடத்த இந்துவெறி ஆட்சியாளர்கள் துடித்துக் கொண்டிருந்த நேரத்தில், லல்லு வேறொரு திட்டத்துடன் அரசியல் சூதாட்டக் காய்களை நகர்த்தினார். ஆட்சியைக் கலைத்தாலும் கலைக்காவிட்டாலும், பீகாரின் ஐக்கியத்துக்காக நின்ற மாபெரும் வீரராக தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டு, ஊழல் - கிரிமினல் குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது. பீகாரின் தெற்கு மாவட்டங்களைப் பிரித்து ''வனாஞ்சல்'' என்ற புதிய மாநிலத்தை உருவாக்கும் மைய அரசின் தீர்மானம் பீகார் சட்டசபையில் விவாதத்துக்கு வந்தபோது, அதுவரை ஜார்கந்த் எனப்படும் வனாஞ்சல் மாநில உருவாக்கத்தை ஆதரித்து வந்த லல்லு, இப்போது திடீரென எதிர்ப்பு தெரிவித்தார். ''பீகாரை உடைக்க சதி செய்கிறார்கள்; எனது பிணத்தின் மீதுதான் வனாஞ்சல் மாநிலம் உருவாகும்'' என்று சவடால் அடித்து, புதிய அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தார். இதைத் தொடர்ந்து லல்லுவின் கூட்டணிக் கட்சியான ஜார்கந்த் முக்தி மோர்ச்சா, கூட்டணியிலிருந்து விலகி, லல்லு மனைவியின் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டது.

இப்படி நடக்கும் என்று லல்லு அறியாததல்ல; ஜார்கந்து கட்சி விலகியதால் தனது பினாமி ஆட்சிக்கு ஆதரவு குறைந்து நெருக்கடி ஏற்பட்டாலும், எதிர்காலத்தில் வடக்கு - மத்திய பீகாரில் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளும் உத்தியோடுதான் அவர் இந்தக் கூத்தை அரங்கேற்றினார். ஏனெனில், தெற்கு பீகார் மாவட்டங்களைக் கொண்ட வனாஞ்சல் மாநிலம் உருவானால், லல்லுவுக்கு அரசியல் ரீதியாக ஆதாயம் ஏதுமில்லை. கடந்த தேர்தலில் 'இடது' சாரிகள் ஆதரித்த போதிலும், தெற்கு பீகாரின் 82 தொகுதிகளில் 14 தொகுதிகளில்தான் லல்லுவின் கட்சி வெற்றி பெற முடிந்துள்ளது. இனி அந்த அளவுகூட வெற்றி பெற முடியாத அளவுக்கு, தெற்கு பீகாரில் லல்லுவின் கட்சி பிளவுபட்டு, செல்வாக்கிழந்து நிற்கிறது. விவசாயத்தை மட்டுமே சார்ந்துள்ள வடக்கு - மத்திய பீகார் மக்கள் ஆண்டு தோறும் வெள்ளம் - வறட்சியால் பாதிக்கப்பட்டு, வறுமையில் உழலும் அவலம் தொடரும் அதே சமயம், தெற்கு பீகார் தாதுவளம் கொண்ட தொழில் மையமாக உள்ளது. அதை இழந்தால் பொருளாதார ரீதியாக பீகார் மேலும் பாதிக்கப்படும் என்று மக்களை ஆத்திரமூட்டி ஆதாயமடைவது; தெற்கு பீகார் பிரிக்கப்பட்டு வனாஞ்சல் மாநிலம் உருவானாலும் பீகாரின் ஐக்கியத்துக்காக நின்ற போராளியாக காட்டிக் கொண்டு வடக்கு - மத்திய பீகாரில் தனது செல்வாக்கை நிறுவுவது என்பதே அவர் நோக்கம்.

எதிர்பார்த்தபடியே ஜார்கந்து கட்சி ஆதரவை விலக்கிக் கொண்டதும், மைய அரசின் தரகரான ஆளுநரைக் கொண்டு பீகாரில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டி ஆட்சியைக் கலைக்க இந்து வெறியர்கள் கிளம்பினர். ஆனால் வனாஞ்சல் மாநிலப் பிரிப்புக்கு எதிரான தீர்மானத்திலும், தனது பினாமி ஆட்சிக்கு நம்பிக்கை வாக்கு கோரும் தீர்மானத்திலும் காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத ஆதரவுடன் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்று லல்லு கும்பல், இந்து வெறியர்களின் நாற்காலி கனவைத் தகர்த்து விட்டது. மற்றபடி, சட்டமன்ற அரசியல் அராஜகத்தை, சாதகமாக்கிக் கொண்டு ஆட்சிக் கலைப்பு சூதாட்டப் போட்டியில் இந்து வெறியர்களை வீழ்த்திவிட்ட லல்லுவைச் ''ஜனநாயக சிற்பி''யாகக் கருத முடியாது. 'சூத்திர' ஆட்சி

படிப்பகம்

என்று லல்லு கும்பலின் ஊழல் - கிரிமினல் குற்றங்களை நியாயப்படுத்தவும் முடியாது.

பீகார் விவகாரத்தைப் போலவே, சட்டப்படியான, தேர்ந்தெடுக்கப்பட்ட, பெரும்பான்மை பலம் கொண்ட எதிர்க் கட்சி ஆளும் மாநில அரசுகளை அச்சுறுத்துவதும், மைய அரசின் குழுவை அனுப்பி பீதியூட்டுவதும், 356-ஆவது பிரிவை ஏவி ஆட்சியைக் கலைத்து, ஆளுநர் ஆட்சியைப் பிரகடனம் செய்வதும் நூற்றுக்கும் மேற்பட்ட முறை நடந்துவிட்டன. எதிர் கட்சி அரசுகளை மட்டுமல்ல; மைய அரசு தனது நேரடி இராணுவ பயங்கரவாத ஆட்சியை நிறுவும் போதும் இந்த 356-ஆவது பிரிவு ஏவப்பட்டுள்ளது. தற்போது அரசியல் ஆதாயத்துக்காக 356-ஆவது பிரிவை ஏவி, பீகார் அரசைக் கலைப்பதை எதிர்க்கும் காங்கிரசு பாசிஸ்டுகள், அச்சட்டப்பிரிவை அறவே நீக்க வாதிடவில்லை.

வலுவான மைய அரசுக்காக வலிந்து நிற்கும் தேசியக் கட்சிகள், 356-ஆவது பிரிவை ஆதரிப்பதில் வியப்பில்லை. ஆனால், மாநில சுயாட்சி பேசி, இந்தப் பிரிவையே அகற்ற வாதிடும் தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகளும், போலி இடது சாரிகளும் கூட, இந்தப் பிரிவைப் பயன்படுத்துவதில் சந்தர்ப்பவாதமாகவும் முரண்பாடாகவுமே நடந்து கொள்கின்றன. குறிப்பாக, மாநிலக் கட்சிகளே ஐக்கிய முன்னணியாக ஆட்சி செய்த போதிலும், இச்சட்டப் பிரிவை அகற்ற முயற்சி செய்யவில்லை. இப்போது 356-ஆவது பிரிவை நீக்கக் கோரும் கருணாநிதி கூட, ஒரு மாநில அரசு தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் இப்பிரிவை ஏவுவது பற்றி பரிசீலிக்கலாம் என்றுதான் கூறுகிறார்.

மொத்தத்தில் எல்லா வண்ண ஓட்டுக் கட்சிகளும் தமக்குத் தேவையான போது பயன்படுத்தும் ஆயுதமாகவே 356 உள்ளது. அதே சமயம் நாடாளுமன்ற போலி ஜனநாயக அரசியலமைப்பு முறையின் முக்கிய அங்கமாகவும் உள்ளது. அதை நீக்கிவிட்டால் சட்டபூர்வ ஆயுதத்தை மைய அரசும் ஆளும் வர்க்கங்களும் இழப்பதாகிவிடும்; பின்னர் நேரடி வன்முறை ஆதிக்கத்தால் மட்டுமே நாடாளுமன்ற அரசியலமைப்பைக் கட்டிக் காக்க வேண்டியதாகிவிடும்; இது நாடாளுமன்ற மாயைகளைத் தகர்த்து விடுவதோடு, தேசிய இனங்களின் போராட்டத்தைத் தூண்டவும் அவை வளரவும் அனுமதிப்பதாகிவிடும் என்பதாலேயே எல்லா ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும் இப்பிரிவை அகற்றுவதில் உறுதியாக நிற்பதில்லை. இந்த மோசடிகளையும், நாடாளுமன்ற சர்வாதிகார அரசியலமைப்பையும் அம்பலப்படுத்தி முறியடிப்பதும், அனைத்து தேசிய இனங்களும் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய புதிய ஜனநாயகக் குடியரசை நிறுவுவதும்தான் இதற்குத் தீர்வாக முடியும்.

## பிள்ளையார் ஊர்வலம் - இராவண லீலா

# இந்து வெறியர்களின் இரட்டை நாக்கு

இந்து முன்னணிக்குப் போட்டியாகத் தோன்றியிருக்கும் பாரத் இந்து முன்னணி என்ற இந்து மதவெறி அமைப்பு, சென்னையில், புளியந்தோப்பு என்ற பகுதியில் நிறுவியிருந்த 36 அடி உயர பிள்ளையார் சிலையை அப்படியே எடுத்துப் போய் கடலில் கரைக்க முடியாமல், பிள்ளையாரின் தலையை வெட்டியும், உடலை ஆக்சா பிளேடால் கண்ட துண்டமாக அறுத்தும், ''போஸ்ட் மார்ட்டம்'' செய்யப்பட்ட பிணத்தைப் போல, அள்ளிப் போட்டுக் கொண்டு போய் கடலுக்குள் தூக்கி எறிந்தது.

இந்து மதவெறி அமைப்புகள் சென்னையின் பல பகுதிகளில் நிறுவியிருந்த உயரமான பிள்ளையார் சிலைகளை மாட்டு வண்டிகளில் வைத்து ஊர்வலமாக எடுத்து வரும்பொழுது, வண்டிகளுக்கு முட்டுக் கொடுப்பதற்கு, அக்கம் பக்கத்து வீடுகளில் கடலில் கரைப்பதாகக் கூறி வாங்கிய சிறிய பிள்ளையார் சிலைகளையே, முட்டுக் கட்டைகளாகப் பயன்படுத்தின.

''கிரேனை''க் கொண்டு தூக்கி, கடலில் போடப்பட்ட பிள்ளையார் சிலைகள், கடல் நீரில் கரையாமல், கரையில் ஒதுங்கிய பொழுது, அதைக் காலால் எட்டி உதைத்தும், அதன் மீது ஏறி நின்றும், இந்து பக்தர்கள் வணங்கிய பிள்ளையாரை, இந்து மதவெறியர்கள், சாலையில் கிடக்கும் குப்பையைப் போன்ற கேவலமான, கேலிக்குரிய பொருளாக ஆக்கிவிட்டனர்.

இந்து மதவெறியர்கள் பிள்ளையாரின் மீது காட்டிய இந்த பக்தி, பெரும்பாலான இந்துக்களையே முகம் சுளிக்க வைத்துவிட்டது; இந்து மதவெறியர்களின் இந்த பக்தி வேடத்தைக் கண்டித்தும், பிள்ளையார் ஊர்வலத்தின் பின்னே இருக்கும் அரசியலை அம்பலப்படுத்தியும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களே தினசரி செய்தித்தாள்களில் கடிதங்கள் எழுதி, தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

இந்து முன்னணி, பாரத் இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி நடத்தும் பிள்ளையார் ஊர்வலத்திற்கு எதிர்ப்பு வருகிறதென்றால், பார்ப்பனக் கும்பலுக்குத் தூக்கம் வருமா? இந்து மதம், இந்துக் கடவுள்கள், இந்து மதச் சம்பிரதாயங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள இந்து பக்தர்கள்தானே ஆதங்கப்பட்டு எழுதியுள்ளனர் என்ற இங்கிதம் கூட இல்லாமல், ''இந்துயிசத்தின் சாரம், இந்து மத பூசையின் குறிபொருள் - இவை பற்றியெல்லாம் தெரியாமல் செய்திகளை வெளியிடுகிறீர்கள். பூசையில் இருக்கும் போதுதான் அதில் கடவுள் இருக்கிறார்; பூசை செய்யப்படும் நேரம் வரை அந்தச் சிலைகள் புனிதமானவை. அதன் பின், அதில் கடவுள் இல்லை; அது புனிதமானதும் இல்லை.''

''பூசை முடிந்து தெருவில் ஊர்வல



இந்து பக்தர்கள் வணங்கி வழிபட்ட பிள்ளையாரின் மீது ஏறி நின்று கொண்டு, அக்கடவுள் சிலையைத் துண்டு துண்டாகக் கூறுபோடும் இந்து மதவெறியர்களுக்கு, பக்தி, புனிதம் என்பதெல்லாம் அரசியல் இலாபத்துக்குத்தான்.



www.padippakam.com

www.padippakam.com

மாக வரும் பொழுது, அந்தச் சிலை எதனால் செய்யப்பட்டிருந்ததோ, அந்த ஜடப் பொருள்தான் அது! அந் தச் சிலை கல்லினால் செய்யப்பட்டி ருந்தால், அது வெறும் கல்; களி மண் ணால் செய்யப்பட்டிருந்தால் அது வெறும் களிமண்; பிளாஸ்டர் ஆஃப் பாரிசால் செய்யப்பட்டிருந்தால் அது வெறும் பிளாஸ்டர் ஆஃப் பாரிசுதான்'' என்ற பொருள் தரும்படி அடுத்த நாளே கடிதம் எழுதி, அப்பாவி இந் துக்களின் மனம் புண்படும்படி ஆட் டம் போட்ட இந்து வெறியர்களின் கேலி கூத்துகளுக்கு, பார்ப்பனக் கும் பல் நியாயம் கற்பித்தது.

தெருவில் நடந்துபோன அப் பாவி இந்துவெல்லாம், கடவுளாக நினைத்து வழிபட்ட பிள்ளையார் சிலையை, இந்து மதவெறிக் கும்பல் வெட்டியதும், அறுத்ததும், செருப்புக் காலால் மிதித்ததும் இந்து மத சாஸ்தி ரப்படி தவறானதல்ல; இதனால் இந்து மத பக்தர்கள் மனம் புண்படத் தேவையில்லை என நியாயப்படுத்தும் பார்ப்பனர்கள், பெரியார் இராமர் படத்தை எரித்த போதும், திராவிடக் கட்சியினர் இராவண லீலா என்ற பெயரில் இராமனின் உருவ பொம்மையை எரித்த போதும், மக் கள் கலை இலக்கியக் கழகத்தினர் இராமன் படத்தைக் கொளுத்திய போதும், இதே நியாயத்தை பேசுவதில்லையே!

இந்து முன்னணியோ பக்தி, புனிதம், இந்து கலாச்சாரம் என்று மக்களிடம் கூறிக் கொண்டே, பிள்ளையார் சிலைகளை அலங்கோலப்படுத்தியது; அவமதித்தது. பெரியாரும், மற்ற பிறரும் தங்கள் கையில் இருந்த இராமன் படங்களுக்கு புனிதம் இருப்பதாகக் கூறி, மக்களை ஏமாற்ற வில்லை. வெளிப்படையாகவே நாத்திக அரசியலையும், இந்து மதவெறி எதிர்ப்பு அரசியலையும் பேசித்தான், அதனைச் செருப்பால் அடித்தார்கள்; தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

''இந்து மத சாஸ்திரங்களின்படி நிறு வப்பட்டு, பூசை செய்யப்பட்டு, வணங்கப் பட்ட பிள்ளையார் சிலைகள், பூசை முடிந்து தெருவுக்கு இழுத்து வரப்பட்ட பின், அதிலிருந்து கடவுள் மறைந்து விடுகி றார். தெருவுக்கு இழுத்து வரப்பட்டவை, இந்து மத சாஸ்திரங்களின்படியே, அவை வெறும் களிமண் சிலைகள்தான்; அல்லது பிளாஸ்டர் ஆஃப் பாரிசால் செய்யப்பட்ட உருவ பொம்மைகள்தான். அதை இந்து முன்னணிக் காலிகளும், இன்னபிற இந்து மதவெறி அமைப்புகளும் கண்ட துண்ட மாக அறுக்கலாம்; காலால் மிதிக்கலாம். அச்சிலைகளில் இருந்த கடவுள் மறைந்து விட்டதால், ஊர்வலத்தின் பொழுது அந்த உருவ பொம்மைகளுக்கு நேரிட்ட அவ லங்களைக் கண்டு, இந்து பக்தர்கள் பதை பதைக்கத் தேவையில்லை. இதுதான் பார்ப் பனக் கும்பல் கற்பிக்கும் நியாயம்!



**இந்து முன்னணியின் அணுகுண்டு விநாயகர்: இந்துக்கள், இவரிடம் தங்கள் துன்பம் தீர வேண்டுவதா? இல்லை, பாகிஸ்தான் மீது குண்டு போடச் சொல்லி வேண்டுவதா?**

ஆகம விதிகளின்படியே, சிற்பி ஒரு வன் கடவுள் சிலையைச் செதுக்கியவுட னேயே, அதற்குள் கடவுள் புகுந்துவிடுவ தில்லை. பார்ப்பனர்கள் மந்திரம் ஓதி, அந்த கல் சிலைக்கோ அல்லது பொன் சிலைக்கோ சக்தி ஏற்றிய பின்தான் அது கடவுள் சிலை; புனிதமானது. பெரியாரின், மற்ற பிறரின் கைகளில் இருந்த இராமர் படங்களுக்கோ, உருவ பொம்மைக ளுக்கோ, யாரும் மந்திரம் ஓதி சக்தி ஏற்ற வில்லை. எனவே, பார்ப்பனர்களின் ஆகம விதிகளின் படி பார்த்தால் அந்தப் படங்க ளில் / உருவ பொம்மைகளில் கடவுள் கிடையாது.

இந்து மத சாஸ்திரங்களின்படி நிறு வப்பட்டு, பூசை செய்யப்பட்டு, வணங்கப் பட்ட இந்து மதவெறியர்களின் பிள்ளை யார் சிலைகள், தெருவுக்கு இழுத்து வரப் பட்டபின் வெறும் உருவ பொம்மைகளாகி விடுகின்றன. ஆனால், பார்ப்பனர்களின் ஆகம விதிகளின் படி கடவுளாகக் கருத முடியாத படத்தையும் / உருவ பொம்மைக ளையும் பெரியாரும், மற்ற பிறரும் தெரு வுக்குக் கொண்டு வந்து, பார்ப்பன ஆதிக் கத்தையும், இந்துமதவெறி அரசியலை அம்பலப்படுத்தும் அரசியல் நடவடிக்கை யாக, அந்தப் படங்களை / உருவ பொம் மைகளைச் செருப்பால் அடிக்கும் பொழுது / தீயிட்டுக் கொளுத்தும் பொழுது, பார்ப்பனக் கும்பல் பிள்ளையார் துண்டு துண்டாக்கப்பட்டதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்ததைப் போல, கையைக் கட்டிக் கொண்டு இருப்பதில்லை.

''அந்தப் படங்களுக்குள் / உருவ பொம்மைகளுக்குள் கடவுள் இருப்பதாக வும், இந்துக் கடவுள்களை அவமதிக்கிறார் கள் என்றும், இந்து பக்தர்களின் மனத்தைப் புண்படுத்துகிறார்கள் என்றும் கூப்பாடு போட்டு, அப்பாவி இந்துக்களைக் கலவரத்தில் இறங்கும்படி தூண்டி விடுகிறார்கள்.

ஏன் இந்த இரட்டை நாக்கு? பார்ப்பானுக்கு ஒரு நியாயம்; பார்ப் பான் அல்லாதவனுக்கு ஒரு நியாயம் என்ற மனுதர்ம அரசியலின் நீட்டிப்பு தானே இது! பா.ஜ.க., இந்துக்கள் மத் தியில் அரசியல் செல்வாக்குப் பெறு வதற்காக நடத்தப் பெறும் பிள்ளை யார் ஊர்வலங்களில், இந்து மத வெறியர்கள் பிள்ளையார் சிலை களை அவமதித்தால், அதை இந்துக் கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்! அதே சமயம், பெரியார் வழி வந்த திராவிடக் கட்சிகளும், புரட்சிகர அமைப்புகளும், பா.ஜ.க.வின் இந்து மதவெறி அரசியலையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் அம்பலப்படுத்தி, ஆரிய பார்ப்பனக் கடவுள் படங்க ளைச் செருப்பால் அடித்தால் / தீயிட் டுக் கொளுத்தினால், அதை இந்துக் கள் பொறுத்துக் கொள்ளக் கூடாது! மதத்தையும், கடவுளையும் தங்களது அரசி யல் இலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் பித்தலாட்டம்தானே இது!

நினைத்த காரியம் கைகூட சித்தி விநாயகர்; நோய் நொடி நீங்கி சுகமாக வாழ வினை தீர்த்த விநாயகர்; இப்படி அரச மரத்தடி பிள்ளையார் தொடங்கி கற் பக விநாயகர் வரை பல விதங்களில் தமி ழக இந்துக்களும் பிள்ளையாரை வணங்கி வழிபட்டு வந்திருக்கிறார்கள். மக்கள் பிள் ளையாரிடம் வேண்டுவதற்கும், இந்து முன்னணி பிள்ளையாரிடம் வேண்டுவதற் கும் ஒட்டும் கிடையாது; உறவும் கிடை யாது.

தங்கள் வாழ்வில் துன்ப துயரங்கள் நீங்கி, சுகமாக, மகிழ்ச்சியாக வாழ வேண் டும் என்பதற்காகத்தான் மக்கள் இறை வனை வழிபடுகிறார்கள். இந்து முன்ன ணியோ பிள்ளையாரிடம் அகண்ட பார தத்தை வேண்டுகிறது. அதனால்தான் கொழுக்கட்டை இருக்க வேண்டிய பிள் ளையாரின் கையில் அணுகுண்டைத் தூக்கி வைத்துள்ளது; பிள்ளையாரின் பக்கத்தில் மூஞ்சூரை வைப்பதற்குப் பதில், அணுசக்தி விஞ்ஞானி அப்துல் கலாமை நிற்க வைக்கி றது. இப்படி வெளிப்படையாகவே அண்டை நாடுகளை - குறிப்பாக, பாகிஸ் தான் - ஆக்கரமிக்கும் போர்வெறியைப் பரப்பும் பிள்ளையார் ஆகம விதிகளுக் குள் அடங்குவாரா என பார்ப்பனக் கும்ப லிடம் விளக்கம் கேட்பது முட்டாள்தனமா கிவிடும்.

ஏனென்றால், பார்ப்பனர் நலன் என் றால், ஆகம விதிகள் எதற்கும் வளைந்து கொடுக்கும். பண்டாரம் பூசாரியாய் இருக் கும் கோவிலில் நல்ல வருமானம் வருகிற தென்றால், அக்கோவிலை ஆகம விதிக் குள் விழுங்கிவிடும் பார்ப்பனக் கும்ப லுக்கு, அணுகுண்டு விநாயகருக்கு ஆகம


படிப்பகம்

படிப்பகம்

விதிகள் எழுதச் சொல்லியா தர வேண்டும்?

பெண்டு பிள்ளைகளோடு உட்கார்ந்து கொண்டு, ஆனந்தமாக அருள்பாலிக்கும் கடவுள்களை வழிபட்டு வரும் போதே தீராத மக்களின் கஷ்டங்கள், கையெறி குண்டோடும், அணுகுண்டோடும் முசுலீம் எதிர்ப்புக் கலவரத்தையும், போர் வெறியையும் இந்துக்களிடம் தூண்டிவிடும் இந்து மதவெறியர்களின் பிள்ளையாரை வழிபடுவதால் தீர்ந்து விடுமா?

கலவரமும், போரும் வெடித்தால் யாருக்கு இலாபம்? அதனால்தான் வட்டிக் கடை நடத்தும் மார்வாரிகளும், மொத்த வியாபாரம் நடத்தும் சேட்டுகளும், மேல் சாதி இந்து வியாபாரிகளும் இந்து முன்னணி பிள்ளையார் ஊர்வலம் நடத்துவதற்குப் பணத்தை வாரிவிடுகிறார்கள்.

இப்படி இந்து முன்னணி நடத்தும் பிள்ளையார் ஊர்வலத்தின் யோக்கியதையை நோண்டிக் கொண்டிருந்தால் அப்பாவி இந்து பக்தர்களின் மனம் புண்படுவதென்ன, ஆறாத இரணமாகவே மாறிவிடும். ஆயினும், ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்வோம்;

இந்து முன்னணி மட்டுமல்ல, இந்து மதமே கூட பக்தர்களின் எண்ணங்களுக்கு கடுகளவேனும் மதிப்பு கொடுத்தது கிடையாது. அப்படி பக்தர்களுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்று இந்து மதம் எண்ணியிருக்குமானால், கருவறைக்குள் சூத்திரர்களும், பஞ்சமர்களும் நுழைவதைத் தடை செய்யும் பார்ப்பன சாதி ஆதிக்கம் தகர்ந்திருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் மற்ற மேல் சாதியினருக்குச் சமமாக கோவிலுக்குள் நுழைவதையும், திருவிழாக்களில் கலந்து கொள்ளுவதையும் தடை செய்யும் பார்ப்பன - மேல் சாதி ஆதிக்கம் தகர்ந்திருக்க வேண்டும்.

அன்பு, கருணை, சமத்துவம் பற்றிப் பேச பிற மதங்களுக்குப் பெயரளவிற்கேனும் தகுதியுண்டு. இவ்விசயத்தில், அந்தப் பெயரளவு அருகதைகூட இந்து மதத்திற்கு கிடையாது. இதை மறுக்கும் இந்துக்கள் இருந்தால், தாழ்த்தப்பட்டவர்கள் தங்களின் சமூக உரிமைகளுக்குப் போராடும் பொழுது, பார்ப்பன - மேல் சாதி வெறியர்களால் ஏன் கொடூரமாகத் தாக்கப்படுகிறார்கள் என்பதற்குப் பதில் சொல்லட்டும்.

பிற மதங்கள், அவற்றின் தொடக்க காலங்களில், ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக ஒலித்தபோது, இன்று இந்து மதம் என்றழைக்கப்படும் சனாதன மதத்திற்கு அதன் தொடக்க காலந் தொட்டே, அரசியல் அதிகாரம்தான் குறி. ஆரிய பார்ப்பனக் கும்பல், இந்தியாவிற்குள் நுழைந்த பொழுது, இம்மண்ணின் மைந்தர்களான திராவிடர்களையும், தஸ்யுக்களையும் விரட்டிவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். சனாதனிகளின் அதிகாரத்தை ஆட்டங்காணச் செய்யும் வண்ணம் பௌத்த மதமும், சமண மதமும் இந்தியாவில் செல்வாக்கு பெற்ற பொழுது, அவர்களை நயவஞ்சமாகக் கொன்றொழித்தது, பார்ப்பனக் கும்பல்.

உருவ வழிபாடு, ஆலய வழிபாடு என்ற பண்பாடே இல்லாத சனாதனிகள், பௌத்த விகாரைகளையும், சமணக் கோவில்களையும் ஆக்கிரமித்துக் கொண்டதோடு, கோவில்களை மக்களைச் சுரண்டுவதற்கான கருவியாகவும் பயன்படுத்தத் தொடங்கினர். ''அரசின் கஜானா காலியாகி விட்டால், அதை நிரப்புவதற்கு அரசன் கோவில்களைக் கட்ட வேண்டும்'' என்றான் சாணக்கியன். அது மட்டுமா,

''அந்தணனின் ஆதரவு பெற்ற சத்திரியனின் அரசு கவிழாது'' என்று கூறி, பார்ப்பனர்களின் நலன்களுக்குச் சேவை செய்யும் ஓர் அடியாள் கூட்டத்தையும் உருவாக்கிக் கொண்டார்கள். அந்த அடியாள் கூட்டம் தான் இன்றைய பார்ப்பனர் அல்லாத மேல் சாதி இந்துக்கள்.

இன்று பார்ப்பன - பனியாக்களின் கைகளின் குவிந்திருக்கும் அதிகாரம், சமூக நெருக்கடிகளின் காரணமாக, தங்கள் கை நழுவிப் போய்விடக் கூடாது என்பதற்குத்தான் கற்பனையான எதிரிகளை உருவாக்குகிறது ஆர்.எஸ்.எஸ். முசுலீம் தீவிரவாதம், தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரான தீவிரவாதிகள்... இப்படி போகிறது அந்தப் பட்டியல். இந்த 'எதிரிகளின்' மீது வன்முறையை ஏவிவிடுவதற்குத் தான், நான்கு வருணத்திலும் சேர்க்காமல் ஒதுக்கி வைத்த தாழ்த்தப்பட்டவர்களை, பழங்குடி இன மலை வாழ் மக்களை இன்று ''இந்து'' என்று நரித்தனமாக அழைக்கிறது, சனாதனக் கும்பல்.

பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்குத் தான் மக்கள் கடவுளின் மீதும், மதத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளுகிறார்கள். ஆனால், பா.ஜ.க.வோ பிரதமர் பதவியிலும், மாநில முதல்வர் பதவிகளிலும் உட்கார்ந்து கொள்ளுவதற்கான ஒரு கருவியாகத்தான் மதத்தையும், கடவுளையும் பார்க்கிறது. மக்களிடம் இருப்பது போல, பா.ஜ.க.விற்கு கடவுளிடமும், மதத்திடமும் பயம் சார்ந்த பக்தி இருந்ததும் கிடையாது; இருக்கப் போவதும் கிடையாது. இந்த வேறுபாட்டை அப்பாவி இந்து பக்தர்கள் புரிந்து கொள்ள வேண்டும்; இல்லையென்றால், பா.ஜ.க.வின் அரசியல் விளையாட்டில் நீங்கள்தான் பகடைக் காய்கள்!

• சுப்பு

## கழக ஆட்சியா? காவி ஆட்சியா?

பார்ப்பன மத வெறியர்கள் ஒவ்வொரு ஆண்டும் தலைநகர் தில்லியில் ''ராம லீலா'' என்ற பெயரில், இராவணன், கும்பகர்ணன், மேகநாதன் உருவ பொம்மைகளைத் தீயிட்டுக் கொளுத்தி தங்கள் ஆரிய இனப் பெருமையைப் பகிரங்கமாகக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். இந்த ஆரிய பார்ப்பனத் திமிரை எதிர்த்து, பெரியார் திராவிடர் கழகம், சென்னை - சேத்துப்பட்டு பகுதியில் தமிழினப் பண்பாட்டு போர் முழக்கம் - ''இராவண லீலா'' நடத்தி, ஆரிய பார்ப்பனக் கடவுள்களான இராமன் - இலட்சுமணனின் உருவ பொம்மைகளை எரிக்கப் போவதாகவும், இந்நிகழ்ச்சியையொட்டி அக்டோபர் 1-இல் பொதுக் கூட்டமும், செப்டம்பர் 30-இல் கவியரங்கமும், கருத்தரங்கமும் நடத்தப் போவதாகவும் அறிவித்தது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, திராவிடர்களை இழிவுபடுத்தும் ஆரிய பார்ப்பனத் திமிரை எதிர்த்து நடத்தப்படும் இந்த நியாயமான விழாவிற்கு அனுமதி தர மறுத்து விட்டது. இந்த விழாவினால் மதப் பற்றுள்ளவர்களின் மனம் புண்படும் என்ற பார்ப்பனர்களின் பித்தலாட்ட வாதத்தை முன் வைத்து, இராவண லீலா, பொதுக் கூட்டம், கருத்தரங்கம் மூன்றையும் தடை செய்தது தமிழக அரசு. இதைக் கண்டித்து, கருத்தரங்கம் நடைபெறவிருந்த செர்மன் அரங்கம் முன் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற பெரியார் திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினர் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்டு, அவ்வியக்கத்தைச் சேர்ந்த 9 பேரைக் கைது செய்தும், அதே அரங்கத்தின் முன், கருத்தரங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த இந்து மதவெறிக் கும்பலை கண்டு கொள்ளாமல் விட்டும், பா.ஜ.க.விடம் தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார் மு.க.! மறுநாள், தடையை மீறி இராமன் உருவ பொம்மையைக் கொளுத்த முயன்ற திராவிடர் பெரியார் கழகத் தலைவர் ஆனூர் செகதீசன் உள்ளிட்டு, அவ்வமைப்பினர் பலரைக் கைது செய்து சிறையிலடைத்தது, காவியாக மாறிக் கொண்டிருக்கும் கழக அரசு!



www.padippakam.com

www.padippakam.com

# இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்போம்!

அதிகார நாற்காலியில் உட்காருவதற்காகவே, அப்பாவி முஸ்லிம்களை எதிரிகளாகச் சித்தரித்து, நாடு முழுவதும் நரவேட்டையாடுபவர்கள் பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். பாசிச கும்பல்கள்.

இந்தப் பார்ப்பன மதவெறியர்கள், நாம் வேலை கேட்டுப் போராடினால், கர சேவைக்குக் கரம் கொடுங்கள் என்கிறார்கள்; கைம்பெண்களின் மறுமணத்திற்குப் போராடினால், அவர்களைச் சாகடித்து, 'சதிமாதா' கோவில் எழுப்புகிறார்கள். சாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடினால், மனுநீதியை மறுபதிப்பு செய்கிறார்கள். கூலி உயர்வு கேட்டால், முதலாளிக்கு இலாப உயர்வு கேட்கிறார்கள்.

இந்த இந்து மதவெறி பாசிஸ்டுகளை ஒழிக்காத வரை, மக்கள் நல்வாழ்விற்கு வழியில்லை. புரட்சிகர அமைப்புகளான மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகியன இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்த்து தமிழகம் முழுவதும் பொதுக் கூட்டங்கள், தெரு முனைக் கூட்டங்கள், வீடு வீடாகப் பிரச்சாரம், பேருந்தில் பிரச்சாரம் - நிதிவசூல், சுவரெழுத்துக்கள், சுவரொட்டிகள், தட்டிப் பிரச்சாரம் என பல வடிவங்களில் முதற் கட்ட பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

✦ 'கோவை நகரம் இந்து மதவெறியர்களின் கோட்டை; அங்கு யாரும் இந்து மதவெறியர்களை எதிர்த்துப் பேச முடியாது' என்ற ஒரு பயங்கரவாத பீதியை இந்து மதவெறியர்களும், பத்திரிகைகளும், காவல் துறையும் இணைந்து உருவாக்கியுள்ளன. கோவையில் மகஇக தோழர்கள் மக்கள் மத்தியில் நடத்தி வரும் இப்பிரச்சார இயக்கத்தின் மூலம், இம்மாயத் தோற்றத்தைத் தகர்த்தெறிந்து வருகின்றனர்.

ஒரு பகுதியில் 40-க்கும் மேற்பட்ட இளைஞர்கள், ''ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி.யை விரட்டியடிக்க நாங்களும் வருகிறோம்'' என உறுதி கூறியுள்ளனர்.

இந்து முன்னணியின் மாவட்டப் பொறுப்பில் உள்ளவனின் இருப்பிடப் பகுதியிலேயே இரு தோழர்கள் பிரச்சாரம் செய்தனர். மதவெறியர்கள் தோழர்களைத் தாக்கி கலவரம் செய்ய முயன்ற போதும், தோழர்கள் உறுதியாக நின்று, அவர்களை அம்பலப்படுத்திப் பிரச்சாரம் செய்து, மத வெறியர்களை பின்வாங்கி ஓட வைத்தனர்.

✦ 'இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்போம்' என திருச்சி நகர் முழுவதும் சுவரெழுத்துக்கள் பளீரிட்டன. சுவரெழுத்து முழக்கங்கள் பார்ப்பன இந்து மதவெறியர்களின் முகத்திலறைவது போலிருந்தது. சமயம் பார்த்துக் காத்திருந்த பாரதீய ஜனதா கும்பல், மைய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் வந்ததைச் சாக்காக வைத்து, தனது ஏவல் நாய்களான போலீசை ஏவி, சுவரெழுத்துக்கள் முழுவதையும் அழித்தது.

இதைக் கண்டித்து மகஇக - புமாஇமு சார்பில் உடனே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பா.ஜ.க. கும்பலின் ஜனநாயக விரோதப் போக்கை எதிர்த்து, 24.8.98 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த காவல் துறையிடம் முன்னனுமதி பெறப்பட்டது.

முதலில் அனுமதி வழங்கிய போலீசு, ஆர்ப்பாட்ட நேரத்தில் அனுமதி மறுத்து, அராஜகமாக நடந்தது. போலீசு - பார்ப்பன மதவெறிக் கும்பலின் கூட்டையும், அராஜகத்தையும் அம்பலப்படுத்தி, முழக்கமிட்டு ஊர்வலமாகச் செல்ல முயன்ற தோழர்கள் கைது செய்யப்பட்டனர். தடையை மீறியதாகவும் அரசு ஊழியரை வேலை செய்ய விடாமல் தடுத்ததாகவும் தோழர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன.

இதையும் அம்பலப்படுத்தி உடனே நகர் முழுக்க சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

✦ சென்னை, திருச்சி, தஞ்சை, மதுரை, விழுப்புரம், இராசபாளையம், தேவிப்பட்டினம், நெய்வேலி, விருத்தாச்சலம், சீர்காழி, வேதாரண்யம், மணப்பாறை, உசிலை, விழுப்புரம் அருகேயுள்ள இருவேல்பட்டு என மாநிலம் முழுவதும் 23 இடங்களில் செப்டம்பர் மாதத்தில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. அடாது மழை பெய்தாலும், பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு, கலைந்து விடாது, கடைசி வரையிலும் பல இடங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கூட்டத்தைக் கேட்டுள்ளனர்.

✦ கர்நாடக மாநிலம், தங்க வயல் நகரில், 5 மொழிகளில் பிரஜா கலா சாகித்ய மண்டலி (ம.க.இ.க.) துண்டுப் பிரசுரம் தந்து பிரச்சாரம் செய்ததற்கே பீதியுற்றது, பாரதீய ஜனதா. மகஇக அமைப்பாளர் தோழர் விஜயகுமாரை மிரட்டிப் பார்த்த பா.ஜ.க., அவர் பணியாமல் போகவே, அவரைத் தாக்க முனைந்தது. 7,8 பாஜக காலிகள் அவரைச் சுற்றி வளைத்த போது, தோழர் முந்திக் கொண்டு முதல் தாக்குதல் நடத்தவே, பீதியுற்ற மதவெறி ரௌடி கும்பல் பின்னங்கால் பிடறியில்பட ஓடியது.

**தகவல்: மகஇக - விவிமு - புமாஇமு, தமிழ்நாடு**

## சிவப்பஞ்சலி

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம், வண்டிப் பெரியார் வட்டாரத்தில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி உருவாகவும், அமைப்பிற்கு ஆதரவாகவும் செயல்பட்டு வந்த தோழர் வள்ளக்கடவு வேலாயுதன் சாமி, தனது 68-வது வயதில், 18.8.98 அன்று இயற்கை எய்தினார்.

தானுண்டு, தன் பெண்டு பிள்ளைகளுண்டு எனக் குறுகிய வட்டத்திற்குள் வாழும் சாதாரண மனிதனைப் போல் அல்லாமல், மக்கள் நலன், நாட்டு நலன் என்ற விரிந்த நோக்கத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த ஒரு போராளி, தோழர் வேலாயுதன் சாமி. இவரைத் தெரியாதவர் இந்த வட்டாரத்திலேயே இல்லை எனும் அளவு, மக்களுக்காக வாழ்ந்தவர்.

ஏ.வி.டி., ஆர்.பி.டி. போன்ற தேயிலை நிறுவனங்கள் வள்ளக்கடவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துக் கொண்ட போது, மக்களுக்கு நிலம் வேண்டும் எனப் போராடியவர், தோழர். அவரை அந்நிறுவனங்கள் நிலமும் பணமும் கொடுத்து விலைக்கு வாங்க முயன்ற போது, நிலமற்ற மக்களுக்கு நிலம் வேண்டும் என உறுதியாக நின்று போராடி, 1969-ஆம் ஆண்டு நடந்த அப்போராட்டத்தில் வெற்றியும் கண்டார்.

தோழர் வேலாயுதன் சாமி 1989-இல் கம்பம் பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணியுடன் தொடர்பு கொண்டார். '91 தேர்தல் புறக்கணிப்பு இயக்க வேலைகளில் பங்கேற்றார். 1993-ஆம் ஆண்டில் மகஇக நடத்திய கருவறை நுழைவுப் போராட்டத்தில் 15 பேருடன் வந்து கலந்து கொண்டு சிறை சென்றார். மைய அரசு டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டதை எதிர்த்து, 1994-ஆம் ஆண்டு ஏப்.14 அன்று நடந்த ரயில் மறியல் போராட்டத்தில் திண்டுக்கல்லில் கைதானார். 1995-இல் சீர்காழியில் நடந்த இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்திற்கு புதிய தோழர்களை அனுப்பி வைத்தார்.

வயதான போதிலும் இளைஞனுக்குரிய துடிப்புடன் செயல்பட்டவர் தோழர் வேலாயுதன் சாமி. அவர் இறந்த செய்தி கேட்டதும் 50-க்கும் மேற்பட்ட பாளையம் வட்டார வி.வி.மு தோழர்கள் செஞ்சட்டையுடன் தோழரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்தினர்.

பிறகு தோழர்கள் அறைக்கூட்டம் நடத்தி, தோழரின் போராட்ட பண்பினைப் பின்பற்ற உறுதி ஏற்றனர். 30.8.98-இல் இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. தமிழ், மலையாள மொழிகளில் விரிவாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டுப் பிரசுரங்களும் மக்களிடம் வினியோகிக்கப்பட்டன.

தோழர் வேலாயுதன் சாமியின் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்!


படிப்பகம்

படிப்பகம்

# சுதேசி மோசடியும் பொருளாதாரப் பேரிடியும்

## மக்களின் மீது சுமைகளை ஏற்றி வைத்து, பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது, பா.ஜ.க.

பா.ஜ.க. கூட்டணி அரசு, தனது வரவு - செலவு அறிக்கையை ''வளர்ச்சிக்கான பட்ஜெட்'' என டாம்பீகமாக அறிவித்தது. ஆனால், வரவு - செலவு அறிக்கை வெளிவந்து மூன்று மாதங்கள் முடிவதற்குள்ளாகவே, ''பட்ஜெட்'' குறித்து பா.ஜ.க. அடித்த சவடால்களெல்லாம், கால் காசுக்கும் பிரயோஜனமில்லாதவை என்பது நிருபணமாகிவிட்டது. பா.ஜ.க. அரசின் வரவு - செலவு அறிக்கையின் தோல்வியைப் புரிந்து கொள்ளுவதற்கு பொருளாதாரத்தைக் கரைத்துக் குடித்திருக்க வேண்டும் என்ற அவசியமேயில்லை. ''வெங்காயமே'' நமது நாட்டிலுள்ள எல்லா பாமரர்களுக்கும் இதனைப் புரிந்து கொள்ள வைத்து விட்டது.

✱ ராஜாராம் சென்னையைச் சேர்ந்தவர்; அரசுடைமையாக்கப்பட்ட வங்கியொன்றில் பணிபுரிகிறார். ஆறு பேர் கொண்ட இவரது குடும்பத்தின் மாத வருமானம் பன்னிரெண்டாயிரம் ரூபாய். ஆனாலும், ''விக்கிற விலைவாசியில ஒண்ணும் சமாளிக்க முடியலை'' என்கிறார். ''மாதம் ஒரு திரைப்படத்திற்குச் செல்வது கூட ஆடம்பரம் தான்'' எனக் கூறுகிறார் ராஜாராம்.

✱ வயதான தாய், தம்பி, மனைவி, குழந்தைகள் என ஏழு பேரோடு கல்கத்தாவில் வாழும் சக்கரவர்த்தியின் குடும்ப மாத வருமானம் ஒன்பதாயிரம் ரூபாய். ''வாரம் ஒருநாள் கறி சமைப்பது, இனிப்புகள் செய்வது, எப்படியாவது சொந்தமா ஒரு வீடு வாங்கணும்ங்கிற ஆசை இதையெல்லாம் மறந்திட வேண்டியதுதான். பள்ளிக் கூடத்தில் இருந்து திரும்பி வரும் பேத்திக்கு டிபன் செய்து கொடுப்பது கூட குதிரைக் கொம்பாயிடும் போல'' என்கிறார், சக்கரவர்த்தியின் வயதான தாய்.

எகிறிக் கொண்டே போகும் விலைவாசி, சரிந்து கொண்டே போகும் பணத்தின் மதிப்பு - இவையிரண்டும், இனி இந்தியாவில் இலட்ச இலட்சமாக சம்பாதிப்பவர்கள் மட்டுமே காலந்தள்ள முடியும் என்ற நிலையை உருவாக்கி வருகிறது. பதவியையும், அதிகாரத்தையும் எப்படி தக்க வைத்துக் கொள்ளுவது என்பதில் குறியாக இருக்கும் பா.ஜ.க.வோ, மக்களை வாட்டி வதைக்கும் இந்தப் பிரச்சினைகள் குறித்து அக்கறை காட்டாததோடு, ''ஏழைகளுக்கு வெங்காயம் எதற்கு?'' எனத் திமிராக கேட்கிறது.

நாட்டின் பொருளாதாரமே திவாலாகிவிடும் அபாய நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். நரசிம்ம ராவ் ஆட்சியின் இறுதியில், இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறைந்து, மந்த நிலை ஏற்பட்டது. இந்தப் பொருளாதார மந்தம் ஐக்கிய முன்னணியின் ஆட்சியிலும் தொடர்ந்தது.

இந்த மந்தத்தை தங்களது வரவு - செலவு அறிக்கைத் தகர்த்துத் தூள் தூளாக்கி விடும் என மார்தட்டியது பா.ஜ.க. வீடு கட்டுதல், பாலங்கள் அமைத்தல், பாசன வசதி ஏற்படுத்துதல் போன்ற அடிகட்டுமானத் துறைகளில் அரசின் முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் இந்த மந்த நிலையை மாற்றி விடுவோம். மன்மோகன் சிங்கும், ப. சிதம்பரமும் இந்த முறையில் சிந்திக்கவில்லை. அதனால் தான் எங்களது பட்ஜெட் ''சுதேசி பட்ஜெட்'' என பெருமையடித்துக் கொண்டது, பா.ஜ.க.

பா.ஜ.க.வின் இந்த சுதேசி பாச்சாவெல்லாம், இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த முடியாமல், படுதோல்வியில் முடிந்து விட்டன என்பதற்கு முதலாளித்துவ பத்திரிகைகளே பல புள்ளி விவரங்களைத் தருகின்றன.

✱ ''சி.ஐ.ஐ.'' எனப்படும் தரகு முதலாளிகளின் கூட்டமைப்பு 82 தொழில்களை ஆய்வு செய்ததில், அவற்றுள் 31 தொழில்களின் வளர்ச்சி, சென்ற ஆண்டை ஒப்பிடும் பொழுது இந்த ஆண்டு கீழே சரிந்து விட்டது என்றும், 32 தொழில்கள் மிதமான வளர்ச்சியை எட்டியிருந்தாலும் விற்பனை சூடு பிடிக்கவில்லை என்றும் கூறியுள்ளது.

✱ காஸ்டிக் சோடா, பேருந்து, லாரி, கார் மற்றும் விசைத்தறி இயந்திரங்களின் உற்பத்தி சென்ற ஆண்டை ஒப்பிடும் பொழுது, இந்த நிதி ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் (ஏப்ரல் - ஜூன் 98) கிட்டதட்ட 40 சதவீதம் குறைந்து போயுள்ளது. பதப்படுத்தப்பட்ட உணவுகள், ஜீனி, இரும்பு, சிமெண்ட், இயந்திர உற்பத்தி - இத்தொழில்கள் அனைத்தும் இந்த மந்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

✱ ஏப்ரல் '98 தொடங்கி ஜூன் '98-க்குள் ''இந்தியன் பெட்ரோ கெமிக்கல் கார்ப்பரேஷன் லிட்'' என்ற அரசு நிறுவனம் 56 கோடி ரூபாய் நட்டமடைந்துள்ளது. இந்திய இரும்பு ஆணையத்திற்கு 311 கோடி ரூபாய் நட்டமேற்பட்டுள்ளது. டாடாவிற்குச் சொந்தமான ''டிஸ்கோ'' நிறுவனம் 27 கோடி ரூபாயும், ''டெல்கோ'' நிறுவனம் 90 கோடி ரூபாயும் நட்டமடைந்துள்ளன.

✱ தொலைக்காட்சி பெட்டி, சலவை இயந்திரம் போன்ற நுகர்பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள், போட்டி போட்டுக் கொண்டு, விலை குறைப்பு தள்ளுபடி சலுகைகளை அறிவித்து, விற்பனை சரிந்து விடாமல் தாங்கிப் பிடிக்கிறார்கள். மே மாதம் ரூ. 49,000/-க்கு விற்கப்பட்ட ''அகாய் கலர் டி.வி.'' ஜூன் மாதத்தில் ரூ. 33,000/-க்கும், ஜூலை மாதத்தில் ரூ. 30,500/-க்கும் விற்கப்பட்டது. மூன்றே மாதத்தில் பத்தொன்பதாயிரம் ரூபாய் தள்ளுபடி சலுகை!

பிரெஞ்சு புரட்சிக்கு முன்பு, அந்நாட்டு மக்கள் பசிக்கு ரொட்டித் துண்டு கூட வாங்க வழியில்லாமல் திண்டாடிய பொழுது, பிரெஞ்சு மகாராணி ''ரொட்டி கிடைக்காவிட்டால் கேக் சாப்பிடுங்களேன்'' என ஏளனத்தோடு மக்களின் வறுமையைக் கிண்டல் செய்தாளாம். அது போல, இந்திய மக்கள் காய்கறியும், அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து கொண்டே செல்வது பற்றிக் கவலைப்படும் பொழுது, ''கலர் டி.வி.யின் விலை சரிந்து வருவதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்'' என்கிறது பா.ஜ.க. அரசு. இதை இந்து

''என் தந்தைக்கு வேலை கொடு'' எனக் கோரி, வேலையிழந்த தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.





www.padippakam.com

www.padippakam.com

# சுதேசி: ஆர்.எஸ்.எஸ்-இன் தேர்தல் ஆயுதம்

ஆர்.எஸ்.எஸ். குடை அமைப்புகளுள் ஒன்றான சுதேசி ஜாக்ரான் மஞ்ச், ''பா.ஜ.க. கூட்டணி அரசு நாட்டின் நலன்களுக்குப் பாதகமாக நடந்து கொள்வதாகவும், அக்கட்சி தனது பல பொருளாதார முடிவுகளை மாற்றிக் கொள்ளாவிட்டால், போராட்டங்களை நடத்தப் போவதாகவும்'' நாடக பாணி எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது. இதையடுத்து, செப்.17 தொடங்கி அக்.2 முடிய நாடெங்கும் சுதேசி யாத்திரையொன்றையும் நடத்தியது. ''வேலை வாய்ப்பு, பசு பாதுகாப்பு, பசியின்மை, உலக வர்த்தகக் கழக எதிர்ப்பு'' - இவைதான் யாத்திரையின் நோக்கங்களாம். ''அப்துல் காதருக்கும், அமாவாசைக்கும் என்னடா சம்மந்தம்'' என்று முசுலீம்களைக் கிண்டல் செய்யும் பழமொழியைத் தூக்கிப் போட்டுவிட்டு, காலத்திற்குத் தகுந்தவாறு, ''சுதேசிக்கும், பசுவுக்கும் என்னடா சம்மந்தம்?'' என பார்ப்பன அயோக்கியத்தனத்தைத் தோலுரிப்பது பொருத்தமாக இருக்கும்.

பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்தவுடனேயே, உ.வ.க.வின் கட்டளைக்கு அடிபணிந்து வெளிநாடுகளில் இருந்து ஆடம்பர அழகு சாதனப் பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்து கொள்ள அனுமதித்தது. அப்பொழுது இதைப் பற்றி வாயைத் திறந்ததில்லை சுதேசி விழிப்புணர்வு இயக்கம்.

அதன்பின், என்ரானைப் போலவே, பன்னாட்டு நிறுவனங்கள் அமைத்து வரும் மூன்று மின் நிலையங்களுக்கு இலாப உத்தரவாதம் அளிக்கப் போவதாக, பா.ஜ.க. பட்ஜெட்டில் அறிவித்தது. இந்த பட்ஜெட்டை ''சுதேசி உணர்வுள்ள பட்ஜெட்'' எனப் பாராட்டினார், சுதேசி விழிப்புணர்வு இயக்கத் தலைவர் குருமூர்த்தி.

* கடந்த ஆகஸ்டு மாதத்தில் மட்டும் பன்னாட்டு நிறுவனங்கள், 3,585 கோடி ரூபாய்க்கு மூலதனமிட அனுமதிக்கப்பட்டுள்ளன.

* ''நுகர் பொருள் உற்பத்தியில் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிக்க மாட்டோம்; இதுதான் சுதேசி'' எனப் பேசி வந்த பா.ஜ.க., பன்னாட்டு நிறுவனங்கள் 100 சதவீதம் மூலதனமிட்டு சிகரெட் உற்பத்தியில் ஈடுபட அனுமதித்துள்ளது.

* பன்னாட்டு நிறுவனங்கள், தனியார் வங்கிகளில் 40 சதவீதப் பங்குகளை வாங்கிக் கொள்ளலாம்.



ஆர்.எஸ்.எஸ்.-இன் சுதேசி யாத்திரை: மோசடிப் பேர்வழிகள் வருகிறார்கள்... பொது மக்களே உஷார்!

* உலக வர்த்தகக் கழகத்தில் அமெரி காவும், ஐரோப்பிய நாடுகளும் இந்திய வின் காப்புரிமைச் சட்டம் பற்றி கொடுத் புகாரையடுத்து, வெகு விரைவில் அச்ச டத்தைத் திருத்துவதாக வாக்குறு கொடுத்துள்ளது, பா.ஜ.க.

— இப்படி பா.ஜ.க. தீவிரமாக நடை றைப்படுத்தி வரும் சீர்திருத்தங்கள் எ யுமே இதுவரை வெளிப்படையாக எதி திராத சுதேசி விழிப்புணர்வு இய கம், இப்பொழுது, பொத்தாம் பொ வாக பா.ஜ.க.விற்கு 'எச்சரிக் விட்டிருப்பதும், சுதேசி யாத்தி நடத்துவதற்கும் ஏகாதிபத்தி எதிர்ப்பு உணர்வா காரண இல்லை, ஓட்டுச் சீட்டு அரசிய தான் காரணம்!

மகாராஷ்டிரா மாநிலத்தில் தே தல் நெருங்கிய சமயத்தில் தான் இ துமதவெறியர்கள் என்ரான் எதி பைக் கையில் எடுத்தார்கள்; இ பொழுது தில்லி, இராசஸ்தான், ம தியப் பிரதேசம் உள்ளிட்டு நான் மாநிலங்களில் தேர்தல் வர இருப் தால் தான், சுதேசி வேஷம் போட் ஓட்டுப் பொறுக்க முயலுகிற இந்து மதவெறிக் கும்பல்.

தூத்துக்குடி - பிரிட்டன் ஏகா பத்தியத்தை எதிர்த்து வ.உ.சிதம்பரன சுதேசி கப்பல் நிறுவனத்தை நடத்தி மண். தமிழகத்தில் அந்த மண்ணி இருந்து யாத்திரையை தொடங்கி நடத்தி ருக்கிறது, இம்மோசடி சுதேசிக் கும்ப இதைக் கண்டு ஆத்திரம் கொள்ளாத தமி கத்தின் மௌனம், வ.உ.சி.யின் தியாகத்தை அவமானப்படுத்துவதாகும்.

---

வெறியர்களின் விதேசி வக்கிர புத்தி என்பதா அல்லது சுதேசி பொருளாதாரம் என்பதா?

தொழில்துறை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மகாராட்டிரா மாநிலத்தில் அமைந்துள்ள தானே - பெலாபுர் தொழிற்பேட்டைதான் அம்மாநிலத்திலேயே மிகப் பெரிய தொழிற்பேட்டையாகும். 3,670 நிறுவனங்கள் இயங்கி வந்த அத்தொழிற்பேட்டையில், இன்று பாதிக்கும் மேற்பட்ட தொழிற்கூடங்கள் மூடப்பட்டு விட்டன. ''தொழில் மந்தமும், தாராளமயமாக்கமும் தான் இதற்குக் காரணங்கள்'' என்கிறார்கள் அச்சிறு தொழில் அதிபர்கள்.

ஆனால், பா.ஜ.க.வோ அதே விதேசி வக்கிர புத்தியோடு, தாராளமயமாக்கலை இன்னும் தீவிரப்படுத்தி, இப்பொருளாதார மந்தத்தை உடைத்து விடப் போவதாக சபதம் செய்கிறது. தன்னோடு ஓட்டிக் கொண்டிருந்த ராகுல் பஜாஜ் போன்ற ''சுதேசி'' தரகு முதலாளிகளை ஓரங்கட்டி விட்டு, தனக்கு பொருளாதார ஆலோசனைகள் வழங்குவதற்காக ரத்தன் டாடா, முகேஷ் அம்பானி போன்று தாராளமயமாக்கலைத் தீவிரமாக ஆதரிக்கும் தரகு முதலாளிகள் கொண்ட கமிட்டியை அமைத்துள்ளார், பிரதமர் வாஜ்பாய்.

''தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இப்பொழுது இருப்பதை விடக் கூடுதலாக சலுகைகள் வழங்குவது; அரசின் செலவை (கவனிக்கும் அரசின் முதலீட்டையல்ல) அதிகரிப்பதன் மூலம் சந்தையின் சரிவைத் தடுப்பது'' - இவைதான் இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த பா.ஜ.க. செயல்படுத்தப் போகும் வழிமுறைகள்.

இதனை வேறு வார்த்தைகளி சொன்னால், தரகு முதலாளிகளின், ப னாட்டு முதலாளிகளின் கல்லாப் பெ டியை நிரப்புவதற்காக மக்களின் வரி பணத்தையும், அவர்களின் உழைப்பைய இன்னும் தீவிரமாகச் சூறையாடச் சதித் தி டம் போட்டுள்ளது, பா.ஜ.க. வரவு செலவு அறிக்கை வெளிவந்து மூன் மாதங்கள் முடிவதற்குள்ளாகவே, தபா கட்டணத்தை மீண்டுமொரு முறை உய தியிருப்பதை வைத்தே, பா.ஜ.க. எத் கைய மக்கள் விரோத சுரண்டல் கூட்ட என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தபால் கட்டண உயர்வையடுத் தொலைபேசிக் கட்டணத்தையும் உயர்த் பா.ஜ.க. தயாரிப்பு செய்து வருகிறது. இ பொருளாதார மந்தத்தால் சாதி - மத வே பாடின்றி உழைக்கும் மக்கள் தான் மிக

கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர். இந்த இக்கட்டான தருணத்தில் கூட, அவர்களின் மீதுதான் பொருளாதார சுமைகளை ஏற்றி வைத்து, மைய அரசு தனது கஜானாவை நிரப்பிக் கொள்ளுகிறது. இச்சுமைகளைத் திணிப்பதில் இந்து - முசுலீம் என பேதம் பார்ப்பதில்லை, பா.ஜ.க.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆடம்பர - அழகு சாதனப் பொருட்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரியை உயர்த்தியும், தரகு முதலாளிகளின், பன்னாட்டு நிறுவனங்களின் சொத்தின் மீதும், வருமானத்தின் மீதும், இலாபத்தின் மீதும் கூடுதலாக வரி விதித்தும், அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டு, அவர்கள் இரகசியமாகச் சேர்த்து வைத்துள்ள கள்ளச் சொத்துக்களைக் கைப்பற்றியும் பா.ஜ.க. அரசு தனக்குத் தேவையான வருவாயைத் தேடிக் கொள்ளலாம்.

ஆனால், அப்படிச் செய்தால் தங்களைத் தாராளமயமாக்கலின் எதிரிகள் என முத்திரை குத்தி விடுவார்கள் என்பதால் தான், அவர்களுக்குத் தாராள சலுகைகளை வாரி வழங்குகிறது இம்மோசடி சுதேசிக் கும்பல். முதலாளிகள் தங்கள் கள்ளச் சொத்துக்களை சட்ட பூர்வமாக மாற்றிக் கொள்ள, ''சமாதான்'' என்ற திட்டம் பா.ஜ.க.வால் அறிவிக்கப்படுகிறது. ''தீவிரவாதிகளை'' தேச விரோதிகள் என வாய் கூசாமல் சாடும் பா.ஜ.க., இப் பொருளாதார கிரிமினல் குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குகிறது. இது 'தேச'ப் பற்றா அல்லது 'தேச'த் துரோகமா?




இக்கட்டண உயர்வுகளோடு, கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, மக்களின் வரிப் பணத்தில் உருவாக்கப்பட்டுள்ள பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் விற்று ஐயாயிரம் கோடி ரூபாயைத் திரட்டத் திட்டம் போட்டுள்ளது, பா.ஜ.க. இவ்விற்பனையிலும் ப.சிதம்பரமும், மன்மோகன் சிங்கும் நினைத்தே பார்த்திராத பல சலுகைகளை பா.ஜ.க. கூட்டணி அரசு வாரி வழங்கவுள்ளது.

முதலாவதாக, பொதுத்துறை நிறுவனங்களிலேயே அதிக இலாபம் தரக் கூடியதும், இந்திய அரசால் நவரத்தினங்கள் என்று அழைக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களின் பட்டியலில் உள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், இந்திய எரிவாயு ஆணையம், வெளிநாட்டு செய்தி தொடர்பகம், கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா என்ற நான்கு நிறுவனங்களின் பங்குகளையும் சந்தையில் விற்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இரண்டு ஆண்டுகளுக்குள் அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களிலும் அரசின் பங்கினை 49 சதவீதமாகக் குறைத்து, மீதமுள்ள 51 சதவீதப் பங்குகளைத் தனியாரிடம் விற்பதற்கு ஓர் அதிகார வர்க்கக் கமிட்டி உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, இப்பங்குகளை உள்நாட்டு பங்குச் சந்தையில் மட்டுமின்றி, அயல்நாட்டு சந்தைகளிலும் விற்கவும்; மூன்றாவதாக, நிறுவனத்தின் தரத்திற்கு ஏற்ப பங்குகளின் விலையை அரசு நிர்ணயித்து விற்கும் முன்பிருந்த நடைமுறையை ஒதுக்கிவிட்டு, சந்தையில் என்ன விலைக்குப் போகிறதோ, அதே விலைக்கு விற்கவும் அனுமதி அளித்துள்ளது, பா.ஜ.க.

அதிகார வர்க்கத்தின் ஊழல் - முறைகேடுகளால் நட்டத்தில் இயங்கி வரும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியார் வாங்க முன் வரமாட்டார்கள். எனவே, இந்நிறுவனங்களை சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் இழுத்து மூடவுள்ளது, பா.ஜ.க. முதல் கட்டமாக 9 பொதுத் துறை நிறுவனங்களை ஓரே சமயத்தில் மூடி, 11,000 தொழிலாளர்களை வீதியில் வீசியெறியும் தொழிலாளர் விரோத நடவடிக்கைக்கு மைய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கவுள்ளது.

இப்படி தொழிலாளர்களின் முதுகில் குத்தி, அவர்களின் குடும்பங்களை வறுமை படுகுழிக்குள் தள்ளும் பா.ஜ.க., தனது தேசிய செயல் திட்டத்தில் வேலையின்மையையும், வறுமையையும் ஒழிப்பதே எங்கள் இலட்சியம் என்று சவடால் அடித்திருப்பது எத்தகையதொரு மோசடி!

அணுகுண்டு வெடிப்புக்குப் பின் ஏகாதிபத்திய நாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் இந்தியாவுக்கு தர ஒப்புக் கொண்டிருந்த சில நிதியுதவிகளை நிறுத்தி விட்டன. இதை ஈடுகட்டுவதற்காக, வெளிநாட்டில் வாழும் இந்தியர்களிடமிருந்து நிதி திரட்டுவதற்காக, பா.ஜ.க. அரசு பத்திர மொன்றை வெளியிட்டது. பா.ஜ.க.வே அசந்து போகும்படி, வெளிநாட்டு இந்தியர்கள் இப்பத்திரங்களில் 350 கோடி அமெரிக்க டாலர்களை (15,200 கோடி ரூபாய்) முதலீடு செய்துள்ளனர். இதனை அவர்களின் தேச பக்திக்கு ஒரு சான்றாகக் கூறிப் பாராட்டி வருகிறது பா.ஜ.க. - உண்மையைச் சொன்னால், இப்பத்திர வெளியீட்டை, வெளிநாட்டு இந்தியர்களும், வெளிநாடுகளில் பினாமிகளின் பெயரில் சொத்துக்களைக் குவித்துள்ள உள்நாட்டு இந்தியர்களும் நாட்டைக் கொள்ளையடிப்பதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இப்பத்திரங்களை வெளியிட்டுள்ள இந்திய அரசு வங்கி, இம்முதலீடுகளுக்கு 7.75 சதவீத வட்டி தருவதாக அறிவித்துள்ளது. எந்தவொரு ஏகாதிபத்திய அரசும், முதலீடுகளுக்கு இவ்வளவு கூடுதல் வட்டி அளிப்பதில்லை. அதனால்தான் பன்னாட்டு நிதி நிறுவனங்கள், ''வெளிநாட்டு இந்தியர்களே, நீங்கள் எங்களிடமிருந்து கடன் வாங்கி, இந்தப் பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்'' என மேலை நாடுகளில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளன. இப்படி, பன்னாட்டு நிறுவனங்களின், வெளிநாட்டு இந்தியர்களின் கூட்டுக் கொள்ளைக்கு தெரிந்தே அனுமதி அளித்துள்ளது, பா.ஜ.க. அரசு.

மேலும், வெளிநாட்டு இந்தியர்கள் ஐந்து வருடம் கழித்து இம்முதலீட்டைத் திரும்பப் பெறும் பொழுது, முதலையும் வட்டியையும் அமெரிக்க டாலர்களாக அளிப்பதாகவும் பா.ஜ.க. அரசு உறுதியளித்துள்ளது. இந்தியப் பணத்தின் மதிப்பு சரிந்து போனாலும், வெளிநாட்டு இந்தியர்களின் முதலீட்டிற்கான இலாபம் குறைந்து விடக் கூடாது என்பதற்கு தான் இந்த ஏற்பாடு.

பா.ஜ.க.வின் விதேசி பற்று எப்படி வேலை செய்கிறது பாருங்கள்! உள்நாட்டில், மக்களின் நல்வாழ்வுக்காக சரிந்து வரும் பணத்தின் மதிப்பைத் தடுத்து நிறுத்த மாட்டார்களாம். உழைப்பாளி, எந்த மதத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும், அவன் தான் இச்சுமையைத் தாங்க வேண்டும். ஆனால் பத்திரங்களில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு இந்தியர்கள் - அவர்களில் பெரும்பாலோர் மேல் சாதி இந்துக்களாகவும், பா.ஜ.க.வின் ஆதரவாளர்களாகவும் இருப்பதால், அவர்களின் நலன் பாதிக்கப் பட்டுவிடக் கூடாது என்பதில்தான் பா.ஜ.க.விற்கு எப்பேர்ப்பட்ட அக்கறை!

சுருக்கமாகச் சொன்னால், பொருளாதார மந்தத்தை உடைப்பது என்ற பெயரில், பா.ஜ.க., மக்களின் மீது விலைவாசி உயர்வு, பணத்தின் மதிப்பு சரிவு, கட்டண உயர்வு, வேலையிழப்பு போன்ற பொருளாதார சுமைகளை ஏற்றி வைக்கிறது; பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளிகளும் இந்தியப் பொருளாதாரத்தை இன்னும் தீவிரமாகச் சூறையாடவும் வழியேற்படுத்தித் தருகிறது. இதுதான் பா.ஜ.க.வின் சுதேசி பற்று! நாட்டுப் பற்று! • செல்வம்


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



முனைவர் கோ. கேசவன் செப். 16-ஆம் நாளன்று மாரடைப்பால் காலமானார். பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு சில ஆண்டுகள் முன்னரே, 52 வயதிலேயே நிகழ்ந்த அவரது மரணம், தமிழ் அறிவுலகிற்கு ஏற்பட்ட இழப்பென்றால், அது மிகையாகாது.

பேராசிரியர் பணி என்பது நோகாமல் வருவாய் ஈட்டும் 'கருவி' என்றும், ஆய்வுப் பணி என்பது கல்வித்துறைப் பதவிக்கும் பவிசுக்கும் பயன்படும் ஏணி என்றும் கருதுவோரிடையே முனைவர். கேசவன் ஒரு விதிவிலக்கு. சொந்த வாழ்க்கையை வளமைப்படுத்திக் கொள்வதற்கென்று அக்கறை காட்டாமல், ஆய்வுப் பணிகளுக்குத் தான் தன் வருவாயையும் நேரத்தையும் செலவிட்டார்.

ஆய்வுக்கான தரவுகளைத் திரட்டுகின்ற, சோர்வையும் அயர்ச்சியையும் ஏற்படுத்தும் பணிகளில் அவர் மேற்கொண்ட கடின முயற்சியைப் பலரும் அறிவர். கடின உழைப்பும் எளிமையும் அவரது தனிச் சிறப்பான பண்புகள்.

துவக்கத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இயங்கியவர். பிறகு, நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். அதன்பின், புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் முக்கியப் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

அவ்வமைப்பு செயலிழந்து போனபின், மா.-லெ. இயக்கங்கள் என்று அழைக்கப்படும் அமைப்புகள் அனைத்தையும் பொதுவாக ஆதரிப்பவராகவும், மா.-லெ.-மா. சிந்தனையை ஆதரிப்பவராகவும் தம்மை இனம் காட்டிக் கொண்டார்.

பாராளுமன்றப் பங்கேற்பு - புறக்கணிப்பு, போர்குணமிக்க பொருளாதாரவாதம் - அரசியல் செயல்தந்திர வழி போன்ற பலவற்றில் நிலவும் வேறுபாடுகளால் பிளவுபட்டிருக்கும் மார்க்சிய - லெனினிய குழுக்களிடமிருந்து விலகி நிற்பது என்று இவர் தெரிவு செய்த நடைமுறை, அறிவுத் துறையினர் பலருக்கு புரட்சிகர அமைப்புகள் மீது அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கத்தான் செய்தது.

அமைப்புசாரா நடுநிலை என்ற இந்தப் போக்கிற்கான காரணங்கள் அவரது சிந்தனையிலும் வெளிப்பட்டன. அரசியல், இலக்கியம், வரலாறு போன்ற துறைகளில் அவர் எழுதியுள்ள ஆய்வு நூல்களிலும் சமரசவாதத்தைத் தீர்க்கமாக நிராகரிக்க முடியாத அவரது தயக்கம் வெளிப்படுகிறது.

"மொத்தத்துவம் - சாராம்சம் என்றாலே வன்முறை; பகுத்தறிவு என்பது பயங்கரவாதம்; கட்சி என்பதே சர்வாதிகாரம், பாசிசமும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் வேறுபட்டவை அல்ல" என்பன போன்ற கோட்பாடுகளை முன்வைத்த பின்நவீனத்துவ புதிய இடதுகளை, பொதுவுடைமையின் எதிரிகள் என்று சாடி நிராகரிக்க அவர் தயங்கினார்; மென்மையாகவே அணுகினார்.

மார்க்சியத்தைக் கட்டோடு நிராகரிக்கும் அவர்களது 'சந்தேகங்களுக்கு', அரவணைத்துப் பதிலளிப்பதன் மூலம் அந்தக் காரியவாதிகளை மார்க்சிய வட்டத்திற்குள் இழுத்து விட முடியும் என நம்பினார்.

இருப்பினும், அவர் 'கட்சிக்காரராக' இல்லாத போதும், கட்சிக்காரர் என்றே முத்திரை குத்தப்பட்டு அவர்களால் ஏளனமும் செய்யப்பட்டார்.

புரட்சிகர இயக்கங்களுடன் இனம் காட்டிக் கொண்டதற்காக உளவுத்துறையும் காவல்துறையும் மிரட்டிய போதெல்லாம் அஞ்சாதவர். அதாவது ஆளும் வர்க்கத்தின் பயங்கரவாதத்திற்கு அஞ்சாதவர், அறிவு ஜீவிகளின் இந்தப் பயங்கரவாதத்திற்கு அஞ்சினார். அறிவுத்துறையினரிடமிருந்து தனிமைப்பட்டு விடுவோம் என்ற அச்சம் மட்டுமே இதற்குக் காரணம் அல்ல; மாறாக, அதுவா - இதுவா, சரியா - தவறா என்று ஓர் ஆய்வின் இறுதியில் தீர்மானிக்க வேண்டிய தருணம் வரும்போதெல்லாம், "எதுவென்றும் தீர்த்து சொல்லி விட முடியாது" என்பதும், அவ்வாறு கூறுவது ஒருவகையான வறட்டுவாதம் என்பதுமே அவரது அணுகுமுறையாக இருந்தது.

ஆய்வுமுறையிலும், நடைமுறையிலும் அவரிடம் நிலவிய இந்தக் குறைப்பாடுகள் காரணமாகவே, அவரது ஆய்வுகளையும் உழைப்பையும் நாம் நிராகரித்து விட இயலாது.

- இலக்கிய விமர்சனம் - ஒரு மார்க்சியப் பார்வை
- இந்திய தேசியத்தின் தோற்றம்
- மண்ணும் மனித உறவுகளும்
- புராணச் சார்புக் கதைப் பாடல்களில் ஆண் பெண் உறவு நிலை
- சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும்
- திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்

— போன்ற அவரது ஆய்வுகள், புதிதாகக் கற்கவும் ஆய்வு செய்யவும் விரும்பும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரத்தக்கவை. காரியவாதமும் பிழைப்புவாதமும் கோழைத்தனமும் கோலோச்சும் அறிவுத்துறையில், கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, சமூக அக்கறை ஆகியவற்றை இறுதி மூச்சு வரை பற்றி நின்றவர் என்ற வகையில் அவரது வாழ்க்கை அறிவு ஜீவிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், தோழர்களுடன், "புதிய ஜனநாயகம்" தனது துயரத்தைப் பகிர்ந்து கொள்கிறது.

இதயத்தில் புரட்சியையும், சிந்தனையில் சமரசப் போக்கையும் கொண்ட ஒரு முரண்நிலையில் அவர் வாழ்ந்தார். அறிவு ஜீவிகளிடம் நிலவக்கூடிய இத்தகைய முரண்நிலைகளை புரட்சிகர இயக்கத்தினர் புரிந்து கொள்வது அவசியம். அவ்வாறு புரிந்து கொள்வதென்பது, அவர்களுடன் போராடி வென்றெடுக்கத்தானேயொழிய, வென்றெடுப்பதென்ற பெயரில் அவர்களுடன் சமரசமாகப் போவதற்கல்ல.

— ஆசிரியர் குழு


## நவம்பர் - 7
## சோசலிசப் புரட்சி நாள் விழா

காவி இருள் கவ்வியிருக்கும் கோவையில்
கம்யூனிசக் கதிரவனின் புத்தெழுச்சி விழா!

முதலாளித்துவம் கொல்லும்; கம்யூனிசமே வெல்லும்!
என்பதை நிலைநாட்டும் நாள்!

உலகின் முதல் சோசலிசப் புரட்சி ரசியாவில்
வெற்றி பெற்ற நாளான நவம்பர் 7-இல்

காலை 7 மணி - சின்னியம்பாளையம் தியாகிகள்
நினைவிடத்தில் சிவப்பஞ்சலி!

மாலை 7 மணி - கணபதியில் பொதுக்கூட்டம்

அனைவரும் வருக!



இவண்:
புதிய
ஜனநாயகத்
தொழிலாளர்
முன்னணி,
தமிழ்நாடு.



படிப்பகம்

# தேவர் சாதிவெறியும் குளிர்காயும் ஜெயா கும்பலும்

அக்டோபர் மாத முதல் வாரம் முழுவதும், இராமநாதபுரம் நகர் பயங்கர பீதியில் உறைந்து போனது. கடைகள் சூறையாடப்பட்டு, தீக்கிரையாகின. மக்கள் நடமாட்டமற்று தெருக்களும் பேருந்து நிலையமும் வெறிச்சோடிப் போயின. மாவட்டம் முழுவதுமே போக்குவரத்து நின்று போனது. பால், செய்தித்தாள்கள் போன்ற அத்தியாவசிய சேவைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு, இராமநாதபுரம் மாவட்டமே தமிழ்நாட்டிலிருந்து தொடர்பற்று தனித் தீவானது. முதுகுளத்தூரிலும், பரமக்குடியிலும் கடைகள் தீயில் கருகின. மனித உயிர்கள் மலிவாயின.

தேவர் குல கூட்டமைப்பு என்ற புதிய அமைப்பு தாழ்த்தப்பட்டவர்கள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என 4.10.'98-ல் இராமநாதபுரத்தில் நடத்திய மாநாட்டின் முன்னும் பின்னும் நடந்த சாதிய மோதல் இது. போலீசு துறைத் தலைவர் சர்மா கூற்றுப்படியே, போலீசு முதலில் இம்மாநாட்டிற்கு அனுமதி மறுத்தது. தேவர் குல கூட்டமைப்புத் தலைவர் சண்முகையா பாண்டியன் ஆதிக்க சாதிவெறியுடன், கலவரம் வெடிக்கும் என மிரட்டவே, நிர்பந்தத்திற்கு அடிபணிந்து அனுமதி தரப்பட்டது.

அக்டோபர் 2-ம் தேதி இராமநாதபுரம் அருகிலுள்ள திருப்புல்லாணி கிராமத்தை ஒட்டிய பொக்கரெனேந்தல் கிராமத்தில் தேவர்குல கூட்டமைப்பினர் மாநாட்டு சுவரெழுத்து விளம்பரங்களில் நீண்ட வீச்சரிவாள்களை ரத்தம் சொட்டுவதாக வரைந்தோடு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகவும் எழுதினர்.

மாநாடு தாழ்த்தப்பட்டவர்களின் நலனுக்கு எதிரானது என்பதோடு சுவரெழுத்தும் அவர்களைச் சீண்டுவதாக இருக்கவே, பொக்கரெனேந்தல் தாழ்த்தப்பட்ட மக்களோடு கிராம மக்களும் சாதி மோதலைத் தூண்டும் வண்ணம் எழுதப்பட்ட சுவரெழுத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதை ஒட்டி தேவர் சாதி வெறியர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையிலான மோதல் சற்று பெரிதானது. போலீசு வந்தும் கட்டுப்படாமல் போகவே, துப்பாக்கிச் சூடு நடந்து சிலர் காயமுற்றனர்.

3-ம் தேதி இரவு திருப்புல்லாணி கிராமத்தில் மீண்டும் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தாழ்த்தப்பட்டவர்கள் பலியானார்கள். இச்செய்தியை அடுத்து ஆங்காங்கே மோதல்கள் வெடித்தன. மாநாட்டுக்கு 'வேன்'களில் வந்தவர்கள், ஆயுதங்களும் பெட்ரோல் குண்டுகளுமாக வந்தனர். வரும் வழியிலேயே தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்புகளைத் தாக்கி, தீயிட்டு, சூறையாடினர். தாழ்த்தப்பட்டவர்களும் ஆங்காங்கே வேனை மறித்துத் தாக்கத் தொடங்கினர்.

தேவர்குல கூட்டமைப்புத் தலைவர் சண்முகையா பாண்டியன் மேலும் வெறியேற்றி, தாழ்த்தப்பட்டவர்கள் மீது மட்டுமின்றி முஸ்லிம்களையும் தாக்கி அழிக்க தூண்டி விட்டுள்ளார். மாநாட்டுக்குக் காலையிலேயே வந்து சேர்ந்த சிலர் கொலை ஆயுதங்கள், பெட்ரோல் குண்டு சகிதமாக இராமநாதபுரம் நகரில் முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்டவர்கள் கடைகளைச் சூறையாடி, தீ வைத்துக் கொளுத்தினர்.

ஒரு கூட்டம் சூரங்கோட்டை தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்பை அழிக்கச் சென்றபோது போலீசு தடுத்தது. தடுத்த போலீசு மீது வீச்சரிவாள்கள் பாயவே, போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 4 பேர் சாக, 16 போலீசாருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கிய இடங்களில், திருப்பித் தாக்குவதும் நடந்தது.



தேவர் குல கூட்டமைப்பின் தலைவர் சண்முகையா பாண்டியன் : போயஸ் தோட்டத்துக் கைத்தடி

ஒருபுறம் தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே, மறுபுறம் சுமார் 6000 பேர் கொண்ட தேவர்குல கூட்டமைப்பின் ஊர்வலம், பொதுக் கூட்டம் மாலையில் நடந்தது. இதில் பேசிய சண்முகையா பாண்டியன், மீண்டும் சாதி வெறியைத் தூண்டவே, மாநாடு முடிந்து திரும்பும் வழியிலும் மோதல்கள் நடந்துள்ளது. இம்மோதல்களில் இரு தரப்பிலும் 4 பேருக்கு மேல் பலியானார்கள்.

இப்படிப்பட்ட கலவரம் நடக்கலாம் என முன்கூட்டியே தெரிந்தே, தேவர்குல கூட்டமைப்பு மாநாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரும் அக்டோர் 30-இல் தேவர் ஜெயந்தி நிகழ்ச்சி நடைபெற உள்ள இந்த நேரத்தில் துவங்கியுள்ள இக்கலவரம் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை.

தேவர் பேரவையின் தலைவர் மருத்துவர் சேதுராமன், தேவர் இன மக்கள் மீதான துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும், கலவரத்திற்கு விசாரணை கோரியும் 3 நாட்கள் உண்ணாவிரதமிருந்தார். தேவர்குல கூட்டமைப்பின் வன்முறை பற்றி வாய் திறக்கவில்லை. இதற்கு முன் இராமநாதபுரத்தில் நடந்த புதிய தமிழகம் கட்சி மாநாட்டை நாங்கள் தடுத்தோமா எனக் கேட்டு சண்முகையா பாண்டியனின் வன்முறையை ஆதரிக்கிறார்.

'புதிய தமிழகம்' மாநாட்டையும், தேவர்குல கூட்டமைப்பு மாநாட்டையும் ஒப்பிட முடியாது. புதிய தமிழகம் ஒரு அரசியல் கட்சி என்ற முறையில் தனது கட்சி மாநாட்டை நடத்தியது. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தீண்டாமைக் கொடுமையைக் கண்டித்தனர். ஆனால் தேவர் குல கூட்டமைப்போ, தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதி இழிவு, ஆதிக்கச் சுரண்டலைத் தடுக்க, பெயரளவுக்கு உள்ள வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று கோரி மாநாடு நடத்தியது. இச்சட்டத்தின் கீழ் தமிழகத்தில் இது வரை ஒரே ஒரு நபர் கூட கைது செய்யப்படவில்லை என்பதே உண்மை. மேல்சாதி ஆதிக்க வெறியர்கள் இந்த பெயரளவிலான சட்டம் கூட இருக்கக் கூடாது என எதிர்க்கின்றனர்.

இந்த பின்னணியில் இராமநாதபுரம் கலவரத்தைப் பார்க்கும் எவருக்கும், வன்முறைகளுக்குக் யார் காரணம் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.



www.padippakam.com

www.padippakam.com

1957 முதுகுளத்தூர் பகுதி கலவரத்திற்குப் பின், இப்பகுதியில் பெரிய அளவிலான சாதி மோதல் இல்லை என்றாலும், சிறிய அளவில் மோதல்கள் இருந்து வந்தன. விழிப்புற்று வரும் தாழ்த்தப்பட்ட மக்கள், தம்மீதான ஆதிக்கத்தையும், அடக்குமுறைகளையும் இனியும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற நிலை உருவானது. வறண்ட இம்மாவட்டத்தில், மக்களின் வாழ்க்கையோ கைக்கும் வாய்க்கும் என்கிற நிலைமைதான். சாதி ரீதியில் சமபலம் உருவாகிய இந்நிலைமையில் கலவரம் வெடித்தால் இரு தரப்பிலும், இருப்பதையும் இழப்பது என்பதான நிலைமைதான்.

அதனால்தான் 1995, 1997-ல் தென் மாவட்டங்களில் சாதிய மோதல்கள் உக்கிரமான போது கூட, கிழக்குப் பகுதியான இங்கு ஒப்பீட்டு அளவில் அமைதி நிலவியது. தென் மாவட்டங்களில் சாதிக் கலவரம் நடத்தி ஆதாயம் தேடிய தூத்துக்குடி மணியாச்சியைச் சேர்ந்த சண்முகையா பாண்டியன், இங்கு கலவரத்தைத் திட்டமிட்டுத் தூண்டியது சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்குத்தான்.

இதற்கு வாகாக, சிவகங்கை மாவட்டத்தில் கண்டதேவி கோயில் தேரிழுக்கும் பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது. தேரிழுப்பதில் தீண்டாமை கூடாது என்கிற கிருஷ்ணசாமியின் நியாயமான கோரிக்கையை அரசு தீர்ப்பதற்குத் தயாராயில்லை. தேவர் சாதி வெறியர்கள், தீண்டாமையை வெறியோடு கடைப்பிடிக்கின்றனர். நீதிமன்றத் தீர்ப்பையும் கூட கழிப்பறைக் காகிதமாக்கி விட்டனர்.

மாவட்ட ஆட்சியர் நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல், 144 தடையுத்தரவு போட்டு, தீண்டாமையைத் தொடர்கிறார். இது பற்றிப் பேசிய சண்முகையா பாண்டியன், '... கூடிய விரைவிலேயே எனது படையைத் திரட்டி, துப்பாக்கி முனைகளைச் சந்தித்தாவது தேரை இழுத்தே தீருவேன்' என வெறியூட்டினார். கிருஷ்ணசாமி தேவையில்லாமல் இதில் தலையிட்டுள்ளதாக வெறுப்பை உமிழ்ந்தார்.

இராமநாதபுரம் அருகே சத்திரக்குடி கிராமத்தில் தேவர் சாதிவெறியர்களால் பெட்ரோல் குண்டு வீசி தீக்கிரையாக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு.



**சாதி வெறியர்கள் நடத்திய இக்கலவரத்தால், தேவர்சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்குக் கிடைத்தது என்ன? ஜெயா போன்ற சுயநல பதவிவெறி பேய்களுக்கும், சண்முகையா பாண்டியன் போன்ற பிழைப்புவாத, சமூக விரோத சாதித் தலைவர்களுக்கும் பலியாகும் ஆட்டு மந்தைகளா நீங்கள்? சாதிப்பெருமையா அடுத்தவேளை சோற்றைக் கொண்டு வந்து கொட்டப்போகிறது?**

தீண்டாமையை எதிர்ப்பது தேவையற்ற ஒன்று என ஆதிக்க சாதி வெறியர்கள் கூறுவதில் ஆச்சரியமில்லை. இதுவரை சாதி ஆதிக்கம் செலுத்தி வந்த தேவர்களோ, பிற மேல்சாதியினரோ, தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புற்று வருவதை சகித்துக் கொள்ளத் தயாரில்லை. அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியாக நேற்று வரை தாழ்த்தப்பட்டவர்களை அச்சாதியில் பிறந்த ஒரே காரணத்தை வைத்து மேல்சாதியினர் அடக்கி, ஒடுக்கிச் சுரண்டி வந்தனர். இன்று இவையனைத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்படைந்து, உரிமைக்காக நிற்பதை தமக்குப் போட்டியாக வளர்வதாகக் கருதி ஏற்க மறுக்கின்றனர்.

தமது சாதி ஆதிக்கத்தை இனியும் வழமையான வழிகளில் தக்க வைக்க இயலாது என்ற முடிவுக்கு சண்முகையா பாண்டியன் போன்றோர் வந்து விட்டனர். எனவே சாதி ஆதிக்க உணர்வைத் தட்டி உசுப்பி, வெறியூட்டி அணி திரட்டுகின்றனர். மாநாடு என்பது பெயருக்குத்தான். இவர்களின் நோக்கம் கலவரம் நடத்தி பீதியூட்டி, தாழ்த்தப்பட்டவர்களை மீண்டும் அடக்கி ஒடுக்குவதுதான். போயஸ் தோட்டத்தின் புதிய பங்காளியான சண்முகையா பாண்டியன்தான் கலவரத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார். அதனால்தான், ஜெயா சாதி மோதல் பற்றி ஒப்புக்காக கண்ணீர் வடித்து விட்டு, இக்கலவரத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் நரித்தனத்தோடு, 'இராணுவத்தை அழை', 'ஆட்சியைக் கலை' என அறிக்கைப் போரைத் தொடங்கி விட்டார்.

பிற ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளோ, பொதுவில் 'சண்டை வேண்டாம், சமாதானம்' எனப் பேசுகின்றனர். நல்லிணக்கம் பேசுகின்றனர். கலவரத்திற்குக் காரணமான ஆதிக்க சாதி வெறியர்களைக் கண்டிப்பதில்லை. மாறாக இரு தரப்புமே குற்றவாளிகள் எனக் கூறி, அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்கின்றனர். கலவரத்தை ஒடுக்குவது, அமைதியைக் கொண்டு வருவது என்ற பெயரில் ஏவிவிடப்படும் அரசு ஒடுக்குமுறைகளால், சாதி பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால், அரசு அடக்குமுறை தாழ்த்தப்பட்டோர் மீது தொடுக்கப்படும் இன்னொரு தாக்குதலாகும்.

அரசினுடைய தனியார்மயம் - தாராளமயம் - உலக மயக் கொள்கைகளால் மக்களின் வாழ்வு மேலும் ஓட்டாண்டியாக்கப்படுகிறது. தேவர் சாதியிலுள்ள பெரும்பான்மை உழைக்கும் மக்களின் வாழ்வு, எந்தவிதத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்நிலையிலிருந்து மாறுபட்டதாயில்லை. தமது வாழ்வு சூறையாடப்படுவதன் உண்மைக் காரணத்தைப் புரிந்து கொள்ளாது, தாழ்த்தப்பட்டவர்கள்தான் எதிரிகள் என்கிற ஆதிக்கவாதிகளின் கருத்துக்கு பலியாகின்றனர்.

சண்முகையா பாண்டியன் போன்ற பிழைப்புவாத, சமூக விரோத கும்பல் இவற்றை தமக்குச் சாதகமாக்கி, சாதியத் தலைவராகின்றனர். இவர்கள் ஆதிக்க சாதி வெறியர்களுடன் சேர்ந்து செயல்படுகின்றனர். அதே நேரம் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளுடன் நெருங்கிய உறவு கொள்கின்றனர்.

ஏற்கனவே ஜெயா - சசி கும்பல் தேவர் சாதி ஆதிக்க கும்பலுடன் நெருங்கியிருந்தனர். மத்திய மந்திரிகளெல்லாம் 'ஜெ'வைப் பார்க்கக் காத்திருந்த போது, 'ஜெ'யோ சண்முகையா பாண்டியன் வருகைக்குக் காத்திருந்தார். இப்போது சாதிக் கலவரம் நடந்ததும் தனக்கு ஆதாயம் என மகிழும் பாசிச ஜெயா கும்பல் இதைக் கண்டிக்கவில்லை. உடனே ஆட்சிக் கலைப்பு அறிக்கை விட்டு, டெல்லிக்குப் பறக்கிறது. சாதிய மோதலை கண்டிப்பதற்குப் பதில் இதில் அரசியல் ஆதாயம் தேடும் கீழ்த்தரமான செயலில் இறங்குகிறது. திமுக உட்



படிப்பகம்

படிப்பகம்

பட அதிமுக எதிர் அணியிலுள்ள எல்லாக் கட்சிகளும் இக்கலவரத்திற்கு அதிமுக தூண்டுதல் உள்ளது என குற்றம் சாட்டுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

இந்நிலையில் தேவர் சாதியிலுள்ள உழைக்கும் மக்கள் சிந்திக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்குவதால் தமது பிரச்சினைகள் தீர்ந்து விடப் போகிறதா? உண்மையில் தமது பிரச்சினைகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் தான் காரணம் என தமது சாதி ஆதிக்கவாதிகளின் கருத்தை ஏற்கிறார்களா? அப்படியானால் அரசினுடைய கொள்கைகள் தமக்குச் சம்பந்தமில்லை எனக் கருதுகின்றனரா?

வேலையின்மை, விலைவாசி உயர்வு போன்ற சமூகப் பிரச்சினைகள், தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கி, சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதால் தீர்ந்துவிடுமா? மோதல்கள், இப்பிரச்சினைகளுக்கான உண்மைக் காரணங்களை மூடி மறைக்கின்றன. மக்களின் கவனத்தை திசை திருப்புகின்றன.

பார்ப்பன பாசிச ஜெயாவுக்கு, ஊழல் - கிரிமினல் வழக்குகளிலிருந்து விடுபட ஆட்சிக் கலைப்புக் கோரிக்கைக்கு இது உதவுகிறது. சுதேசி பேசி நாட்டை மறுகாலனியாக்கும் பார்ப்பன மதவெறி பாசிச பா.ஜ.க.வுக்கு, தமது மக்கள் விரோத திட்டங்களை மறைக்க உதவுகிறது. திமுக ஆட்சிக்கோ, தமது மறுகாலனிய சேவையையும் மதவெறிக்கு சரணாகதியாவதையும் மறைத்து, ஒடுக்குமுறையை ஏவி ஒடுக்குவதை நியாயப்படுத்த உதவுகிறது.

கலவரத்தால், இழப்புகள் தேவர் சாதி உழைக்கும் மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தான். அற்ப உடைமைகள் பறி போவதோடு, உயிர்களும் பறி போகின்றன. இத்தகைய சாதிய மோதல்கள் உழைக்கும் மக்களின் எதிரிகளையும் சமூக விரோதிகளையுமே வலுப்படுத்துகின்றன.

தேவர் சாதியிலுள்ள ஆதிக்கவாதிகளுக்கும், ஆளும் வர்க்கக் கும்பல்களுக்கும் சேவை செய்யக்கூடிய இத்தகைய கலவரத்தை பெரும்பான்மை தேவரின மக்கள் இனியும் தொடரப் போகிறார்களா? அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை ஏற்று, உழைக்கும் மக்களுக்கான பொது எதிரிகளுக்கு எதிராக தோளோடு தோள் நின்று போராடப் போகிறார்களா? ●

### பிழை திருத்தம்

சென்ற 1-15 செப்டம்பர் இதழில், பக்கம் 26-இல் வெளியான "வாண்டையார் கும்பலின் ரவுடி ராச்சியம்..." பற்றிய செய்தியில், ம.தி.மு.க. பிரமுகர் பழனி வேலு என்பதற்குப் பதிலாக பா.ம.க. பிரமுகர் பழனிவேலு என தவறாக அச்சாகியுள்ளது. எமது கவனக் குறைவால் நேர்ந்துவிட்ட இத்தவறுக்கு மிகவும் வருந்துகிறோம்.

ஆசிரியர் குழு


மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்
8-ஆவது பாடல் ஒலிப்பேழை

**காவி இருள்**




- இந்து மதவெறிக் காரிருளைக் கிழிக்கும் போர்வாளாக...
- பார்ப்பன சூழ்ச்சிகளுக்கு எதிரான எச்சரிக்கையாக...
- ஆர்.எஸ்.எஸ். கும்பலின் புரட்டல்களை அம்பலப்படுத்தும் வரலாற்றுப் பெட்டகமாக...
- இந்துவெறிக் கலவரத்தின் கோரத்தையும் மக்களின் துயரத்தையும் நெஞ்சிலே நிறுத்தும் சொல்லாத சோகமாக...

அனைத்தும் பாடல்களாக... கேலியும், குமுறலும், சோகமும், கோபமும் கொப்பளிக்கும் பாடல்களைக் கொண்ட ஒலிப்பேழையாக... போராட்ட அறைகூவலாக...

**ஒலிப்பேழை விலை : ரூ. 30/-**

கிடைக்குமிடங்கள் :

ஆர். சீனிவாசன்,
உதயசூரியன் தேநீர் விடுதி,
காந்திபுரம்,
தில்லைநகர் 5-ஆவது குறுக்குத் தெரு,
திருச்சி - 620 018.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.




www.padippakam.com

www.padippakam.com



## நம்பூதிரி வியாபாரம் 'மார்க்சிஸ்டு'களின் பகற்கொள்ளை

இவ்வாண்டு தொடக்கத்தில் மாண்டு போன போலி. கம்யூனிஸ்டு தலைவர் நம்பூதிரிபாடு, சாகும் வரை திருத்தல்வாத சித்தாந்தத்தின் பிதாமகனாக இருந்து, சந்தர்ப்பவாதத்தை 'மார்க்சிஸ்டு' கட்சியின் உயிர் மூச்சாக்கினார். செத்த பிறகு அவரது பெயரால் திருத்தல்வாத வியாபாரம் செய்ய ஏற்பாடு செய்து கட்சிக்கு உயிரூட்டுகிறார். தமிழகத்தில் அண்ணா, பெரியார், அம்பேத்கார், எம்.ஜி.ஆர். பெயரால் பிழைப்புவாதம் தெருச் சாக்கடையாக பொங்கி வழிவதைப் போல, இப்போது கேரளாவில் நம்பூதிரிபாடு பெயரால் பிழைப்புவாத வியாபாரம் செய்ய போலி கம்யூனிஸ்டுகள் கிளம்பி விட்டனர்.

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவிலுள்ள லெனின் சதுக்கத்தைப் போல, கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்தில் ரூ. 50 லட்சம் செலவில் நம்பூதிரிபாடு சதுக்கம் அமைப்பது; நம்பூதிரியாரின் திருத்தல்வாத சிந்தனைகளைக் கொண்ட கருவூலமாக, அருங்காட்சியகமும் நூலகமும் கொண்ட நம்பூதிரிபாடு அகாடமியை அமைப்பது; நம்பூதிரியார் 1902-லிருந்து சாகும்வரை எழுதிய அரசியல் - சித்தாந்த கட்டுரைகள், படைப்புகள் அனைத்தையும் தொகுத்து ஒவ்வொன்றும் 400 பக்கங்களைக் கொண்ட 100 தொகுதிளை அச்சிட்டு வெளியிடுவது; ஒவ்வொரு தொகுதியும் ரூ. 150 விலையில் மொத்தம் ரூ. 15,000 ஆகும் இத்தொகுப்புக்கு தள்ளுபடி மற்றும் கவர்ச்சிகரமான முன் வெளியீட்டுத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

'காந்திக்குப் பிறகு எந்தவொரு இந்திய அரசியல் தலைவரின் படைப்புகளும் இப்படி தொகுக்கப்பட்டதாக வரலாறில்லை'' என்று தேர்ந்த வியாபாரியைப் போல் பெருமையுடன் கூறுகிறார் கேரள 'மார்க்சிஸ்டு' கட்சி செயலாளர் அச்சுதானந்தன்.

'மார்க்சிஸ்டுகள்', இந்த இலட்சியக் கனவு நிறைவேற ரூ. 5 கோடிக்கு மேல் செலவாகும் என தீர்மானித்து, முதற் கட்டமாக ரூ. 1.1 கோடியை வசூலிக்கும் வேட்டையில் இறங்கினர். நம்பூதிரியாரின் அருமை - பெருமைகளை விளக்கி மக்களிடம் பிரச்சாரம் செய்து உண்டியல் ஏந்தி வசூல் செய்திருந்தால் கூட பிரச்சினையில்லை. ஆனால் தமிழக ஓட்டுக் கட்சிகளின் வழியிலேயே வசூல் வேட்டை நடத்தப்பட்டது. கேரளாவில் 990 பஞ்சாயத்துகள் உள்ளன. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் சராசரியாக 20 வார்டுகள் உள்ளன. ஒவ்வொரு வார்டும் ரூ. 2000 நன்கொடை திரட்டித் தர வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அப்புறம் கேட்கவா வேண்டும்? ஓட்டுக் கட்சி குண்டர்களைப் போலவே ஒவ்வொரு கடைக்கும், தொழில் நிறுவனத்துக்கும் குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்து 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் வசூல் வேட்டையாடினர். பல இடங்களில் கைகலப்பு, அடிதடி, மிரட்டல், சூறையாடல்களில் 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் இறங்கியதால், பெட்டிக் கடைக்காரர்கள் வயிறு எரிய சாடினர். அதைவிட கள்ளச் சாராயப் பேர்வழிகளிடம் கறந்து ஒவ்வொரு போலீசு நிலையமும் ரூ. 10,000 தர வேண்டுமென உள்ளூர் கட்சிக் கமிட்டிகள் நெருக்குதல் கொடுத்து பறித்துச் சென்ற கீழ்த்தரமான செயலும் பல பகுதிகளில் நடந்தது. ''இவ்வசூல் வேட்டையால் ஆகஸ்டு 22, 23, 24 தேதிகளில் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்ததை விட 3 மடங்கு அதிகமாக ரூ. 4.02 கோடி வசூலாகியுள்ளது'' என்று 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் பூரித்துப் போகிறார்கள்.

நம்பூதிரிபாடு புரட்சியை பூசையறையில் வைத்துவிட்டு நாடாளுமன்ற செக்கு மாட்டுப் பாதையில் பாட்டாளி வர்க்கத்தைத் தள்ளிய ஒரு திருத்தல்வாத துரோகத் தலைவர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு விசுவாசமாகச் செயல்பட்ட முன்னாள் கேரள முதல்வர். மற்றபடி அவர் பெரியார், அம்பேத்கார் போன்ற சமூக சீர்திருத்தவாதி கூட அல்ல. ஆனாலும் அவரை மாபெரும் புரட்சியாளராகக் காட்டி வியாபாரம் செய்ய போலி கம்யூனிஸ்டுகள் கிளம்பி விட்டனர். இனியும் இந்த துரோகப்-பாரம்பரியம் தொடராமல் முறியடிக்க வேண்டிய பொறுப்பு கேரளப் பாட்டாளிகளின் கையில்தான் உள்ளது.

## கலப்பட எண்ணெய் சாவுகள்: நஞ்சாகிப் போனது ஆட்சிகள்

கடந்த மாதத்தில் சமையல் எண்ணெய் கலப்படத்தால் பிஞ்சுக் குழந்தைகள் உட்பட 50-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். டெல்லி மட்டுமின்றி கிழக்கே ராஜஸ்தானிலிருந்து மேற்கே அசாம் வரை வட மாநிலங்கள் எங்கும் சாவுகள் தொடர்ந்தன. வாந்தி, மயக்கம், வயிறு வீக்கம், முழங்கால்கள் மரத்துப் போதல் எனும் நீர்க் கோர்வை நோயினால் அன்றாடம் நூற்றுக் கணக்கானோர் மருத்துவம்னைகளில் குவிந்தனர். தீவிர சிகிச்சைக்குப் பின்னரும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நடைபிணமாகத்தான் உயிர் வாழ்கின்றனர்.



கலப்பட எண்ணெயின் கோரம்: மருத்துவமனையில் உயிருக்குப் போராடும் குழந்தைகள்

வட மாநிலங்களில் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் கடுகு எண்ணெயில், ஆலைகளில் பிளாஸ்டிக் கரைப்பானாகப் பயன்படுத்தப்படும் டி.சி. பாஸ்பேட் எண்ணெய், விலை குறைவான இன்ஜின் ஆயில், பாரபின் மெழுகு எண்ணெய் முதலானவற்றைக் கலப்படம் செய்து விற்றதே இக்கோரச் சாவுகளுக்குக் காரணம். இவை தவிர பெட்ரோலிய வடி எண்ணெயும், காட்டு கசகசா எண்ணெயும் கூட கலக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, டி.சி. பாஸ்பேட் 0.01 சதவீதம் எண்ணெயில் கலக்கப்பட்டால் கூட கை - கால்களை முடமாக்கிவிடும்; குழந்தைகள், முதியவர்களைக் கொன்று விடும். தற்போதைய கொலைகளுக்குப் பிறகு கைப்பற்றப்பட்ட கலப்பட எண்ணெயில் 0.25%-க்கு மேல் டி.சி. பாஸ்பேட் கலக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை அறிந்து நாடே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

ரேஷன் கடைகளில் உதிரியாக விற்கப்பட்ட கடுகு எண்ணெய் மட்டுமல்ல; பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் ''அக்மார்க்'' முத்திரை பெற்ற கனோடியா, சுத்தாரா, என்.டி.டி.பி. முதலான பிரபல நிறுவனங்களின் சமையல் எண்ணெய்களும் கலப்படமாகவே உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. எண்ணெய் வியாபாரிகளிடமிருந்து மொத்தமாக வாங்கி, சுத்திகரித்து


படிப்பகம்

படிப்பகம்



பாக்கெட்டுகளில் அடைத்து விற்பதாக இந்நிறுவனங்கள் கூறினாலும், கலப்படத்தை கண்டறியக் கூட செய்யாமல் லஞ்சம் ஊழலும் புழுத்துப் போயுள்ளது.

தலைநகர் தில்லியில் உணவு கலப்படத் தடுப்பு அலுவலகம் இயங்கினாலும், இங்கு பதிவு செய்து சோதனைக்குப் பின்னரே சமையல் எண்ணெயை விற்பனை செய்ய வேண்டுமென்று எந்த சட்டமும் இல்லை. புகார் வந்து சோதனையிட்டபிறகு, உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தால், ரூ. 1000 அபராதமும், ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்க மட்டுமே சட்டத்தில் இடமிருக்கிறது. இதனால் வர்த்தக சூதாடிகள் எந்த அச்சமுமின்றி கலப்படம் செய்து மக்களின் உயிரோடு விளையாடுவது வாடிக்கையாகிவிட்டது. இவ்வளவு பேர் கலப்பட எண்ணெயால் கொல்லப்பட்ட பின்னரும், எந்தவொரு வர்த்தக சூதாடியின் மீதும் ஆட்சியாளர்கள் கை வைக்கவில்லை. இக்கொலைகளுக்குப் பொறுப்பேற்று பதவி விலகவுமில்லை. பதுக்கப்பட்டுள்ள கலப்பட எண்ணெயைக் கைப்பற்றவோ, கலப்பட எண்ணெய் நிறுவனங்களைத் தடை செய்யவோ, அவற்றிடம் நட்ட ஈடு கோரவோ ஆட்சியாளர்கள் முன் வரவுமில்லை. கடுகு எண்ணெய் விற்பனையை தற்காலிகமாக தடுத்து நிறுத்தியதற்கு மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவுமில்லை.

இத்தகைய கலப்பட எண்ணெய் சாவுகள் இப்போது திடீரென நடந்துவிட்ட விபரீதமலல். கடந்த பத்தாண்டுகளில் இப்படி நான்கு முறை நடந்துள்ளது. இவற்றை எதிர்த்து சவடால் பேசும் போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே. வங்கத்தில் 1988-ல் பெகலா பகுதியில் கலப்பட கடுகு எண்ணெயால் 18 பேர் மாண்டனர். 216 பேர் கை - கால்கள் முடமாகிப் போயினர்.



கொலைவெறியாட்ட குழுச் சண்டையைத் தணிக்க கேசுபாய் பட்டேலையும் (இடது) சுரேஷ்மேத்தாவையும் (வலது) சமரசப்படுத்தும் பாரதீய ஜனதா தலைவர் சர்மா

## ஒய்யாரக் கொண்டையின் உள்ளே ஈறும் பேனும்

கொள்கை ரீதியிலான கட்சி என்று மார் தட்டிக் கொள்ளும் பாரதீய ஜனதாவில் குழுச் சண்டைகள் தீவிரமாகி படுகொலைகள் செய்யுமளவுக்கு முற்றி விட்டது. குஜராத்தில் ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களிலேயே குழுச் சண்டைகளால் பாரதீய ஜனதா அரசு நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அதைவிட உ.பி.யின் கல்யாண் சிங் அரசு, தீவிரமாகிவிட்ட உட்கட்சி சாதிய மோதல்களால் செயலிழந்து கிடக்கிறது.

குஜராத்தில் முதல்வர் கேசுபாய் பட்டேல் குழுவுக்கும், அரசின் இரண்டாம் நிலை முக்கிய புள்ளியும் தொழிற்துறை அமைச்சருமான சுரேஷ் மேத்தா குழுவுக்குமிடையே தேர்தலுக்கு முன்பிருந்தே நாய்ச் சண்டைகள் முற்றி வந்தன. கடந்த செப்டம்பர் 10-ஆம் நாளன்று சுரேஷ் மேத்தாவின் முக்கிய தளபதியான பால்ஜி ஜடேஜா, வனத்துறை ஊழியர்களுடன் காடுகளில் கள்ளத்தனமாக மரம் வெட்டி காட்டுக் கரி தயாரிக்கும் மா∴பியா கும்பலைப் பிடிக்கச் சென்றபோது, ஆயுதமேந்திய கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது கட்சியிலுள்ள எதிர்த் தரப்பினரின் கொடூர சதிச் செயல் என்றும், குற்றவாளிகள் கைது செய்யப்படாததைக் கண்டித்தும் சுரேஷ் மேத்தா தனது பதவியை ராஜினாமா செய்வதாக முதல்வருக்கு கடிதம் அனுப்பினார். முதல்வர் பட்டேல் அதை ஏற்க மறுக்கிறார். கட்சியில் உண்மையான தொண்டர்களுக்கு இடமில்லாமல் செய்ய சதி நடக்கிறது என்று சாடும் மேத்தா, கட்சியில் இந்துத்துவ பரிவாரங்களே ஆதிக்கம் செலுத்துவதையும் நடந்து முடிந்த தேர்தலில் தம்மை தோற்கடிக்க இவர்கள் சதி செய்ததையும், தமது ஆதரவாளர்களுக்கு மாநகராட்சி மற்றும் வாரியத் தலைவர் பதவிகள் தரப்படாமல் புறக்கணிக்கப் பட்டதையும் அம்பலப்படுத்தியுள்ளார். மேத்தாவின் பதவி விலகல் மிரட்டலால் அவரது ஆதரவாளர்கள் கலகம் செய்வார்களா அல்லது கட்சி பிளவுபட்டு ஆட்சி கவிழ்ந்து விடுமா என்று பீதியில் பாரதீய ஜனதாவின் தேசியப் பொதுச் செயலாளர் வெங்கைய நாயுடுவும், துணைத் தலைவர் சர்மாவும் குஜராத்துக்கு விரைந்து சமரச முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உ.பி.யில் பாரதீய ஜனதா முதல்வர் கல்யாண் சிங்குக்கு எதிராக மேல் சாதியினரான தாக்கூர்களும் பார்ப்பனர்களும் கூட்டணி கட்டிக் கொண்டு நெருக்கடி கொடுத்து வருகின்றனர். இந்தக் குழுச் சண்டை முற்றி அண்மையில் நடந்த உ.பி. அமைச்சரவை கூட்டத்தில் அதிகாரிகள் முன்னிலையிலேயே நாய்ச் சண்டையாக நடந்துள்ளது. பார்ப்பன கும்பலின் ஆதரவாளரும் மாநில பாரதீய ஜனதா தலைவருமான ராஜ்நாத் சிங், கல்யாண் சிங் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பேவதாக அறிக்கை விடுவதும், அதை எதிர்த்து கல்யாண்சிங் குழுவினர் அறிக்கை விடுவதும், கீழ் மட்டங்களில் அடிதடி, கைகலப்புகள் நடப்பதுமாக களை கட்டி நிற்கிறது.

சிறுபான்மையினருக்கு எதிரான கலவரங்கள், கட்சியில் புழுத்து நாறும் குழுச் சண்டைகள் முற்றி கொலைகளும் வன்முறையும் தலைவிரித்தாடுவது, அரசு செயலிழந்து நிற்பது என பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்கள் அனைத்திலும் அக்கட்சியின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது. இந்த லட்சணத்தில் எதிர்க் கட்சிகள் ஆளும் மாநில அரசுகள் மீது குற்றம் சாட்ட இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

## காமுகர்களுக்கு இளம் பெண்கள் பலி "காஜி"களின் அயோக்கியத்தனம்

மும்பை மாநகரில் சில முஸ்லிம் மத குருமார்கள் தங்களை இஸ்லாமிய மதக் கோட்பாட்டின் தலைமை நீதிபதி (காஜி)களாக நியமித்துக் கொண்டு கிழட்டு அரபு ஷேக்குகளுக்கு ஏழை இளம் முஸ்லிம் பெண்களை மணமுடித்து வைக்கும் அயோக்கியத்தனமான தரகு வேலையைச் செய்து வருகிறார்கள். கடந்த சில மாதங்களாக இத்தகைய காஜி-உல் - காஜட்டாக்களும் (இஸ்லாத்தின் உயர்நீதிபதிகள்), ரயீசுல் காஜட்டாக்களும் (தலைமை நீதிபதிகள்) முஸ்லிம்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் புற்றீசல்களாகப் பெருகியுள்ளனர். இஸ்லாமிய சட்டமோ நகருக்கு ஒரு நீதிபதியைத்தான் அங்கீகரிக்கிறது. ஆனால் மும்பையில் 60-க்கும் மேற்பட்ட இஸ்லாத்தின் நீதிபதிகள் உள்ளனர். பரீத் அகமதுகான், ஜமீல் அக்தார், இஸ்ரார் காசிமி, முகம்மது சகாரியா முதலானோர் அவர்களில் பிரபலமானவர்கள்.

பணக்கார அரபு ஷேக்குகளை வலை வீசிப்பிடிப்பது, அவர்களுக்கு ஏழை முஸ்லிம் இளம் பெண்களை அவசரமாக மணமுடித்து வைப்பது, அனுபவித்த பிறகு அவசர விவாகரத்தையும்



www.padippakam.com

www.padippakam.com



த்தி வைத்து கிழட்டு அரபு ஷேக்குகள் பிரச்சினை ஏதுமின்றி பிச் செல்ல உதவுவது என்னும் கீழ்த்தரமான புரோக்கர் வேலை ப்வதே இவர்களின் தொழிலாக உள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு மும்பையைச் சேர்ந்த யாஸ்மின் று 18 வயதான ஏழை முஸ்லிம் பெண்ணின் சோகக் கதை ளிவந்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அவள் மூன்று முறை ட்டு அரபு ஷேக்குகளுக்கு மணமுடிக்கப்பட்டு விவாகரத்து ப்யப்பட்டுள்ளாள். அவர்களில் இருவர் 50 வயதுக்கு மேற்பட் ர்கள். மற்றொருவர் 70 வயது முதியவர். ஒவ்வொரு முறை திருமணம் நடந்த 10 முதல் 20 நாட்களுக்குள் விவாகரத்தும் ந்துள்ளது. இவற்றில் முதலிரண்டு திருமணம் மற்றும் விவாக துகளை மோசடி நீதிபதியான பரீத் அகமதுகான் நடத்தி வைத் ளார். இஸ்லாமிய ஷாரியத் சட்டப்படிதான் திருமணங்களை த்தி வைத்திருக்கிறோம் என்று கூறும் கான், யாஸ்மின் விவகா வித்தியாசமானது என்று மழுப்புகிறார். மாதத்துக்கு சராசரி 50 திருமணங்களையும் 15 விவாகரத்துகளையும் நடத்தும் றொரு மோசடி நீதிபதியான அக்தார், நாங்கள் தவறு ஏதும் ப்திருந்தால் அல்லா எங்களைத் தண்டிக்கட்டும் என்று சவால் டுகிறார்.

இந்தியாவில் பெரும்பான்மையாக உள்ள சன்னி பிரிவு முஸ் களின் தலைமை அலுவ மான இதரியா-இ- ரியாவுக்கு இம்மோசடி பதிகள் பற்றி புகார்கள் ந்துள்ளதை அவர்கள் புக் கொள்கிறார்கள். ன் தலைமை நிர்வாகி ன அஷ்ரப்ரசா, இந்த நீதி களுக்கு திருமணம் த்தி வைக்கக்கூட எந்த நகளையும் கிடையாது; ர்கள் மீது விரைவில் ய நடவடிக்கை எடுப் ாம் என்கிறார். அப்துல் க் மணியாரின் பொது கள் புகார் மையம் எனும் மைப்பு, இஸ்லாத்தின் பாபாரிகளான இம்மோ நீதிபதிகளைக் கைது ய்யக் கோரி மத்திய - மாநில அரசுகளுக்கும் போலீசுக்கும் மனு ய்துள்ளதோடு, ஆர்ப்பாட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்து வரு து.



இராணுவத்தின் பயங்கரவாத வெறியாட்டத்தை எதிர்த்து நேபாளத் தலைநகரில் கம்யூனிஸ்டுகள் நடத்தும் ஆர்ப்பாட்டம்

## இமயத்தில் பரவிவரும் கம்யூனிசப் புரட்சிப் போர்

இந்தியாவின் வடக்கே இமயமலையிலுள்ள அண்டை டான நேபாளத்தில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் நடத்தி வரும் ாராட்டங்களைக் கண்டு, அந்நாட்டின் ஆளுங் கும்பல்கள் பீதி அலறுகின்றன. 1996-இல் மாவோயிஸ்டுகள் எனப்படும் யூனிசப் புரட்சியாளர்கள் நடத்திய பேரெழுச்சியைத் ாடர்ந்து, கடந்த ஈராண்டுகளில் மொத்தமுள்ள 75 மாவட்டங்க ் 23-இல் புரட்சிகர இயக்கம் வேர் விட்டுப் பரவியுள்ளது. நசாயத்து ஆட்சி முறையின் மூலம் அடக்குமுறையும் அதிகார ் செலுத்தி வந்த ராணாக்கள் எனப்படும் கொடிய நிலப்பிரபுக்க க்கு எதிரான போராட்டம் தீவிரமானதைத் தொடர்ந்து அவர் கிராமப்புறங்களை விட்டு தப்பியோடி நகரங்களில் போலீசு துகாப்பில் உயிர் வாழ்கின்றனர்.

ரோல்பா, ருகும் கோட் மாவட்டங்களில் புரட்சியாளர்கள் ணையான அரசு நடத்துகின்றனர். நிலப்பிரபுக்களின் சொத்துக்க ளும் நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இல வசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியாளர் அலு வலகமும், வருவாய் துறை அலுவலகமும் செயலிழந்து கிடக்கின் றன. கிராமப்புற விவசாயிகள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் திரண்டு போலீசு நிலையங்களைச் சூறையாடி தீ வைத்து அழித் துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள், தானியங்களை விநியோகித்தல், கிராமப்புறங்களில் சாலை - குடிநீர் வசதிகளைச் செய்தல், கூட்டாகப் பயிரிடுதல், மாதிரிப் பள்ளிகளை அமைத் தல், மக்கள் நீதி மன்றங்களில் வழக்குகளை விசாரித்தல் முதலான அனைத்தையும் கிராமப்புற விவசாயப் புரட்சிக் கமிட்டிகளே தலைமையேற்று வழி நடத்துகின்றன.

உலகின் ஒரே இந்து நாடு என்று இங்குள்ள இந்து வெறியர்க ளால் பரப்பப்படும் மாயைகளை நேபாளத்தின் கம்யூனிசப் புரட்சி யாளர்கள் உடைத்தெறிந்துள்ளனர். இந்து (பார்ப்பன) சனாதன அடக்குமுறையும், இந்துத்துவ மரபுகளும் நொறுக்கப்பட்டுள் ளன. நிலப்பிரபுத்துவ மேல் சாதியினருக்கு தாழ்த்தப்பட்டோர் செய்து வந்து இலவச கட்டாய சேவை முறை ஒழிக்கப்பட்டுள் ளது. கணவனை இழந்ததும் இந்து முறைப்படி விதவைக் கோலம் பூணும் மரபு இன்று வழக்கொழிந்துள்ளது. இந்து சடங்குகள் அற்ற புரட்சிகர திருமணங்கள் அதிகரித்து வருகின்றன.

நேபாளத்தில் படர்ந்து வரும் கம்யூனிசப் புரட்சிப் போரை ஒடுக்க ஆட்சியா ளர்கள் மிருகத்தனமான அடக்குமுறையைக் கட்ட விழ்த்து விட்டுள்ளனர். போலீசாரும் நேபாள காங்கி ரசுக் கட்சி குண்டர்களும், நிலப்பிரபுக்களின் அடியாள் படையினரும் மாவோயிஸ் டுகளை நர வேட்டையாடி வருவதாக மனித உரிமை அமைப்புகள் அம்பலப்படுத் துகின்றன. கடந்த ஈராண்டில் 1500-க்கும் மேற்பட்ட புரட் சியாளர்கள் கொல்லப்பட் டுள்ளனர். 3500-க்கும் மேற் பட்டோர் கைது செய்யப்பட் டுள்ளனர். புரட்சியாளர்கள் தலைமையில் இயங்கும் ஐக்கிய மக்கள் முன்னணி (UPF) எனும் மக்கள் திரள் அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. அதன் முன் னணி ஊழியர்களும் ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டு போலீசாரின் கொடிய சித்திரவதைக்கு ஆளாவதையும், பெண்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள பாலியல் வன்முறைகள் பற்றியும் தலைந கர் காத்மண்டுவில் உள்ள மனித உரிமைக்கான தெற்காசிய அரங் கம் எனும் அமைப்பு பட்டியல் போட்டு இக்கொடுமைகளை அம்ப லப்படுத்தி வருகிறது. இவ்வாண்டு தொடக்கத்தில் நேபாள காங்கி ரசுக் கட்சித் தலைவர் கொய்ராலா மீண்டும் பிரதமரானதும் மிகக் கொடிய அடக்குமுறைச் சட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ள தோடு, மனித உரிமை அமைப்பினரையே கைது செய்து வருகி றார்.

மறுகாலனியாதிக்க காரிருள் சூழ்ந்துள்ள இந்தியத் துணைக் கண்டத்தில் தாரகை போன்று நேபாள புரட்சிப் பேரலை ஓங்கி ஒளிவீசி வருகிறது. அதன் வெற்றிக்குத் துணை நிற்பதும், நேபாள ஆளுங் கும்பல் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைக்கு எதிரா கக் கண்டனக் குரல் எழுப்புவதும், இந்திய ஆட்சியாளர்கள் நேபாள ஆளுங் கும்பலுக்கு மறைமுகமாக உதவிகள் செய்து வருவதைத் தடுத்து நிறுத்துவதுமே இந்திய உழைக்கும் மக்களின் இன்றைய கடமையாக உள்ளது.



படிப்பகம்

படிப்பகம்

# "கம்ப்யூட்டர்" யுகமா? காட்டுமிராண்டி யுகமா?

## தீண்டாமை - மேல்சாதி அடக்குமுறைக்கு எதிராக நிற்கும் தாழ்த்தப்பட்ட இளைஞன் இரத்தினத்தின் துயரக் கதை

இன்று மின்னணு உயர் தொழில் நுட்பத்தில் ஆந்திர மாநிலத்தை முன்னணிக்குக் கொண்டு வருவதாக முதல்வர் சந்திரபாபு நாயுடுவை எல்லாப் பத்திரிக்கைகளும் பக்கம் பக்கமாகப் புகழ்கின்றன. நடைமுறையிலோ ஆந்திராவில் மத்திய கால நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது. ஆதிக்க மேல்சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மீது நடத்தும் வன்முறை வெறியாட்டங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

நாட்டையே உலுக்கிய சுண்டூர் படுகொலைக்குப் பின்பு இந்த உண்மைகள் வெளிவருகிற போதும், ஆதிக்க சாதியினரின் வெறியாட்டங்கள் நின்றுவிடவில்லை என்பதையே ரத்தினம் குடும்பத்தவரின் போராட்டம் நமக்கு உணர்த்துகிறது.

1993-ஆம் ஆண்டு மின்சாரப் பொறியியல் பட்டயப் படிப்பு இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் ரத்தினம். ஆந்திர மாநிலம் மேடக் மாவட்டத்திலுள்ள சிறிய கிராமம் ஜகிமல்காபூரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதி மாணவரான ரத்தினம், ஆசைக் கனவுகள் நெஞ்சில் வாசம் புரிய வளைய வந்த ஒரு இளைஞர்தான். இன்று கனவுகள் கருகி, உயிர் பிழைக்க குடும்பத்தோடு ஊரை விட்டே ஓடி வந்துள்ளார். இதற்குக் காரணம் ரெட்டி மேல்சாதியினரின் சாதி ஆதிக்க வெறிதான்.

ஜகிமல்காபூர் கிராம தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகள் ஆரம்பப் பள்ளிக் கல்வியைக் கூட தாண்டாத போது, உயர்நிலைப் பள்ளி அரசுத் தேர்வில் உயர் மதிப்பெண்களுடன் தேறிய ரத்தினம் பாலிடெக்னிக்கில் சேர்ந்தார். காலம் காலமாக தான் காலால் இட்ட பணியை தலையால் செய்து முடிக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட சாதி இளைஞன், பொறியியல் பட்டயப் படிப்பு படிப்பதா என மேல்சாதியினர் பொறுமினார்கள். இதை இப்படியே அனுமதிக்கவும் தயாராயில்லை. அப்போதுதான் அந்தத் திருவிழா வந்தது.

அது ரெட்டி மேல்சாதியினரும் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் இணைந்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தும் 'துர்க்கம்மா ஜாதரா' என்ற திருவிழா. பார்ப்பனீய இந்து தர்மப்படி இந்தியாவின் எல்லாப் பகுதிகளையும் போலவே திருவிழா அன்று கூட தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை.

அதே நேரம் இத்திருவிழாவில் கடவுளுக்கு எருமை மாடுகள் பலியிடப்படும் சடங்கு நடக்கும். இச்சடங்கைச் செய்யும் 'கடமை' மட்டும் தாழ்த்தப்பட்டவர்களுடையது. 35-லிருந்து 40 எருமைகள் வரை பலியிடுவார்கள். ஒரு எருமையை 4 நிமிட நேரத்திற்குள் பலியிட வேண்டும். ஏனெனில் மொத்தம் 2½ மணி நேரத்திற்குள்ளாக இச்சடங்கை முடிக்க வேண்டும்.

அப்படி 2½ மணி நேரத்திற்குள் பலி கொடுக்கவில்லையெனில் அந்த நபர், மேல்சாதியினரால் கொடூரமாகத் தாக்கப்படுவார். பலி கொடுக்கும் போது சிறு முனகல் சத்தம் கூட போடக் கூடாது. சின்னஞ்சிறு சப்தம் வந்தால் கூட அவர் தடிகளால் தாக்கப்படுவார். எருமையை வெட்டுபவர் சுமார் 5 கிலோ எடையுள்ள வெட்டரிவாளால் இதைச் செய்ய வேண்டும். பிறகு பலி கொடுத்த எருமைகளைப் பிளந்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பெரிய குழியில் நிரப்பி மண்ணால் மூட வேண்டும். இவை மொத்தத்தையும் 10 மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும். இதற்கு கூலியோ, சலுகையோ ஏதுமில்லை.

பாரம்பரியமான இந்தக் கடமையை செய்து வரும் தாழ்த்தப்பட்டவர் யாரும் மீறியதில்லை. 1993-ஆம் ஆண்டு சாமிக்கு சோதனை வந்துவிட்டது. 18 ஆண்டுகளாக இந்தக் கடமையைச் செய்து வந்த ரத்தினத்தின் தந்தை திம்மையாவுக்கு 62 வயது ஆகிவிட்டது. எனவே ரத்தினம் இதைச் செய்ய வேண்டும் என ரெட்டி மேல்சாதி ஆதிக்க கும்பல் உத்திரவிட்டது.

ரத்தினம் இதைச் செய்ய மறுத்தார். இப்படிப்பட்ட மூட நம்பிக்கை அவருக்கு இல்லாமற் போனது மட்டுமல்ல கூலியின்றி, சேவையாக இதைச் செய்ய அவர் தயாராயில்லை. கோபத்தில் ஆதிக்க சாதி வெறியர்கள் தனது மகனை ஏதும் செய்து விடுவார்களோ எனப் பயந்த அம் முதியவர், தாமே முன் வந்து 'கடமை'யைச் செய்தார்.

ஆனாலும் ரத்தினத்தைக் கொன்று விடுவார்களோ எனப் பயந்து அவரை 6 மாதம் ஐதராபாதிற்கு அனுப்பி விட்டனர் அவரது பெற்றோர்கள். சாதி ஆதிக்கவாதிகள் ரத்தினத்தை ஊரை விட்டே ஒதுக்கி வைத்தனர். மேல்சாதியினரை நம்பி வாழும் சிலரும், மூட நம்பிக்கை கொண்டோருமான தாழ்த்தப்பட்ட சிலரும் கூட ரத்தினத்துடன் பேசவில்லை. எனவே ஓராண்டுக்கும் மேலாக ரத்தினத்தால் சாதாரணமாக ஊருக்குள் வர முடியாமற் போனது. இதனால் அவர் படிப்பைத் தொடர முடியவில்லை.

பொறியியல் பட்டயப்படிப்பு கனவானது. வாழ்வுக்காக ஜகீராபாத்திலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கம்பவுண்டராக வேலை செய்யத் தொடங்கினார். திரும்ப 1996-இல் திருவிழா வந்தது. இம்முறை ரத்தினத்தைப் பணிய வைத்தே தீருவது என ரெட்டி மேல்சாதி வெறியர்கள் களத்திலிறங்கினர்.

ரத்தினம் காவல்துறையையும் மாவட்ட ஆட்சியரையும் அணுகினார். வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவேண்டிய மேல்சாதி வெறியர்கள் மீது, இவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரத்தினம் குடும்பத்தினரைக் கொலை செய்யவும் தயாராகியது ரெட்டி ஆதிக்க சாதி வெறிக்கும்பல். முதற்கட்ட

தீண்டாமையையும், மேல்சாதி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடி வரும் இரத்தினம், அவரது தாயார் சதியம்மா.



எருமைகள் பலியிடப்படும் கோவில்: மேல்சா ஆதிக்கத்தின் மௌன சாட்சியா?





www.padippakam.com

www.padippakam.com

ாக ரத்தினம் குடும்பத்தையே ஊரிலி ருந்து முற்றாக விலக்கி வைத்தனர். இவர்க ளுடன் பேசினாலே 25 செருப்படியும் .000/- ரூபாய் அபராதமும் விதிக்கப்பட் து.

இனி உயிருக்கும் உத்தரவாதமில்லை என்ற நிலையில் ரத்தினத்தின் குடும்பமே ஜகீராபாத்திற்கு குடிபெயர்ந்தது. இதனால் மேலும் ஆத்திரமடைந்த ரெட்டி சாதிவெறி யர்கள் திருவிழா அன்று கலவரத்தில் இறங்கி நிகழ்ச்சியைப் படமெடுக்க வந்த தொலைக்காட்சி ஊழியர்களையும் பாது காப்புக்கு வந்திருந்த காவல் துறையினரை யும் பந்தாடினர்.

சாதிவெறியர்கள் போலீசையும் தாக் வே வழக்கு பதிந்தனர். ஆனால் நான்கா வது முறையாக காங்கிரசு எம்.பி.யாக வெற்றி பெற்ற பக்கா ரெட்டி, இவரின் கைத் தடியான முன்னாள் காங்கிரசு எம்.எல்.ஏ ரசிம்ம ரெட்டி இருவரும் சாதிவெறியர்க ளுக்குத் துணை நிற்பதால், குற்றவாளிகள் சிறையிலடைக்கப்படவில்லை.

தாம் நினைத்தால் எதையும் செய்ய முடியும் என்று தைரியமடைந்த சாதிவெறி யர்கள் ஜகீராபாத்திலேயே ரத்தினத்தைக் கொல்ல முயன்றனர். ரத்தினம் மயிரிழை யில் உயிர் தப்பினார். ரத்தினத்தின் பெற் றோர் தங்களின் 2 ஏக்கர் பயிர் நிலத்தை வாரக் குத்தகைக்கு விட்டுள்ளனர். ரத்தி னத்தின் தந்தை திம்மையா, மகனுக்குத் துணை நின்றாலும், மனதொடிந்து இறந்து போனார். தாயார் சத்தியம்மா துணிந்த முடிவுடன் சில முறை குத்தகைப் பணம் வாங்க ஊர் சென்று வந்தார். அந்த வய தான பெண்மணியையும் தீர்த்துக் கட்ட சாதி வெறியர்கள் இருமுறை திட்டமிட் டும், விசயம் அம்பலமானதால் உயிர் தப்பி னார்.

கடவுளின் பெயரால் எருமைகளைப் பலியிட்டு வந்த மேல்சாதிக் காட்டுமிராண் டிகள், இன்று ரத்தினம் குடும்பத்தை நர வேட்டையாட முயல்கின்றனர்.

பரம்பரையாகச் செய்து வந்தது என நியாயம் பேசுகின்றனர். இதற்காக 100 ஏக் கர் நிலம் தந்ததாகக் கூறுகின்றனர். அதற் கான சான்று இல்லை. தாழ்த்தப்பட்டவர்க ளிடமுள்ள சொற்ப நிலங்கள் கூட நெற்றி வேர்வை சிந்த உழைத்துப் பெற்றதுதானே தவிர தானமாகப் பெற்றதல்ல என்பதே முகத்திலறையும் உண்மை. இவை பற்றி சந்திரபாபு நாயுடுவின் கணிப்பொறிகள் மௌனம் தான் சாதிக்கும்.

பேயாட்சி செய்தால் பிணந்தின்னும் சத்திரங்கள் என்பதாக கொடுமைகள் இன் னும் தொடர்கிறது. சாதிக் கொடுமையை உயிர் கொடுத்தேனும் எதிர்ப்பதென ரத்தி னமும் அவரது தாயாரும் துணிந்து களத் தில் நிற்கின்றனர்.

• கருப்பன்

# அரசின் அயோக்கியத்தனம்!
# அவதிப்படும் ஆசிரியர் பயிற்சி மாணவர்கள்!

அ.இ.அ.தி.மு.க.வின் ஊழல் - அராஜகக் கொள்ளை ஆட்சி ல் தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் புற்றீசலாக முளைத்தன. அந்த ஆட்சிக் காலத்திலேயே அப்பள்ளிகளின் அங்கீகாரம் செல் லாது என உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

அன்று அதில் பயின்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்று தியில் நிற்கின்றனர். தீர்ப்புக்கு முன் பயிற்சி முடித்து சான்றிதழ் பற்றவர்கள் சிலர் ஆசிரியர்களாக பணியில் உள்ளனர். அப்போது ரு சில பாடங்களில் தோல்வியுற்ற சிலர் பிறகு தேர்வு எழுதினர். வர்களுக்கும் இவர்களுடன் முறையாக முதல், 2-ஆம் ஆண்டு தர்வுகள் எழுதியவர்களுக்கும் இன்று வரை முடிவுகள் அறிவிக்கப் டவில்லை. பள்ளிக்கு அங்கீகாரம் இருந்தபோதுதானே மாணவர் ள் சேர்ந்து படித்தார்கள்? அவர்களின் பிரச்சினைகளை அரசு தீர்த் ருக்க வேண்டும் என்பதே முறை. தீர்ப்பு வந்த ஆண்டில் தவறிய டங்களில் தேர்வு எழுதியவர்களுக்கும் 2-ஆம் ஆண்டு தேர்வு ழுதியவர்களுக்கும் முடிவை அறிவித்து, ஆசிரியர்களாகப் பணிபு ய அனுமதிக்க வேண்டும். மேலும் ஓராண்டு பயிற்சி முடித்தவர்க ளுக்கும் கூட 2-ஆம் ஆண்டு பயிற்சி முடிக்க அரசே வழி செய்ய வேண்டும். இதுதான் நியாயமானது. இப்போதுள்ள தி.மு.க அரசாங் கத்திற்கும் இந்த தார்மீகப் பொறுப்பு உண்டு.

மாறாக, இம்மாணவர்களை அரசு அம்போவெனக் கைவிட்டு விட்டது. பணம் செலவிட்டு படித்தும் பலனின்றி, பரிதவிக்கின்ற னர். அவதிப்படும் இம் மாணவர்கள் கடந்த 22.8.98-இல் காலை 10 மணிக்கு சென்னையில் கோட்டை முன் தீக்குளிப்பு போராட்டம் அறிவித்தனர். அப்போதும் பிரச்சினையைத் தீர்க்க முன்வராத அரசு ஆயிரக்கணக்கான போலீசைக் குவித்து ஒடுக்கியது. இதையும் மீறி அண்ணாசாலை நேப்பியர் பாலமருகே 500 மாணவர்கள் மண் ணெண்ணெய் டின்களுடன் திரண்டனர். அவர்களை போலீசு தடி யடி நடத்தி விரட்டியடித்தது. அதையும் மீறி ஊர்வலம் செல்ல முயன்ற 50 பெண்கள் உட்பட 250 பேரைக் கைது செய்து சிறையி லடைத்தது.

அரசு தவறு செய்திருந்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் முடிவு செய்த அதிகாரிகளும் மந்திரிகளும் தானே தவிர பாதிக்கப் பட்ட அப்பாவி மாணவர்கள் அல்ல.

'பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்' (பெல்) என்ற பொதுத் றை நிறுவனம் 1986-ஆம் ஆண்டு சென்னை நந்தம்பாக்கத்தில் ந தொழிற்சாலையைத் தொடங்கியது. 180 தொழிலாளிகளும் 0 அதிகாரிகளும் அதில் பணியாற்றுகின்றனர்.

இங்கு முதலில் தி.மு.க.வின் என்.வி.என். சோமு தலைமை ல் ஒரு தொழிற்சங்கம் இயங்கி வந்தது. அது அதிகாரிகளின் கயாளாக இயங்கியதால் 1994ல் சிபிஎம் சார்பான டி. எஸ். ரங்கரா னை தொழிற்சங்க தலைவராக்கினர் தொழிலாளிகள், இருவரும் வாகத்தின் தில்லுமுல்லுகளுக்கு உடந்தையாகவே, கருணாக ா என்ற தொழிலாளியும் வேறுசில தொழிலாளர்களும் சேர்ந்து, ம் ஆண்டு பிப்வரியில் சென்னை பாரத் எலெக்ட்ரானிக்ஸ் எம்ப் ளீஸ் யூனியன் என்ற புதிய தொழிற்சங்கத்தை துணிவுடன் தாடங்கினர்.

நிர்வாகமும் பழைய தொழிற்சங்கமும் செய்த மோசடிகள், தொழிலாளர் விரோதப் போக்குகளை புதிய தொழிற்சங்கம் அம்ப லப்படுத்தத் தொடங்கவே, பொய்யான குற்றச்சாட்டின் பேரில் கரு ணாகரன் (புதிய சங்கத்தின் பொதுச் செயலர்) தற்காலிகப் பணி நீக்கம் செய்தனர். விசாரணையில் குற்றத்தை நிருபிக்க முடியாமல் தோல்வியடைந்தாலும் கருணாகரனை பணியில் சேர்விடாமல் நிர் வாகமும் டி.எஸ்.ரங்கராஜனும் தடுத்து வருகின்றனர். புதிய தொழிற் சங்கம் செயல்படுவதை முடக்குவதில் கூட்டணி வைத்துள்ளனர்.

பெல் நிறுவனத்திற்கு வேலைகள் தருவதை தடை செய்யும் அமெரிக்க அரசைக் கண்டித்து புதிய தொழிற்சங்கம் சுவரொட்டி ஒட்டியது. இது சட்ட விரோதம் என நிர்வாகம் சங்க முன்னோடிகள் மீது குற்றப்பத்திரிக்கை கொடுத்து அச்சுறுத்தி வருகிறது.

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னனி,
சென்னை.

# தெலுங்கானா போராட்டம்:

# அண்டப்புளுகன் அத்வானியின் வரலாற்று மோசடி

அயோத்தியில் தான் கடவுள் இராமன் பிறந்தார் என்று அகழ்வாராய்ச்சி மோசடிகளில் இறங்கி வரலாற்றைப் புரட்டிவரும் இந்து வெறியர்கள், இப்போது ''ஐதராபாத் விடுதலை'' விவகாரத்திலும் வரலாற்றுப் புரட்டுகளில் இறங்கி கம்யூனிஸ்டுகளைப் பழிதூற்றக் கிளம்பியுள்ளனர்.

அன்றைய ஐதராபாத் மாகாணம் என்பது 8 தெலுங்கானா மாவட்டங்கள் 5 மகாராஷ்டிர மாவட்டங்கள், 3 கர்நாடக மாவட்டங்களைக் கொண்ட நிஜாமின் தனி சமஸ்தானமாக இருந்தது. 1947-க்குப் பின், இரும்பு மனிதர் எனப்படும் அன்றைய நேரு அரசின் உள்துறை அமைச்சரான வல்லபாய் பட்டேல், இத்தகைய சிற்றரசர்களின் சமஸ்தானங்கள் மீது போர்தொடுத்தும், மிரட்டிப் பணியவைத்தும் இந்தியக் 'குடியரசு'டன் கட்டாயமாக இணைத்தார். ஐதராபாத் சமஸ்தானத்தின் மீது இந்திய இராணுவம் போர் தொடுக்க நுழைந்ததும் அதன் 7-வது நிஜாம் உஸ்மான் அலி, செப்டம்பர் 17, 1948-ல் சரணடைந்தார். பின்னர் நிஜாம் சமஸ்தானம் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டு ஆந்திரப் பிரதேச மாநிலமாகி, ஐதராபாத் அதன் தலை நகரமாகியது. நிஜாம் சமஸ்தானத்திலிருந்து ஐதராபாத் 'விடுதலை' பெற்று இன்று 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

வருமாண்டில் ஆந்திர சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளதால், ஐதராபாத் 'விடுதலை'யான பொன்விழா நிறைவு நாளை எல்லா ஓட்டுக் கட்சிகளும் கடந்த செப்டம்பர் 17-ந் தேதியன்று தனித்தனியே விழாவாக நடத்தி அரசியல் ஆதாயம் தேடக் கிளம்பின. ஐதராபாத் விடுதலை விழாவை நடத்த எவ்வித அடிப்படையோ அருகதையோ இல்லாத பாரதீய ஜனதா கட்சியும் இந்த விழாவை தனியே நடத்தியது. அதில் சிறப்புரை ஆற்றிய இந்துவெறி பாசிசத் தளபதியான அத்வானி, ''நாங்கள் ஆரிய சமாஜத்தின் பாரம்பரியத்திலிருந்து வந்தவர்கள். ஆரிய சமாஜம் ஐதராபாத் விடுதலைக்காகப் போரிட்டது. ஐதராபாத் விடுதலை என்பது முஸ்லிம் கொடுங்கோலாட்சிக்கு எதிராக இந்துக்கள் நடத்திய போராட்டம்'' என்று மதவெறி கண்ணோட்டத்தில் அண்டப் புளுகை அவிழ்த்து விட்டார். இதோடு, ''அன்று கம்யூனிஸ்டுகள் நிஜாம் படைகளுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து இந்திய இராணுவத்தை எதிர்த்து, ஐதராபாத் விடுதலைக்கு எதிராகச் செயல்பட்டு துரோகமிழைத்தார்கள்'' என்று கீழ்த்தரமான அவதூறையும் அள்ளி வீசியுள்ளார்.

இதற்கு ஆதாரமாக அன்று இந்தியாவின் உள்துறை அமைச்சக செயலராக இருந்த வி.பி. மேனன் என்பவர் எழுதியுள்ள, ''இந்திய மாகாணங்கள் ஐக்கியப்பட்ட கதை'' என்ற ஆங்கில நூலிலிருந்து ஒரு உளறலை அத்வானி மேற்கோள் காட்டியுள்ளார். அந்நூலில், ''ரசாக்கர்களுடன் (நிஜாம்படையினருடன்) கம்யூனிஸ்டுகள் கூட்டுச் சேர்ந்துள்ளதாக எங்களுக்கு செய்தி கிடைத்தது. 1943-லிருந்து மாகாணம் முழுவதும் கம்யூனிஸ்டுகளுக்குத் தடை விதித்திருந்த நிஜாம், 1948-ல் தடையை நீக்கியிருந்தார். நிஜாம் ஒரு முஸ்லிம் அரசாட்சியை சமஸ்தானத்தில் நிலை நாட்ட விரும்பினார். குழப்பத்தையும் அராஜகத்தையும் சாதகமாக்கிக் கொண்டு கம்யூனிஸ்டுகள் நிஜாம் படைகளுடன் மறைமுகமாக கூட்டு சேர்ந்து கொண்டு இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டனர். இந்தியா முழுவதும் கம்யூனிச ஆட்சியை நிறுவும் ரகசிய திட்டத்தையும் அவர்கள் கொண்டிருந்தத[...] தெரிய வந்தது'' என்[...] வி.பி. மேனன் எழு[...] யுள்ளார்.



இந்தப் பகு[...] யைத்தான் அத்வா[...] மேற்கோள் காட்[...] பொதுக் கூட்டத்[...] கம்யூனிஸ்டுகளைத் துரோகிகள் என[...] வசைபாடியுள்ளார்.

மேற்கோள் காட்டப்பட்ட இப்பகுதி[...] ஆதாரம் ஏதாவது இருக்கிறதா? ஒரு [...]லாற்று ஆய்வு நூலிலிருந்து ஆதார[...]ளைக் காட்டி அத்வானி பேசியிருந்த[...] கூட அதில் கடுகளவாவது உண்மை இரு[...]பதாக நம்பலாம். ஆனால் ஒரு அமைச்[...] செயலாளர், அரசுக்கு விசுவாசமா[...] செயல்பட்டவர் எழுதிய ஆதாரமற்ற [...]டுக் கதையைப் போய் ஆதாரமா[...] காட்டி, கம்யூனிஸ்டுகளை அவதூறு செ[...]யும் அத்வானிக்கு, யாராவது முனியாண்[...] விலாஸ் ஓட்டலில் மூளையை வா[...] அனுப்பி வைத்தால் நல்லது.

'ஐதராபாத் விடுதலை' என்று ஆ[...]யாளர்களாலும் ஓட்டுக் கட்சிகளா[...] வெட்டிச் சுருக்கி சித்தரிக்கப்படும் வீ[...]செறிந்த மாபெரும் தெலுங்கானா போரா[...]டம் கம்யூனிஸ்டுகள் தலைமையில் இ[...]சக் கணக்கான மக்கள் பங்கேற்ற பேரெ[...]சியாகும். நாட்டு விடுதலை என்ற பெய[...] காந்தி - காங்கிரசு துரோகக் கும்பல் வெ[...]ளையருடன் அரசியல் அதிகாரத்துக்கா[...] பேரங்கள் நடத்திக் கொண்டிருந்த கால[...]டத்தில், உண்மையான விடுதலைக்கு [...] புதிய பாதையில் மக்கள் திரண்டெழு[...] நடத்திய புரட்சிப் போராட்டமாகும். [...] நிஜாமின் கொடுங்கோன்மைக்கும், [...]கார வர்க்க கொடிய இந்து நிலப்பிரப[...]ளுக்கும், ரசாக்கர்கள் எனப்படும் நி[...]மின் படைகளுக்கு எதிராகவும், நிஜா[...] மாகாணத்தின் நிலப்பிரபுத்துவ அ[...]பைப் பாதுகாக்க நுழைந்த நேரு அரச[...] இராணுவத்துக்கு எதிராகவும் நட[...] மாபெரும் விவசாயப் புரட்சியாகும். நி[...]திற்காகவும் விடுதலைக்காகவும், அரசி[...] அதிகாரத்திற்காகவும் கம்யூனிஸ்டு[...] தலைமையில் விவசாயிகள் நடத்திய -[...]திய வரலாற்றில் இதுவரை கண்டிராத [...]தப் போராட்டப் பேரியக்கம் ஆகும்.

1946-லிருந்த 1951 வரை நீடி[...] தெலுங்கானா விவசாயப் புரட்சியில், [...]யூனிஸ்டுகளின் தலைமையில் 3000-க்[...] மேற்பட்ட கிராமங்கள் நிலப்பிரபுக்க[...] ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்யப்[...]டன. நிஜாம் நவாப்புகள் மற்றும் இ[...] நிலப்பிரபுக்களிடமிருந்து பறிமுதல் [...]யப்பட்ட ஏறத்தாழ 10 லட்சம் ஏக்கர் நி[...]களும், கால்நடைகளும், தானியங்களு[...] விவசாயிகளுக்குப் பங்கிடப்பட்டன. [...]டாமைக் கொடுமையும் மூட நம்பிக்[...]ளும் தகர்க்கப்பட்டன. ரசாக்கர்க[...] எதிர்த்து விவசாயிகள் கொரில்லா மு[...]



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

யில் போராடி அழித்தொழித்தனர்.

1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியாவில் அதிகார மாற்றம் ஏற்பட்ட பின்னர், நிஜாம் இந்திய யூனியனில் சேர மறுத்தார். இந்நிலையில், நிஜாம் மாகாணத்தோடு அன்றைய சென்னை ராஜதானியில் இருந்த தெலுங்கு மக்கள் வாழும் பகுதியையும் இணைத்து ''விசாலாந்திரா'' அமைக்கப்பட்டு அங்கு ''மக்களாட்சி'' நிறுவப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். காங்கிரசு கட்சியோ, ''இந்திய யூனியனில் இணைவது; பொறுப்புள்ள ஆட்சியை நிறுவுவது'' என்ற பசப்பல்களுடன் இப்போராட்டத்தில் பங்கேற்றது.

போராட்டம் தீவிரமடையவே நிஜாம் நவாப், நேரு அரசுடன் ஓராண்டுக்கு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டு கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார். காங்கிரசு துரோகிகளும், முஸ்லிம் ஆதிக்கத்தை எதிர்த்து வந்த ஆரிய சமாஜத்தினரும் தெலுங்கானாவை விட்டு இந்திய அரசுப் பகுதிகளுக்குச் சென்று ஒளிந்து கொண்டனர். நிஜாம் அரசு கம்யூனிஸ்டுகளை நரவேட்டையாடி 3000 பேரைக் கொன்றும், ஈராயிரம் கிராமங்களை அழித்தும், பத்தாயிரம் பேரை சிறையிலடைத்தும் கூட புரட்சியை ஒடுக்க முடியவில்லை. அது மேலும் விரிவடைந்து காட்டுத் தீயாகப் பரவியது.

கம்யூனிஸ்டுகள் தலைமையிலான புரட்சிப் போராட்டம் தீவிரமடைந்து வருவதைக் கண்டு அஞ்சிய நேரு அரசு, நிஜாம் அரசுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவதற்கு முன்பாகவே - செப்டம்பர் 13, 1948-ல் இந்திய இராணுவத்தை அனுப்பி போராட்டத்தை ஒடுக்கக் கிளம்பியது. தெலுங்கானா போராட்டம் தீவிரமாக நடந்த காலத்தில் இந்திய யூனியன் பகுதிகளில் ஓடி ஒளிந்திருந்த காங்கிரசு துரோகிகள், இந்திய இராணுவம் வந்ததும் அவர்களும் தெலுங்கானா பகுதிக்குத் திரும்பினர். இந்திய இராணுவத்தோடும் ரசாக்கர்களுடனும் சேர்ந்து கொண்டு கம்யூனிஸ்டுகளை வேட்டையாடினர்.

''நிஜாம் நவாப் சரணடைந்து விட்டதால் பங்கிட்டுக் கொண்ட நிலங்களை திரும்ப ஒப்படையுங்கள், காங்கிரசு அரசு நிலங்களை முறையாக பங்கிட்டுத் தரும். கம்யூனிஸ்டுகளை நம்பாதீர்கள். அவர்கள் ரஷ்யாவின் ஏஜெண்டுகள்'' என்று அன்றைய இராணுவத் தளபதி ஜே.என். சௌத்திரி தலைமையில், பங்கிடப்பட்ட நிலங்களை மீண்டும் பறித்துக் கொண்டனர். தெலுங்கானா போராட்டத்தின் போது தப்பியோடிய நிலப்பிரபுக்கள், காங்கிரசு குல்லாயுடன் திரும்பி வந்து நிலங்கைளக் கைப்பற்றிக் கொண்டு இந்திய இராணுவத்தின் உதவியுடன் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர்.

அன்றைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையோ, இப்புதிய நெருக்கடியான சூழ்நிலையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லாமல், நேரு அரசின் பசப்பல்களை நம்பி, போராட்டத்தைக் கைவிட்டு துரோகமிழைத்தது. அத்துரோகிகள்தான் இன்றைய 'இடது', வலது போலி கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவர்களாக உள்ளனர். ஆனால், இத்துரோகத்தை அம்பலப்படுத்தி, தெலுங்கானா கட்சிக் கமிட்டி போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்ற போதிலும், இந்திய இராணவத்தின் கடுமையான அடக்குமுறையாலும், போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத்தாலும் தெலுங்கானா குருதிச் சேற்றில் மூழ்கடிக்கப்பட்டது.

நிஜாம் கொடுங்கோலாட்சிக்கு எதிரான தெலுங்கானா போராட்டம் தீவிரமானபோது ஓடி ஒளிந்து காட்டிக் கொடுத்த காங்கிரசு, ஆரிய சமாஜத்தினரும், போராட்டத்துக்கு துரோகமிழைத்து ஓடிய 'இடது', வலது போலி கம்யூனிஸ்டுகளும் தான் இன்று தெலுங்கானா போராளிகளாகவும், தியாகிகளாகவும் வெட்கமின்றி பட்டம்சூட்டிக் கொண்டு வலம் வருகின்றனர்.

தெலுங்கானா போராட்டம் என்பது இராமன் கதையைப் போல ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கட்டுக் கதையல்ல. அது அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட போராட்ட வரலாறு. புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலைமையில் விவசாயிகளின் இரத்தத்தால் எழுதப்பட்ட தியாக வரலாறு. அப்போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர்களாக உரிமை பாராட்ட துரோகிகளான ராஜாங்க கம்யூனிஸ்டுகளுக்கு எந்த அருகதையும் கிடையாது. தெலுங்கானா தியாகிகளின் இரத்தத்தால் சிவந்த பாதையில் புதிய ஜனநாயகப் புரட்சிப் போரில் முன்னேறிவரும் நக்சல்பரி புரட்சியாளர்களுக்கு மட்டுமே அதற்கான உரிமை உண்டு. தெலுங்கானா போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி புரட்சிகர கம்யூனிஸ்டுகளை அவதூறு செய்யக் கிளம்பியுள்ள இந்துவெறி ஓநாய்களுக்கு, நக்சல்பாரிகள் தலைமையில் போராடி வரும் தெலுங்கானா மக்கள் உரிய பாடத்தை விரைவில் புகட்டவே செய்வார்கள்.

• பாலன்.

# மக்களின் ஒற்றுமையில் மதவெறி பாசிஸ்டுகளின் சதி முறியடிப்பு!

கோவை மாவட்டம் சூலூர் கிராமத்தில் சுமார் 30,000 பேர் வசிக்கின்றனர். இங்கு விவசாயத்திற்கும் மற்றும் மக்கள் குடிநீருக்கும் என 4 ஏக்கர் பரப்பளவில் ஊர் மையப் பகுதியில் ஒரு குளம் உள்ளது. இதை சுகாதாரத் துறை மூலம் சோதனை செய்தும் தூர் வாரியும் மக்களே பாதுகாத்து வருகின்றனர்.

1997-ஆம் ஆண்டு வினாயகர் சிலையை குளத்தில் கரைக்க இந்து முன்னணி முடிவு செய்திருப்பதை நாளிதழ்கள் மூலம் அறிந்த ஊர் மக்கள், மாவட்ட ஆட்சியருக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து மனுச் செய்தனர். பார்ப்பன மத வெறியர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட காவல்துறை 'ஏற்கனவே அனுமதி தந்து விட்டோம்' எனக் கூறி மதவெறியர்களுக்கு வக்காலத்து வாங்கியது. ஊர் மக்கள், மதவெறி ஊர்வலம் நடத்தவோ குளத்தை மாசுபடுத்தவோ உறுதியாக மறுத்தனர். பிறகு மாவட்ட ஆட்சியர் வந்து பேசியும் மக்கள் ஏற்கவில்லை. இறுதியாக மத எதிர்ப்பு முழக்கங்களின்றி பக்கத்து ஊரிலுள்ள ஆறு என்ற பெயரில் ஓடும் கழிவுநீர் சாக்கடையில் கரைக்க முடிவானது.

கோவையில் நரவேட்டையாடி, தேர்தலிலும் வென்ற தைரியத்தில் இம்முறை பிள்ளையாரை ஊர் குளத்தில் கரைத்தே தீருவது என இந்து முன்னணி வேலையில் இறங்கியது. சூலூர் பஞ்சாயத்துத் தலைவர் சு.ர. தங்கவேலு மற்றும் பஞ்சாயத்தார் தலைமையில் ஒன்ற திரண்ட ஊர் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'இந்துக்களின் காவலன், நீங்களே இப்படிச் செய்யலாமா?' என நைச்சியமாகப் பேசியது இந்து முன்னணி. 'நாங்களும் இந்து தான் சொல்கிறோம். பிள்ளையார் பெயரால் மதக் கலவரம் நடத்தி, குளத்தை மாசுபடுத்தி, ஊர் அமைதியைக் கெடுக்க வேண்டாம்' என ஊர் மொத்தமும் உறுதியாக நிற்கவே வேறு வழியின்றி காவல்துறை அனுமதி மறுத்தது.

ஆத்திரமடைந்த இந்து முன்னணி குண்டர்கள் காவல் நிலையம் முன் மறியல் செய்தனர். பா.ஜ.க. எம்.பி. சி.பி. இராதாகிருஷ்ணன் வந்து பேசி, குளத்தில் கரைக்காமல், அருகாமையில் ஆறு என ஓடும் சாக்கடையில் கரைப்பதென கடந்த ஆண்டு போல முடிவானது. நரித்தனமாக ஊர்வலத்தை குளக்கரை வழியே நடத்தி, சிலைகளை குளத்தில் கரைக்க சதி செய்தது இந்து முன்னணி. ஊர் மக்கள் கரை வழியே ஊர்வலம் கூட போகக் கூடாது என கறாராக நிற்கவே, மூக்குடைப்பட்ட இந்து முன்னணி கடந்த ஆண்டு போலவே வேறு வழியில் சென்று சாக்கடையில் சிலையைக் கரைத்தது.

தகவல்:
சூலூர் பஞ்சாயத்து தலைவர்
சு.ர. தங்கவேலு.

# இற்று விழும் முதலாளித்துவம் முட்டுக் கொடுக்கும் போலி கம்யூனிஸ்டுகள்

வேலையின்மை, ஊதியமின்மை, உணவுத் தட்டுப்பாடு, விலைவாசி ஏற்றம் முதலான நெருக்கடிகளில் தத்தளித்துக் கொண்டிருந்த ரஷ்யா, அண்மையில் ஏற்பட்ட நாணய மதிப்புக் குறைப்பின் விளைவாக சேற்றிலிருந்து புதைகுழிக்குள் சிக்கி விழிபிதுங்கி நிற்கிறது. ''இது வெறும் நிதித்துறை நெருக்கடி அல்ல; சந்தைப் பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த வீழ்ச்சியே இது!'' என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே எழுதுமளவுக்கு நிலைமை முற்றி, ரஷ்யாவின் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் மரணப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கிறது.

கடந்த ஜூலையில் நெருக்கடியில் சிக்கித் தவித்த ரஷ்யாவுக்கு ஐ.எம்.எஃப். இடைக்கால கடன் வழங்கி, டாலருக்கு நிகரான ரஷ்ய நாணயத்தின் மதிப்பை மேலும் குறைக்க வேண்டாம் என்று எச்சரித்தது. ஆனால் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல், பெற்ற கடன்கள் அனைத்தும் கடலில் கரைத்த பெருங்காயமாகிப் போனது. வேறுவழி தெரியாமல் பிரதமர் கிரியென்கோவ் தலைமையிலான அரசாங்கம், ரஷ்ய நாணயமான ரூபிளின் மதிப்பை கடந்த ஆகஸ்ட் இறுதியில் 50% அளவுக்குக் குறைத்தது. இதன் மூலம் சர்வதேசச் சந்தையில் ரஷ்ய உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைந்து ஏற்றுமதி பெருகும்; அதன் மூலம் அந்நியச் செலவாணியாக கூடுதலாக டாலரை ஈட்டி நெருக்கடிகளைச் சமாளித்து விடலாம் என்று ஆட்சியாளர்கள் கனவு கண்டனர். ஆனால் இது ஆப்பசைத்த குரங்கின் கதையாகிவிட்டது.

ரஷ்யாவின் முக்கிய ஏற்றுமதி பெட்ரோலிய எண்ணெய்தான். ஆனால் சர்வதேச எண்ணெய்ச் சந்தையோ ஏற்கனவே விலை வீழ்ச்சியால் தேக்கமடைந்து முடங்கிக் கிடக்கிறது. இதனால் ரூபிளின் மதிப்பு குறைக்கப்பட்டாலும் ஏற்றுமதி பெருகவில்லை. மறுபுறம், நாணய மதிப்புக் குறைப்பால், ரஷ்யா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதலாக அந்நியச் செலாவணியைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இதனால் விலைவாசிகள் தாறுமாறாக உயர்ந்தன. ஏற்கனவே பல மாதங்களாக சம்பளம் இல்லாமல் பரிதவித்த ரஷ்ய மக்கள், வங்கிகளில் போட்டுள்ள தமது அற்ப சேமிப்புகளை எடுக்கத் தொடங்கினர். இதனால் வங்கிகளில் சேமிப்பு குறைந்து, அரசு வெளியிட்ட கடன் பத்திரங்களுக்கான முதிர்வுத் தொகையைக் கூட கொடுக்க முடியாமல் அடுத்தடுத்து பல பெரிய வங்கிகள் மூடப்பட்டு மஞ்சள் கடுதாசி கொடுத்தன. பீதியடைந்த அரசு, வங்கிகளிலிருந்த சேமிப்புகளை எடுக்க தடைவிதித்தும், கடன் பத்திர முதிர்வுத் தொகையைத் திரும்பப் பெற மூன்று மாத கால நீட்டிப்பு செய்யும் அவசரச் சட்டம் போட்டது. சம்பளமும் இல்லை; சேமிப்புப் பணமும் இல்லை என்றால் மக்களால் எப்படி வாழ முடியும்? ஆத்திரமடைந்த மக்கள் ''கொடுங்கோலன் யெல்ட்சினே பதவி விலகு!'' என்று கலகங்களில் இறங்கத் தொடங்கினர்.


அதிகார வெறியும் குடிவெறியும் கொண்ட ரஷ்யாவின் நவீன ஜாராகிய அதிபர் யெல்ட்சின், கிரியென்கோவ் அரசாங்கத்தின் மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்ள ஆடிய பசப்பல் நாடகங்களை மக்கள் நம்பத் தயாராக இல்லை. ரஷ்ய மக்கள் மட்டுமல்ல; எவ்வளவு தான் முட்டுக் கொடுத்து உதவினாலும் நிலைமையைச் சீராக்க வக்கற்ற யெல்ட்சினை நீக்க வேண்டும் என்றே மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் விரும்புகின்றன. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்த கதையாக, யெல்ட்சினால் ஊட்டி வளர்க்கப்பட்டு, அவரது முக்கிய தூணாக விளங்கிய பெரேசோவ்ஸ்கி என்ற ஏக போக முதலாளியே இன்று அவருக்கு எதிராக நிற்கிறார். சந்தைப் பொரு[ளாதாரத்தை] தீவிர[]மாக ஆதரிக்கும் வலது[]சாரி - பாசிசக் கட்சிகள் கூட இப்போது யெல்ட்சினைக் கைகழுவி விட்டன. ரஷ்ய நாண[]யத்தைப் போலவே அரசியலில் அவர் செல்லாக் காசாகிக் கிடக்கிறார்.

இந்த நிலைமைகளைச் சாதகமாகக் கொண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள பிரஷ்னேவைட்டுகள் எனப்படும் போலி கம்யூனிஸ்டுகளும் தேசியவாத - மையவாதக் கட்சிகளும் யெல்ட்சின் கண்ணில் விரலை விட்டு ஆட்டுகின்றன. கிரியென்கோவ் அரசாங்கத்தை நீக்கிவிட்டு, முன்பு நிர்வாகத் திறனற்றவர் என்று பிரதமர் பதவியிலிருந்து தானே நீக்கிய செர்னோமிர்தினை மீண்டும் அப்பதவியில் யெல்ட்சின் நியமித்ததும், கடந்த செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் நாடாளுமன்றம் அதை அங்கீகரிக்க மறுத்தது. யெல்ட்சின் மீது பகிரங்கக் குற்றம் சாட்டும் தீர்மானத்தையும், நம்பிக்கையில்லா தீர்மானத்தையும் கொண்டுவர எதிர்த்தரப்பு முயற்சித்தது. ஐந்தாண்டுகளுக்கு முந்தைய யெல்ட்சினாக இருந்தால், நாடாளுமன்றத்தின் எஞ்சிய உரிமையையும் அதிகாரத்தையும் பறித்து ஆட்டம் போட்டிருப்பார். ஆனால் இப்போது நெருக்கடியில் சிக்கி அரசியல் அனாதையாகி விட்ட யெல்ட்சின், எதிர்த்தரப்பினருடன் பேரங்கள் நடத்தி, தற்காலிக சமரசத்துக்கு வந்துள்ளார். ''அதிபரிடம் குவிந்துள்ள வரம்பற்ற அதிகாரத்தை நீக்கு! நாடாளுமன்றத்துக்கு உரிய அதிகாரங்களைக் கொடு!'' என்ற எதிர்த்தரப்பின் கோரிக்கையைப் பரிசீலித்து உரிய சட்டத் திருத்தம் செய்ய

நெருக்கடிக்கு முட்டுக் கொடுக்கும் போலி கம்யூனிஸ்டு பிரதமர் பிரிமகோவ்



சந்தைப் பொருளாதாரத்தின் மகிமை: பட்டினியிலிருந்து மீள உருளைக் கிழங்கு சேகரிக்கும் ரசிய இராணுவம்





www.padippakam.com

www.padippakam.com

முயற்சிப்பதாகவும் யெல்ட்சின் இறங்கி வந்துள்ளார்.

இப்பேரங்களுக்குப் பிறகு, போலி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த, முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் அரசுத் தூதராகவும் உளவுத்துறை அதிகாரியாகவும் செயல்பட்ட யெவ்ஜெனி பிரிமகோவ், ரஷ்யாவின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். அன்றைய போலி கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களை துணைப் பிரதமர், மத்திய வங்கித் தலைவர் பதவிகளில் புதிய பிரதமர் நியமித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து ''கிரெம்ளின் மாளிகையின் அதிகாரத்துக்கு மிக அருகாமையில் மீண்டும் கம்யூனிஸ்டுகள் வந்துவிட்டார்கள்; ரஷ்யாவில் புதிய திருப்பம்; சந்தைப் பொருளாதாரப் பாதை மூடப்படுமா? மீண்டும் அரசுத் துறை உருவாகுமா?'' என்றெல்லாம் முதலாளித்துவப் பத்திரிகைகள் பரபரப்பூட்டுகின்றன.

ஆனால் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரப் பாதையிலிருந்து விலகாமல், கிழிசல்களை ஒட்டுப் போடுவதே பிரிமகோவின் நோக்கமாக உள்ளது. ''சீர்திருத்தங்களில் சில மாற்றங்களைச் செய்து முன்னெடுத்துச் செல்வோம். பின்னோக்கிச் செல்ல மாட்டோம். அரசின் நேரடி நிர்வாக அமைப்பு முறையை மீண்டும் கொண்டு வரும் நோக்கம் எமக்கில்லை. எங்கள் மீது சிவப்புச் சாயம் பூச வேண்டாம்'' என்கிறார் அவர். முழுமையான ஐ.எம்.எஃப்.-இன் கட்டுப்பாடும் அல்லாத, முழுமையான பிரஷ்னேவ் பாணி அதிகார வர்க்கக் கட்டுப்பாடும் அல்லாத ஒரு புதிய முறையை நிறுவப் போவதாக அவர் சவடால் அடிக்கிறார். ஆனால் கடன்களை திருப்பிச் செலுத்துவது, சரிந்துவிட்ட நாணய மதிப்பை தூக்கி நிறுத்துவது, முடங்கிவிட்ட வங்கி - நிதி நிறுவனங்களைச் செயல்பட வைப்பது, பல மாதங்களாக ஊழியர்களுக்கு கொடுக்கப்படாத ஊதியம் - ஓய்வூதியங்களைத் தருவது முதலான முதன்மையான நடவடிக்கைகளுக்காக அவர் உலக வங்கி - ஐ.எம்.எஃப்.-பிடம் மீண்டும் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. போதாக் குறைக்கு ஊழல் - கிரிமினல் - மாஃபியாக்கள்; அரசியல் சந்தர்ப்பவாதிகள் - மையவாதிகள் - பாசிஸ்டுகள் ஆகியோரின் கூட்டாளிகளே அவரது அமைச்சரவையைச் சூழ்ந்துள்ளனர்.

மேலும் பிரஷ்னேவைப் போன்றுகளான போலி கம்யூனிஸ்ட் கட்சியும் ஐக்கியப் பட்ட கட்சியாக இல்லாமல் பல குழுக்களாக உள்ளது. இக்குழுக்களும் தேசியவாத - மையவாதக் கட்சிகளும் கூட்டணி சேர்ந்து யெல்ட்சினுக்கு எதிராக தேசிய புனர் நிர்மாண முன்னணியை நிறுவியுள்ளன. வலதுசாரி பிற்போக்கு கட்சிகளும், பாசிச வெறியன் ஜெரினோவ்ஸ்கியின் கட்சியும் இம்முன்னணியை எதிர்ப்பதோடு யெல்ட்சினையும் எதிர்க்கின்றன. ரஷ்ய அரசியல் நீரோட்டத்தில் 30-க்கும் மேற்பட்ட கட்சிகளும் குழுக்களும் இருந்தாலும் எவையும் நாடு தழுவிய செல்வாக்கு பெற்றவையாக இல்லை.

குமுறிக் கொண்டிருக்கும் ரஷ்ய மக்களின் கோபத்தைத் தணிக்க புதிய போலி கம்யூனிஸ்ட்டு பிரதமர் மூலம் வடிகால் வெட்டி விட்டதாக ஆளுங் கும்பலும் ஏகாதிபத்திய வல்லரசுகளும் மனப்பால் குடித்தாலும், அது நீடிப்பதற்கோ ஒருங்கிணைந்த கொள்கைகளைச் செயல்படுத்தவோ எந்த அடிப்படையுமில்லை.

• குமார்.

# இந்து வெறியர்களின் தாக்குதலும் 'மார்க்சிஸ்டு'களின் கோழைத்தனமும்

சென்னை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த 13.9.'98 ஞாயிறன்று சென்னை - திருவல்லிக்கேணியில் உள்ள அரசுடமையாக்கப்பட்ட பாரதியார் நினைவு இல்லத்தில் கவிதைத் திருவிழா நடத்தியது. அங்கு பெரியார், அம்பேத்கார், பகத்சிங் ஆகியோர் எழுதியவை உட்பட பல நூல்களும் விற்பனை செய்யப்பட்டன.

காலையில் ஒரு நிகழ்ச்சி முடிந்தது. மதிய உணவுக்குப் பின், அடுத்த நிகழ்ச்சி தொடங்கிய பின் இந்து மக்கள் கட்சியின் குண்டர்கள் சிலர் முழக்கமிட்டவாறு உள்ளே புகுந்தனர். அவர்களை யாரும் தடுக்கவுமில்லை. ஒரு சுற்று முழக்கமிட்டு புத்தகங்கள் விற்குமிடமருகே வந்தனர்.

'எந்தத் தேவடியாப் பையன்டா, தேவடியாப் பய பெரியார் எழுதுன புத்தகத்த இங்க விக்கிறது...' எனத் தொடங்கி கீழ்த்தரமாக வசைபாடி புத்தகங்களை சூறையாடத் தொடங்கினர். அப்போது சிலர் தலையிட்டுத் தடுக்க முயன்றனர். அவர்களை இழுத்துப் போட்டு அடிக்கத் தொடங்கினர்.

அங்கு சுமார் 300-க்கும் மேற்பட்டவர்கள் கூடி இருந்தனர். வந்த கும்பல் சுமார் 30 பேர்களிருப்பார்கள். இந்தக் கலவரம் தொடங்கவும் பெரும்பான்மையினர் அவ்விடத்தில் கூடினர். கவியரங்கம் நடத்துபவர்களோ, 'அனைவரும் நிகழ்ச்சியைக் கவனியுங்கள், அங்கு போக வேண்டாம்' எனக் கேட்டுக் கொண்டனர்.

ஒருபுறம் தகராறு நடந்து, மதவெறி பாசிச குண்டர்கள் த.மு.எ.ச.வினர் மூன்று பேரைத் தாக்கினார்கள். மேடையிலோ ஒருவர் கவிதை வாசித்துக் கொண்டே இருந்தார். இதற்கிடையே யாரோ ஒருவர் காவல் துறைக்குத் தகவல் தர, காவல் துறையினர் வந்து இந்து மக்கள் கட்சியினரை வாயிலுக்கு வெளியே கொண்டு சென்றனர். அங்கு ஒரு மணி நேரத்திற்கும் மேலாக 'ஒழிக' முழக்கங்கள் போட்டனர். 'கவிதை திருவிழா' ஏற்பாட்டாளர்களோ கதவை மூடிக் கொண்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்தனர்.

காவல்துறை அதிகாரிகள் த.மு.எ.ச.வினரை விரைந்து நிகழ்ச்சியை முடித்துக் கொள்ளக் கேட்டதற்கிணங்க, 'தவிர்க்க முடியாத காரணத்தால் சீக்கிரம் நிகழ்ச்சியை முடிக்க வேண்டி உள்ளது' என அறிவித்து, அவசர அவசரமாக, அரைகுறையாக நிகழ்ச்சியை முடித்துக் கொண்டனர்.

இந்து மதவெறி பாசிச கும்பலின் அத்துமீறல், அடாவடி, ரௌடித் தனத்தை ஒரு வரி கூட மேடையிலிருந்து கண்டிக்கவில்லை. சம்பவம் நடக்கும்போது, அதை அனுமதித்து வேடிக்கை பார்த்ததை, எவ்விதச் சலனமின்றி நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்ததை என்னவென்பது?

இந்த இந்து மக்கள் கட்சியினர்தான் இராம கோபாலய்யருடன் முரண்பட்டு பார்ப்பனரல்லாதோர் என பிரிந்து வந்ததாகப் பசப்பினார்கள். இருவருக்குமிடையே வேறுபாடில்லை என்று முன்பே பு.ஜ.வில் எழுதினோம். நடந்திருப்பதும் இதையே நிறுவுகிறது.

இந்து மதவெறி கும்பலின் இந்த தாக்குதலைக் கண்டித்து 21.9.'98 மாலை திருவல்லிக்கேணி தேரடியில் த.மு.எ.ச.வினர் கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தினர்.

இந்து மதவெறி பாசிஸ்டுகளின் இந்த தாக்குதலைக் கண்டிப்பதிலிருந்து திசைமாறி, 'இந்துக் கடவுள்களைப் பாடிய பாரதியார் இல்லத்தில் கடவுள் மறுப்புப் புத்தகங்களா' எனக் கலவரம் செய்த இந்து மக்கள் கட்சியினரின் கேள்விக்கு பதிலளிப்பதாக பெரும்பாலானவர்களின் பேச்சு இருந்தது. பிரச்சினை பாரதியைப் பற்றியதல்ல. இந்து மதவெறி பாசிஸ்டுகளின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, பாசிசப் போக்கைப் பற்றியது.

இத்திசைவழியில் கூட்டத்தை நடத்திச் சென்று பார்ப்பன மதவெறி பாசிச குண்டர்களைத் தோலுரித்து, மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி ஒழித்துக் கட்ட அறைகூவி அணிதிரட்டவில்லை. இந்த போலி கம்யூனிஸ்டுகளின் செயலற்ற தன்மைக்கு வேறென்ன சான்று வேண்டும்?

தகவல்: சேவியர் கபிலன், சென்னை.



படிப்பகம்

படிப்பகம்

## ஏகாதிபத்திய வாசலிலே இடி முழக்கம்:

# இராணுவத்தை விரட்டியடிக்கும் விவசாய வீராங்கனைகள்!

**ந**வீன ஆயுதங்களையும், போர் பயிற்சிகளையும் பெற்றிருக்கும் இராணுவத்தை, வெறும் கழிகளைக் கொண்டு துரத்திவிட முடியுமா? அமைப்பாக இணைந்து நின்றால், வெறும் கழிகளைக் கொண்டே இராணுவத்தைத் துரத்தியடித்திட முடியும் என நிரூபித்து வருகிறார்கள், மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த பழங்குடி இனப் பெண்கள்.

தென் அமெரிக்க கண்டத்திலுள்ள மெக்சிகோ நாட்டில், சியாபஸ் பிராந்தியத்தில் வாழும் பழங்குடி இன மக்கள் தங்கள் தன்னுரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை மூன்றாண்டுகளுக்கு முன் தொடங்கினர். இப்போராட்டத்தை தேசிய விடுதலைக்கான சபாடிஸ்டா படை என்ற அமைப்பு தலைமையேற்று நடத்தி வருகிறது. சியாபஸ் பிராந்தியத்தைச் சேர்ந்த பல கிராமங்கள் இவ்விவசாயப் புரட்சியாளர்களின் பின்னே அணி திரண்டுள்ளன. அக்கிராமங்களில் எல்லாம் அரசு இயந்திரம் முடமாகிவிட்டது. விவசாயிகளின் இப்புரட்சிகர எழுச்சியை ஒடுக்க, சியாபஸ் பிராந்தியம் முழுவதையுமே இராணுவமயமாக்கியது மெக்சிகோ அரசு. கிராமங்களுக்குள் நுழையும் இராணுவம் சகட்டு மேனிக்கு பழங்குடி இன ஆண்களைச் சுட்டுத் தள்ளியது. இதிலிருந்து தப்புவதற்காக, ஒட்டு மொத்த கிராம மக்களுமே இராணுவம் வரும் சமயங்களில் கிராமத்தை விட்டு வெளியேறி மலைகளில் பதுங்கிக் கொண்டனர். ஆனால், மீண்டும் கிராமத்திற்குத் திரும்பும் பொழுது, அவர்கள் வாழ்வின் ஆதாரங்கள் அனைத்தும் இராணுவத்தால் அழிக்கப்பட்டிருக்கும்.

இராணுவத்தினரின் இந்த அட்டூழியங்களை இனியும் சகித்துக் கொள்ள முடியாது என்ற நிலை வந்தபொழுது, அப்பழங்குடி இனப் பெண்கள், "இராணுவ நடமாட்டம் இருக்கும் நேரங்களில், ஆண்களை மலைகளுக்குச் சென்று பதுங்கச் சொல்லி விட்டு, தாங்கள் கிராமத்திலேயே தங்கியிருந்து இராணுவத்தை எதிர்ப்பது" என முடிவெடுத்தனர். இப்போராட்டத்தை நடத்துவதற்காக கிராமங்கள் தோறும் பெண்கள் கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

சியாபஸ் பிராந்தியத்தில் தென் கோடியில் அமைந்துள்ள மொரேலியா கிராமப் பெண்கள், இராணுவத்தைத் துரத்தியடித்த போராட்டம் பற்றிய கட்டுரைதான் இது. இக்கட்டுரையாசிரியர் ராபின் :பிலின்கம், மொரேலியா கிராமப் பெண்களின் போராட்டத்தில் நேரடியாகவே கலந்து கொண்டவர். மேலும், அப்பழங்குடி இனப் பெண்களின் போராட்டத்தைத் தொகுத்து, செய்திக் கட்டுரைகளாகத் தொடர்ந்து வெளியிட்டும் வருகிறார். மூன்றாம் உலக வலைப்பின்னல் (Third World Net Work) என்ற தன்னார்வக் குழுக்களின் கூட்டமைப்பின் சார்பாக மலேசியா நாட்டில் இருந்து வெளியாகும் தேர்டு வேர்ல்டு ரிசோர்ஜன்ஸ் - (ஜூலை. '98) இதழில் வெளிவந்த அவரது இக் கட்டுரையை, சுருக்கமாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளோம்.

**நா**ன், அந்தச் சாலையின் ஒருபுறத்தில் கிடந்த தூசு மண்டியிருந்த பாறையொன்றின் மீது அமர்ந்திருந்தேன். எனக்கு அருகில், என்னோடு ஒட்டிக் கொண்டு எஸ்பெரன்ஸா அகிலர் ஜிமேனெஸ் உட்கார்ந்திருந்தாள். ஏழு வயதான எஸ்பெரன்ஸா எலும்பும் தோலுமாகத் தெரிந்தாள்; நேர்த்தியாக ஒட்டுபோடப்பட்ட பாவாடையை அணிந்திருந்தாள். இதோ, முன்னால் நீண்டு வளைந்து செல்கிறதே இந்தச் சாலை, இதன் வழியே போனால், எஸ்பெரன்ஸாவின் சொந்தக் கிராமமான மொரேலியா (Morelia) வுக்குச் சென்று விடலாம். அவளது கிராமம் சியாபஸ் பிராந்தியத்தின் தென்மூலையில் கிடக்கிறது.

இந்த நண்பகலில் எஸ்பெரன்ஸா பள்ளிக்கூடத்தில் இருந்திருக்க வேண்டும். ஆனால், ஆசிரியர்கள் எல்லாம் எங்கோ சென்று விட்டார்கள். மெக்சிகோ இராணுவம் கிராமத்திற்குள் வரப் போகிறது என்ற பயத்தில், அவர்கள் அனைவரும் நெரிசல் நிறைந்த ஒரு சிறிய வண்டியில் ஏறிக் கொண்டு, கிராமத்தை விட்டு மிக வேகமாக வெளியேறிப் போனதை நானே பார்த்தேன்.

இராணுவத்தின் நடமாட்டத்தை நேற்றைக்கு முதல் நாள் பார்த்துவிட்ட உடனேயே, நானும், எஸ்பெரன்ஸாவும், கிராமத்தைச் சேர்ந்த 20 பெண்களும், குழந்தைகளும், மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த சிலரும், இராணுவம் கிராமத்திற்குள் நுழைகிறதா எனக் கண்காணிக்க ஆரம்பித்து விட்டோம். 1994-ஆம் ஆண்டு மெக்சிகோ இராணுவத்தால் கொல்லப்பட்ட மொரேலியா கிராமத்தைச் சேர்ந்த மூன்று ஆண்களின் நினைவாக நடந்த அஞ்சலி கூட்டத்திலேயே கிராமப் பெண்களுக்கும் எச்சரிக்கை கொடுக்கப் பட்டு விட்டது. அதைக் கேட்டவுடனேயே அவர்கள் கையில் இருந்த மெழுகுவர்த்தியை அணைத்து விட்டு, ஓடிப் போய் கழிகளைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். சிறிய குழந்தைகள், வயதான பெண்களின் பாதுகாப்பில் மூடிய வீட்டுக்குள் இருக்கின்றன; சன்னலையும், கதவுகளையும் இழுத்து மூடியதோடு, வீட்டை பூட்டியும் விட்டனர்.

அஞ்சலிக் கூட்டத்தை நடத்தியதைத் தவிர, வேறு எந்தவொரு ஆணும் என் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. சியாபஸ் பிராந்தியத்தில் வாழும் பழங்குடி இன மக்களின் தன்னுரிமைக்காகவும், மெக்சிகோ நாட்டின் அனைத்து மக்களுக்காகவும் போராடி வரும் தேசிய விடுதலைக்கான சபாடிஸ்டா படைக்கு ஆதரவு கொடுத்து வரும் இப்பழங்குடி இன மக்களை ஒடுக்க, மெக்சிகோ நாட்டு அதிபர்

மொரேலியா கிராமப் பெண்களின் எதிர்ப்பைக் கண்டஞ்சி, பின்வாங்கிச் செல்லும் இராணுவம்





www.padippakam.com

www.padippakam.com

எர்னெஸ்டோ செடில்லோ இராணுவத்தை அனுப்பிய பின், கிட்டதட்ட ஒரு வருடமாகவே இக்கிராம ஆண்கள் மலைகளுக்குச் சென்று, பதுங்கி வாழ்ந்து வருகிறார்கள்.

1994-ஆம் ஆண்டு இக்கிராமத்தைச் சேர்ந்த மூன்று ஆண்கள் கொல்லப்பட்டனர்; 1995 ஆம் ஆண்டு இராணுவம் கிராமத்திற்குள் நுழைந்த பொழுது, கிராம மக்கள் ஒட்டு மொத்தமாக மலைகளுக்குத் தப்பியோடி விட்டனர். குளிரையும், பசியையும், நோயையும் தாங்கிக் கொண்டு, ஒரு மாதம் கழித்து திரும்பி வந்த பொழுது, அவர்களது பயிரெல்லாம் நாசமடைந்திருந்தன.

எஸ்பெரன்சாவின் தாயாரான ரோலின்டா ஜிமேனெஸ் சான்செஸ், பெண்கள் கமிட்டியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் அதிகாரிகளுள் ஒருவர். சாலையை விட்டு கண்களை எடுக்காமல், இராணுவம் வருகிறதா எனப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, அவர் என்னிடம், "அப்பா இல்லாமல், எனது குழந்தைகள் சாப்பிடக் கூட மாட்டார்கள்; இங்கிருக்கும் ஆண்கள் எல்லாம் வயல்களில் கடுமையாக உழைத்து, குழந்தைகளுக்கு உணவைக் கொண்டு வருகிறார்கள். இராணுவம் அவர்களைக் கொன்று போடுவதை நாங்கள் விரும்பவில்லை; அதனால் தான் பெண்கள் கிராமத்தில் தங்கிக் கொண்டு அவர்களைப் பாதுகாப்பதென முடிவெடுத்தோம்" என கிராமப் பெண்கள் கமிட்டி எடுத்த முடிவை விளக்கினார்.

கிராமத்திலேயே தங்கியிருப்பது என்பது அவ்வளவு எளிதானதல்ல; ஏற்கனவே ஒருமுறை இப்பெண்கள் இராணுவத்தைத் துரத்தியடித்திருந்தாலும், தொடர்ந்து இராணுவ நடமாட்டத்தைக் கண்காணிக்க வேண்டியிருப்பதால், வீட்டையும் வயலையும் சரியாக பராமரிக்க முடிவதில்லை. இதோ, இன்றைக்கு யாரும் உணவு தயாரிக்கவில்லை. சோளத்தை அரைத்து மாவாக்கவோ, அதைப் பிசைந்து ரொட்டி தயாரிக்கவோ, ரொட்டிகளைச் சுடுவதற்கு விறகு வெட்டி வரவோ யாருக்கும் நேரமில்லை.

"இராணுவத்திற்குப் பயந்து மலைகளுக்கு ஓடிச் சென்று, துன்பப்படுவதைவிட, இது மேலானது" என்றாள் ரோலிண்டா. "நாங்கள் முன்னணி வீரர்கள் இல்லாமல் இருக்கலாம்; ஆனால், நிறைய பெண்கள் இருக்கிறோம்; அமைப்பாக இணைந்துள்ளோம். இராணுவ வீரர்கள் வந்தால், சாலையை மறித்து அவர்கள் கிராமத்தினுள் நுழைவதைத் தடுத்து விடுவோம்" - ரோலிண்டாவின் குரல் மெலிதாக உறுதியாக ஒலித்தது.

வெயில் நன்றாகக் கொளுத்தியது; காட்டில் இருந்து வீசிய காற்றுகூட வெப்பமாக இருந்தது. சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுள் ஒருவன், "அடக் கடவுளே, அதோ அவர்கள்" என்றான். நாங்கள் அனைவரும் பதட்டத்தோடு எழுந்து நின்றோம். ஒரு 500 மீட்டருக்கு அப்பால் பெரிய இராணுவப் பட்டாளம்; வீரர்களையும், ஆயுதங்களையும் ஏற்றிக் கொண்டு வந்த லாரிகள் ஒவ்வொன்றாக சாலையின் வளைவில் திரும்பின. குழந்தைகள் கற்களைப் பொறுக்கத் தொடங்கினர். மனித உரிமை அமைப்புகளில் இருந்து வந்தவர்கள் தங்கள் புகைப்படக் கருவிகளை கீழே குனிந்து எடுத்துக் கொண்டார்கள். இதே சமயத்தில் பெண்கள் கைகளில் கழிகளோடு சாலையை நோக்கி முன்னே நடக்கத் தொடங்கினர்.



மெக்சிகோ இராணுவத்தினரை கிராமத்திற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தும் சியாபஸ் பழங்குடி இனப் பெண்கள்.

ரோலிண்டோ எனது பக்கத்தில் இருந்தாள். "நீங்களும் எங்களுடன் சேர்ந்து சாலையின் குறுக்கே நிற்க முடியுமா?" எனக் கேட்டாள். நாங்கள் சாலையின் குறுக்காக, இராணுவம் பார்க்கும்படி ஒரே வரிசையில் நின்றோம். இராணுவ லாரிகள் எங்களின் எதிரே வந்து நின்றன.

அதே சமயம், கிராமத்தில் மாதா கோயிலின் மணிகள் ஒலிக்கத் தொடங்கின. இது பூசைக்கான அழைப்பு அல்ல எனப் புரிந்து கொண்டு, கிராமத்தில் இருக்கும் எஞ்சிய பெண்கள் எச்சரிக்கை அடைந்திருப்பார்கள். சாலையை மறித்து நின்ற பெண்கள் குமுறுவது எனக்குக் கேட்டது. அவர்களுள் ஒருத்தி கோபத்தை அடக்க முடியாமல், "திரும்பி போ! நீ இங்கே வருவதை நாங்கள் விரும்பவில்லை" எனக் கத்தினாள். அதைத் தொடர்ந்து, பலரும் ஒரே சமயத்தில், இராணுவத்திற்கு எதிராகக் குரல் எழுப்பினார்கள். எஸ்பரென்ஸா ஒரு கையில் கல்லையும், இன்னொரு கையால் தனது அம்மாவின் பாவாடை ஓரத்தையும் பிடித்தபடி அந்தக் கூட்டத்தில் நின்று கொண்டிருந்தாள்.

கிராமத்தில் இருந்த மற்ற பெண்களும் ஆவேசமாக ஓடி வருவதைப் பார்த்தவுடன் இவர்களின் எதிர்ப்பு மேலும் தீவிரமானது. கைகளில் இருந்த கழிகளை ஓங்கிப் பிடித்தபடியும், "இராணுவமே பாசறைக்கு திரும்பு" எனக் கத்திக் கொண்டும், அவர்கள் இராணுவ லாரிகளை நோக்கி ஓடத் தொடங்கினார்கள்.

இராணுவம் வந்த வழியே திரும்பத் தொடங்கியது. அவர்கள் பின் வாங்கினாலும், இராணுவ லாரிகள் மெதுவாக, ஊர்ந்து தான் சென்றன. இராணுவ லாரிகளைத் துரத்திக் கொண்டு வந்த பெண்கள், கடைசியாகச் சென்று கொண்டிருந்த லாரியைப் பிடித்துக் கொண்டார்கள். அந்த லாரியில் 20 வீரர்கள் இருந்தார்கள். அவர்களிடம் தானியங்கி துப்பாக்கிகள் இருந்தன. பெண்கள் கழிகளால் லாரியைத் தாக்கினார்கள்; குழந்தைகள் வீசிய கற்கள், இராணுவத்தினர் அணிந்திருந்த தலை கவசத்தில் பட்டு கீழே விழுந்தது. அவர்கள் துரத்தி வரும் பெண்களை நேராகப் பார்க்காமல், முதுகைக் காட்டி திரும்பி நின்று கொண்டனர். லாரிகள் அனைத்தும் மெதுவாகவே திரும்பி சென்று கொண்டிருந்தன.

ஒரு கட்டத்தில் லாரிகள் அனைத்தும் நின்றன. முன்னால் நின்ற வாகனம் ஒன்றில் இருந்து இறங்கிய உயர் அதிகாரி, துரத்தி வந்த பெண்களை நோக்கி வந்தான். "நான் உங்களுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்து வந்துள்ளேன். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? உங்களுக்கு எதுவும் தேவையா எனக் கேட்டுப் போகத்தான் நான் வந்தேன்" என உரக்கக் கத்தினான்.

"நியுவா எஸ்பரென்ஸாவில் நடந்ததைப் போலவா?" எனத் திரும்பிக் கத்தினாள் ரோலிண்டா. இந்த ஆண்டின் துவக்கத்தில், அந்தக் கிராமத்திற்குள் இராணுவம் நுழைந்த பொழுது, அக்கிராம மக்கள் இராணுவத்திற்குப் பயந்து, தப்பியோடி விட்ட


படிப்பகம்

படிப்பகம்

னர். அவர்கள் கிராமத்திற்கு திரும்பி வந்த பொழுது, சிலரது வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டிருந்தன; பயிர்கள் எரிந்து சாம்பலாகியிருந்தன. மாடுகளையும் கோழிகளையும் இராணுவம் திருடி தின்று தீர்த்திருந்தது.

அந்த அதிகாரி பெண்களைச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்த பொழுது, ஒரு கல் தாழப் பறந்து வந்து, அவனைத் தாக்கியது. அவன், தனது வண்டிக்குத் திரும்பிச் சென்றான். லாரிகள் மீண்டும் நகரத் தொடங்கின. பெண்களும், இரண்டு மைல் தொலைவிற்கு, இராணுவத்திற்கு எதிராகக் கத்திக் கொண்டே துரத்திச் சென்றனர்.

மொரேலியா கிராமப் பெண்களுக்கு இன்று வெற்றி கிடைத்து விட்டது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்ற லாரிகள் அவர்கள் கண்களில் இருந்து மறைந்தவுடன் அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். எல்லோரது முகங்களிலும் புன்னகை, பின்னர் அது வெடிச் சிரிப்பாக மாறியது.

நாளை மீண்டும் இராணுவம் வருகிறதா எனக் கண்காணிக்க வேண்டியிருக்கும். அதற்கு மறுநாளும் கூட அப்படித்தான். பல்வேறு கிராமங்களிலும், பெண்கள் இராணுவத்தைத் தடுக்க இதே வழிமுறையைக் கடைபிடித்தாலும், எல்லா சமயங்களிலும் வெற்றி கிடைத்து விடுவதில்லை என்பதும் மொரேலியா கிராமப் பெண்களுக்குத் தெரியும். இந்தப் போராட்டத்தின் பொழுது, பலரும் இராணுவத்தால் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

''தேசிய விடுதலைக்கான சபாடிஸ்டா படையின் செல்வாக்கில் இருந்து இப்பழங்குடியினரை விடுவிப்பதும், சியாபஸ் பிராந்தியத்தில் மீண்டும் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதும்தான், அப்பழங்குடி இன மக்களுக்கு நான் செய்யப் போகும் நல்ல காரியம்'' என மெக்சிகோ நாட்டு மக்களிடம் கூறி வருகிறார், அதிபர் ஸெடில்லோ. ''அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்கு இறங்கி வரச் செய்து, எங்களது தன்னுரிமையைக் காக்கும் ஆற்றல் கொண்ட தேசிய விடுதலைக்கான சபாடிஸ்டா படைதான், அமைதிக்கான எங்களது ஒரே நம்பிக்கை'' என்கின்றனர், இப்பெண்கள்.

நாங்கள் கிராமத்தை நோக்கி திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது, ''இராணுவம் எங்களைத் தனியாக விட்டுச் சென்றாலே போதும்; எங்களது வாழ்க்கையை நாங்களே பார்த்துக் கொள்வோம்'' என என்னிடம் ரோலிண்டா சொன்னாள். எஸ்பெரன்ஸா, எல்லோருக்கும் முன்னால்; தன் தோழிகளோடு, மிகவும் மகிழ்ச்சியோடு, குதித்தோடிக் கொண்டிருந்தாள்.

மொரேலியா கிராமப் பெண்கள் கூட்டாகச் சேர்ந்து, உணவிற்காகவும், இருப்பிடத்திற்காகவும், குழந்தைகளின் நோயற்ற வாழ்க்கைக்காகவும், சுதந்திரமாகவும், கண்ணியமாகவும் வாழ்வதற்காகவும் தினந்தோறும் போராடுகிறார்கள். அப்போராட்டம், சில நாட்கள், வீட்டையும், வயலையும் பராமரிப்பதாக உள்ளது; ஆனால், சில வேளைகளில், இராணுவத்தை எதிர்த்துத் துரத்தியடிப்பதாக உள்ளது.

# ஏ.வி.டி.யின் அடக்குமுறைச் சுரண்டல் பற்றிய அதிரடி ஆதாரங்கள்

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்திலுள்ள அர்னக்கல் எஸ்டேட்டில் அடக்குமுறைகளுக்கும் சுரண்டலுக்கும் அளவேயில்லை. கடந்த 1-15 ஜூலை இதழில் இதுபற்றி செய்தி வெளியிட்டதற்கு எஸ்டேட் மேலாளரான டி.பி.கிங் சார்பாக நமது இதழுக்கு வக்கீல் நோட்டீசு வந்தது. இந்த ஏ.வி.டி. நிறுவனத்தின் அடக்குமுறை - சுரண்டல் கொடுமைகளைப் பற்றி புதிய ஆதாரங்களுடன் செய்திகள் வருகின்றன. அவற்றில் சில:





ஏ.வி.டி. நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள்: (இடமிருந்து வலமாக) மாரியப்பன், பொன்ராஜ் மற்றும் லிங்கசாமி.

✱ இப்படத்திலுள்ள மாரி யப்பன் என்ற தொழிலாளியைப் பழிவாங்க நிர்வாகம் மாதக்கணக்கில சேற்றில் கால் வாய் வெட்டும் வேலையைத் தந்தது. விளைவு? இன்று இரு கால்களும் பாதிக்கப்பட்டு வேலை செய்ய இயலாமற் போனது. ஐந்து குழந்தைகளுடன் வறுமையில் வாடும் இவர், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப இயலாது, பாதியில் படிப்பை நிறுத்திவிட்டார்.

✱ தான் பறித்த தேயிலைத் கொழுந்துகளை எடை போடும் போது தராசைப் பார்ப்பேன் என பிடிவாதம் பிடித்த பொன்ராஜ், இதற்காக வேலையிலிருந்து நீக்க முடியாது என்பதால் வேறு காரணம் காட்டி வேலை நீக்கம் செய்யப்பட்டவர்.

லிங்கசாமி என்ற தொழிலாளி நிர்வாகத்தின் அடக்குமுறைகளை எதிர்த்துக் கேட்டதால் ஓய்வு பெற நாலாண்டுகள் இருக்கும் போதே வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இவர் கொடுத்த வயது ஆதாரத்தையும் ஏற்க மறுத்தது நிர்வாகம். தனது 8 குழந்தைகளைக் காப்பாற்ற வீட்டிலேயே சிறு பெட்டிக்கடை வைத்ததையும் நிர்வாகம் அகற்றிவிட்டது.

✱ வழக்கமாக எஸ்டேட்டில் ஒரு மாடு வளர்த்தால் 3 ரூ. வசூலிப்பார்கள். ஆனால் இங்கு ரூ. 20 வசூலிக்கின்றனர். ஆனால் சம்பளப்பட்டியலில் மாடு வளர்ப்பதற்கான கட்டணம் வசூலிக்கும் கட்டத்தில் சம்பளப் பிடித்தம் செய்வதற்கு பதில், பிடிப்பு எண் 2 கட்டத்தில் பிடித்தம் செய்துள்ளனர். இது கூடுதலாக வசூலிப்பதை மறைப்பதற்குதான்.

✱ ஜோதி என்ற 60 வயது பெண் தொழிலாளி தனது ரத்தத்தையே வியர்வையாக்கி பாடுபட்டவர். ஓய்வு பெறும் போது பி.எஃப் பணம் வாங்க, வங்கிக் கணக்கு எண் கொடுத்திருந்தார். அந்த நம்பரை வேண்டுமென்றே மாற்றி எழுதி, சுமார் 6 மாதம் அலைய வைத்து, பணம் தந்தது. இவர் பணம் பெற அலைந்ததிலேயே சேமிப்பு பணம் காலியாகி, கைக்கு மிஞ்சியது ரூ. 75.33 பை மட்டுமே.

இவர் கணவர் கதையும் இதுதான். இவர்கள் நிர்வாகத்தை எதிர்த்துப் பேசியதுதான் இதற்குக் காரணம்.

ஆங்கிலேய ஆட்சிக்கால அடக்குமுறைகள் இன்றுவரை எஸ்டேட் தொழிலாளர்கள் மீது தொடர்கின்றன. அவை ஒழிக்கப்படும் காலம் தொலைவிலில்லை.

— புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, வண்டிப் பெரியார்.



www.padippakam.com

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தனியாரின் கையில் குடிநீர் விநியோகம்

தாராளமயம் - தனியார்மயம் என்ற பெயரில், அரசின் பொறுப்புகளைக் கைகழுவி விடுவதில் கர்நாடக மாநிலத்தை ஆண்டு வரும் ஜனதா தள அரசிற்கு முதலிடம் கொடுக்கலாம். இம்மாநிலத்திலுள்ள பெல்காம், ஹூப்ளி, மங்களூர், மைசூர் ஆகிய நான்கு நகரங்களில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்கும் (விற்கும்!) உரிமையை, இங்கிலாந்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றிற்குத் தாரை வார்த்து விட்டது அம்மாநில அரசு. ''சோறு பொங்க வழியில்லாட்டா, தண்ணீரைக் குடிச்சு வயிறை ரொப்பிக்குவோம்'' என்பதையெல்லாம் இனி அந்நகர்களில் வாழும் ஏழை பாழைகள் மறந்துவிட வேண்டியதுதான்!

## பார்ப்பனக் கும்பலின் பிடியில் வரலாற்று ஆராய்ச்சி

இந்திய வரலாற்றை பார்ப்பன மதவெறிக்கு ஆதரவாகத் திருத்தி எழுதும் சதித்தனத்தோடு, இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கவுன்சிலில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவு ஆராய்ச்சியாளர்களை நியமித்துள்ள பாரதீய ஜனதா அரசு, அக்கவுன்சிலின் செயலாளராக இருந்து வந்த வரலாற்று ஆய்வாளர், டி.கே.வி. சுப்பிரமணியத்தையும் அப்பதவியில் இருந்து நீக்கி விட்டது. இவர், உலக அகழ்வாராய்ச்சி கருத்தரங்கில், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியதோடு, அயோத்தியில் இந்து மதவெறிக் கும்பல் நடத்திய அட்டூழியங்களை விவாதிக்க வேண்டும் எனக் கோரியவர். இதனால்தான், இவர் மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, பதவியில் இருந்து தூக்கியெறிந்து விட்டது பாரதீய ஜனதா. எனினும், இப்பதவி நீக்கத்திற்கு தில்லி உயர்நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

## தோட்டாக்கள்தான் நிவாரணமா?

பீகார் மாநிலத்தில் சமீபத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக, நூற்றுக்கும் மேலான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. ரப்ரி தேவி அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்க எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இதனால், பாதிப்படைந்த மக்கள் அரசுக்கு எதிராக ஆகஸ்டு 11-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஏற்கனவே வெள்ளப் பெருக்கால் தங்கள் அற்ப சொற்ப உடமைகளையும் இழந்தவர்கள் என்ற இரக்கம் கூட காட்டாத ரப்ரி தேவி அரசு, முன்னெச்சரிக்கை எதுவுமின்றி, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி ஐந்து பேரைக் கொன்று போட்டது; இத்துப்பாக்கிச் சூட்டில், 15 பேர் படுகாயமடைந்தனர்; 52 பேர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டனர்.

## மேலவளவு கொலைகாரர்களுக்கு தி.மு.க. அரசின் வக்காலத்து

மேலவளவு தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர் முருகேசன் கொலை செய்யப்பட்ட வழக்கில், 28 குற்றவாளிகளுக்கு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய பிணையை ரத்து செய்யக் கோரி, சில வழக்கறிஞர்கள் கொடுத்த மனுவின் மீது மீண்டும் விசாரணை நடத்தியது. சென்னை உயர்நீதி மன்றம். ''குற்றவாளிகள் பிணையின் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறி நடக்கவில்லை'' என நற்சான்றிதழ் வழங்கி, மேல்சாதி வெறியர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்யக் கூடாது என வாதாடியது 'சூத்திர' தி.மு.க. அரசு. 'நீதி' மன்றமும் மேல்சாதி வெறியர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கி, தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது!

**பீகார் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்: என்னே லல்லுவின் சமூக நீதி!**



## யாருக்குச் சுதந்திரம்?

இராசஸ்தான் மாநிலத்திலுள்ள திகிரி கிராமத்தைச் சேர்ந்த மிஷ்ரி தேவி தாழ்த்தப்பட்டவர்; அக்கிராமத்தின் பஞ்சாயத்து தலைவி. 'சுதந்திர' தினத்தன்று, கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள் 'தேசிய'க் கொடி ஏற்றலாம் என்பது அரசியல் சாசனம் அளித்துள்ள உரிமை. ஆனாலும், அந்த உரிமை தாழ்த்தப்பட்டோருக்கு கிடையாது என்பது மேல்சாதி வெறியர்களின் எழுதப்படாத சட்டம். மேல்சாதி வெறியர்களின் சட்டவிரோத மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சாமல், மிஷ்ரி தேவி இந்த 'சுதந்திர' தினத்தன்று கொடியேற்ற முயன்ற பொழுது, சாதி ஆதிக்க கும்பல், அவரை நடுத்தெருவிலேயே நிர்வாணப்படுத்தி துரத்தியடித்து, கொடியேற்ற விடாமல் தடுத்து விட்டனர். இராசஸ்தானை ஆளுவது பாரதீய ஜனதா கட்சி. அதனால்தான் ஆணாதிக்கமும், மேல்சாதித் திமிரும் கொண்ட ஆதிக்க கும்பல், இப்படி வெளிப்படையாகவே கொட்டமடிக்க முடிகிறது.

## காங்கிரசு தொண்டர்களின் கைவரிசை

ஆந்திர மாநிலத்தில், சந்திரபாபு நாயுடு அரசின் ஊழலையும், அவரது உறவினர்களுக்கு வாரி வழங்கப்படும் அரசு சலுகைகளை அம்பலப்படுத்தியும் காங்கிரசு கட்சி, மாநிலத் தலைவர் ராஜசேகர ரெட்டியின் தலைமையில் பாதயாத்திரை நடத்தியது. இப்பாதயாத்திரை மஹபூப் நகர் மாவட்டத்தைக் கடந்து சென்ற பொழுது, பல ஜேப்படி திருடர்களை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட திருடர்களுள் 12 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்; ராஜசேகர ரெட்டியின் பாதுகாப்பிற்காக கட்சியின் தலைவர்களால் அனுப்பி வைக்கப்பட்டவர்களாம். காங்கிரசு, கட்சியா அல்லது கிரிமினல்களின் கூடாரமா?

## அரசுத் துறையைத் தனியார்மயமாக்கு! ஆர்.எஸ்.எஸ்.ஐத் 'தேசிய'மயமாக்கு!!

பா.ஜ.க., தனது பட்ஜெட்டில் அறிவித்தபடி, அரசின் நிதியுதவியோடு இந்துத்துவ கருத்துக்களைப் பரப்புவதற்காக, ''பாரத் புனர் நிர்மாண் வாஹினி'' என்ற இளைஞர் அமைப்பைக் கட்ட முடிவு எடுத்துள்ளது. ''இந்த அமைப்பில் 18-35 வயதுக்குள்ளான இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்; இவர்கள் ஒரு வருடம் கட்டாய சேவையில் ஈடுபட வேண்டும்; மேற்கத்திய கலாச்சாரத் தாக்குதலில் இருந்து தேசத்தை, குறிப்பாக இளைஞர்களைக் காப்பாற்ற, இந்த சேவகர்கள் விவேகானந்தரின் ஆன்மீக தேசியத்தையும், பால கங்காதர திலகரின் சுயராஜ்ஜியத்தையும், பங்கிம் சந்திரரின் தாய் நாட்டுப் பற்றையும் நாடெங்கும் பிரச்சாரம் செய்வார்கள்'' என அறிவித்துள்ளது மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம். இதனை, ஆர்.எஸ்.எஸ்.ஐத் தேசியமயமாக்கும் சதி என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/MS(S) 622 / 98

# இதுதான் இன்றைய இந்தியா



இந்தப் படத்தில் நீங்கள் காணும் இருவரில் ஒருவர் ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு. மற்றொருவர் ''மைக்ரோசாஃப்ட்'' என்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ். ஆந்திராவை அமெரிக்காவாக மாற்றுவதற்கு ஆந்திர முதல்வர் பன்னாட்டு முதலாளிகளை தாஜா செய்யும் வேகம் கண்டு, மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் பொறாமை வந்துவிட்டதாம்! ''முன்பெல்லாம் ஆந்திர அரசாங்கம் தெலுங்கு சினிமா போல் இருந்தது; இப்பொழுது அப்படியில்லை'' என்கிறார் ஒரு முதலாளி. சரி, இப்பொழுது எப்படியாம்? அனைத்திலும் ஹாலிவுட் சினிமாவைப் போன்ற வேகம்! தரம்!!

அரசு அலுவலகங்களில் கோப்புகள் மறைந்து போய், மேசைக்கு மேசை கணிப்பொறி முளைத்து விட்டது. இப்பொழுது, 'முதலாளிகள்', கம்ப்யூட்டர் பட்டனைத் தட்டிவிட்டே, தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடலாம். ஹைதராபாத் நகரென்றால் நமக்கு மதக் கலவரங்கள் தான் நினைவுக்கு வரும். அதை உயர் தொழில்நுட்ப நகரமாக மாற்றி விடுவதற்காக, பன்னாட்டு முதலாளிகளைச் சுற்றிக் கொண்டு திரிகிறார் சந்திரபாபு நாயுடு. இப்படி தாராளமயமாக்கலைப் புத்திசாலித்தனமாக நடைமுறைப்படுத்தும் அவரின் திறமைகளை அள்ளி விட்டு, ஆந்திராவில் மாற்றம் வந்து கொண்டிருப்பதாக ஆரவாரம் செய்கின்றன, பத்திரிகைகள்.

இதோ, ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தில், அம்மாநில விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி. கழுத்தில் சுருக்கு கயிறை மாட்டிக் கொண்டு, இறந்து போனது போல பாவனை செய்து வரும் இவ்விவசாயிகள், தாராளமயமாக்கம் விவசாயிகளின் உயிரைக் குடிக்கும் எமனாக மாறிவிட்டதைதான் இப்படி அம்பலப் படுத்துகிறார்கள். கந்து வட்டிக் கடன் வலையில் சிக்கிக் கொண்டு, மானமிழந்து, பசியும் பட்டினியுமாக வாழ முடியாமல், ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவதுதான் ஆந்திராவில் நடந்து வரும் மாற்றம்! எங்கிருந்தோ வந்து நாட்டிற்குள் நுழைந்துள்ள பன்னாட்டு முதலாளிகளின் இலாபத்திற்கு உத்தரவாதமளிக்கும் சந்திரபாபு நாயுடு, வாழ்வா, சாவா என ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் தனது சொந்த இனத்தைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்க்கை குறித்து அக்கறை காட்டியதில்லை. இந்த ஓரவஞ்சனையை திறமை எனப் பாராட்ட உங்களால் முடியுமா? கடன் பட்டாவது விவசாயம் செய்து, நாட்டு மக்களுக்கு உணவளிக்க வேண்டும் என்ற ஆந்திர விவசாயிகளின் அக்கறை எங்கே? பன்னாட்டு முதலாளிகளுக்கு சேவகம் செய்வதே அரசாங்கத்தின் பணியாக மாற்றிவிட்ட சந்திரபாபு நாயுடுவின் 'திறமை' எங்கே? நாட்டு நலனில் அக்கறை கொண்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவதை கணிப்பொறியில் கணக்கு வைத்துக் கொள்வது தான் சந்திரபாபு நாயுடுவின் வேலை என்றால், அவர் ஆந்திர முதல்வரா? இல்லை, நவீன சித்திர குப்தனா?

அந்நிய மூலதனத்தையும், தொழில்நுட்பத்தையும் இறக்குமதி செய்வதையே பெரும் தொழில் புரட்சியாகக் காட்டும் மாய்மாலம் ஒருபுறம்; அந்த இறக்குமதி சரக்கே அடித்தட்டு மக்களுக்கு விஷமாகி மாறிநிற்கும் உண்மை மறுபுறம். இந்தப் பித்தலாட்டத்திற்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கப் போவது எப்போது?



www.padippakam.com
படிப்பகம்